# பூரணி 2

## integral

படைப்பிலக்கிய ஏடு - காலாண்டு

**கதை**

பெனடிக்ற்பாலன்
முருகபூபதி
சட்டநாதன்
கிருஷன் சந்தர்

**கவிதை**

நுஃமான்
திக்குவல்லை - கமால்
யேசுராசா
சிவம்

**கட்டுரை**

சிவகுமாரன்
பொன்னம்பலம்
மகாலிங்கம்

மு. தளையசிங்கம்
எம். ஏ. ரஹ்மான்
நெல்லை க. பேரன்
சு. வே.

ஐப்பசி - மார்கழி 1972

55 சதம்



ஸ்டார்
நல்வாழ்த்துக்கள்

*Best Wishes to Poorani*

* Wholesale * Retail * General Merchant

**Commission Agents** **Estate Suppliers**

*Dealers in:*

Oilmen goods Rice and Curry Stuffs

# SRI MURUGAN STORES

173, Gasworks Street,

**Colombo - 11**

*T. Phone:* **20380**

பூரணிக்கு நமது வாழ்த்துக்கள்

தரமான சைவ உணவுகள்

சுவையான தின் பண்டங்கள்

சுத்தமான பசும்பால்

**தனிச் சிறப்புப் பெற்ற இடம்**

# "லெட்சுமி விலாஸ்"

113 ஜம்பட்டா வீதி,

**கொழும்பு - 13.** தொலைபேசி: **35061**

# பூரணி

ஐப்பசி — மார்கழி 1972


இணை ஆசிரியர்:

என். கே. மகாலிங்கம்
க. சட்டநாதன்

பூரணியினர்:

மு. நேமிநாதன்
த. தங்கவேல்
இமையவன்
இரா. சிவச்சந்திரன்

முகவரி:

'பூரணி'
35, சப்பாத்து வீதி,
கொழும்பு-13.

சந்தா விபரம்:

ஆண்டுச் சந்தா —

| | |
|---|---|
| தபாற்செலவு உட்பட | ரூபா 2-75 |
| தனிப்பிரதி | சதம் 55 |


## நமது விருப்பம்.

நாம் எதற்கும் உணர்ச்சிவசப்படுபவர்களாகவே இருக்கின்றோம். ஆழமாகச் சிந்திப்பதற்கோ, எழுதுவதற்கோ தயங்குகின்றோம். 'பூரணி' ஆழமான, கனமான விஷயங்களையே ஏற்றுப் பிரசுரிக்க விரும்புகிறது. அத்துடன் 'உங்கள் பக்கம்' என்ற மகுடத்தின் கீழ், தரமான வாசக விமர்சனங்களையும் பிரசுரிக்க விரும்புகிறது. இதில் படைப்பாளிகளும் பங்கு கொள்ளலாம்.

குறிப்பாக, மலையக எழுத்தாளர்களிடமிருந்து நாம் அதிகம் எதிர்பார்க்கின்றோம். அழுத்திக் கொல்லும் சுமையுடன் அன்றாடம் வாழும் மக்கள் கூட்டத்தின் இன்னல்களை அங்கு வாழும் ஒருவர்தான் அழகாகப் பிரதிபலிக்கமுடியும். எனவே, மலையக எழுத்தாளர்களே! உங்கள் பங்கு என்ன? 'பூரணி' கேட்க விழைகிறது.

எழுதப்படுவது அனைத்துமே - அது கட்டுரையாகஇருந்தாலும்கூட - படைப்பாற்றல் (Creative) மிக்கதாயிருக்கவேண்டும். அத்துடன் எழுதுபவனுடைய தனித்துவம் மிளிருவதாயும் இருக்கவேண்டும். அப்படி இல்லாத எழுத்து என்ன எழுத்து? என்று கேட்கத் தோன்றுகிறது.

நல்லதை எழுதுங்கள். நல்ல எழுத்தையே 'பூரணி' விரும்புகிறது.

---

*கதை, கவிதைகளில் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே! கட்டுரைகளின் கருத்திற்கு அதனை ஆக்கியோரே பொறுப்பாளியாவர்.*

# உங்கள் பக்கம்

'பூரணி' முதலிதழ் படித்தேன். கனமதிகம். எவ்வளவு தூரம் வாசகரின் கவனத்தைக் கவருமோ தெரியவில்லை. ஆனல், எழுத்தாளர்களும், தரமான வாசகர்களும் படித்துச் சுவைத்துச் சிந்திக்கப் பல அதிலுள்ளன.

செங்கை ஆழியான்
யாழ்ப்பாணம்.

'பூரணி' கண்டேன். பூரணமாக இல்லை. அரைவேக்காடு. இந்திய சஞ்சிகைகளைப் பின்பற்றுதல். பின்பற்றிய அதே சஞ்சிகைகளைக் காரசாரமாகத் தாக்குதல். சமீபத்திய ஈழத்துச் சஞ்சிகை மரபிது. 'பூரணி'யும் விலக்கன்று

எஸ். எம். ஜே. பைஸ்தீன்,
சிலாபம்.

'பூரணி' - ஈழத்து இலக்கியப் பூங்காவில் ஒரு புதுமை ஏடு. அமைப்பு மாத்திரமல்ல உள்ளடக்கமும் கூட 'கணையாழி' யை நினைவூட்டுகிறது. புதுக்கவிதைகள் யாவும் சிறப்பு வாய்ந்தவை. முருகையனின் கட்டுரை இதழுக்குக் கனமூட்டுகிறது. இதழுக்கே உச்சியில் நிற்பது மு.த.வின் புதிய கல்வித் திட்டம் பற்றிய கட்டுரையாகும். எதிர்காலத்தை முன்நிறுத்தி உலகளாவிய கண்ணோட்டத்தில் அணுகியிருப்பது வரவேற்கத்தக்கது.

'பூரணி' - புதுமை இலக்கிய முயற்சிகளுக்கு ஒரு சிறந்த களமாக அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது.

இனிவரும் இதழ்களில் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் மேலும் சிறப்பை எதிர்பார்க்கிறேன்.

ஈழத்தின் தனித்துவமான இலக்கியத்தை வளர்க்க அயராது முயற்சிப்போம்.

திக்குவல்லை கமால்
திக்குவல்லை.

'பூரணி' படைப்பிலக்கிய ஏட்டினைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஈழத்தில் வெளிவரும் ஏடுகளுக்கெல்லாம் சிகரம் பூரணி.

இ. முருகையனின் கட்டுரை, மகாலிங்கத்தின் கதை - சிறப்பாக இருக்கிறது.

முழுக்க முழுக்க 'பூரணி' ஓர் பூரணத்துவம் பெற்ற ஏடே.

கயல்வண்ணன்,
ஓமந்தை.

(மு. த. வின் புதிய கல்வித்திட்டம் கட்டுரை சார்பாக, காவலூர் இறைமகன் என்பவர் எழுதிய நீண்ட கட்டுரையின் ஒரு பகுதியினைக் கீழே தருகின்றோம். விமர்சனப் பார்வையற்ற, மிகவும் உணர்ச்சிவசப்பட்ட எழுத்து. — ஆசிரியர்)

தமிழர் கட்சிகளைப் பிற்போக்குக் கட்சிகளென்றும், தமிழர்களிடையே சோசலிசம் தெரிந்தவர்கள் அரிது என்றும் தளையசிங்கம் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார். ஆனல், முற்கூறிய இவ்விரு குழுவினருக்கும் சோசலிசம் தெரியாதா? சோசலிசம் என்ற மந்திரத்தை உச்சரித்தபடியே வலதுசாரிகள் நடத்தும் அரசாங்கம்தான் இது என்ற உண்மையைப் பூரணமாக உணர்ந்தவர்கள் இவர்கள்.

''சமமான வாக்குரிமை என்ற சனநாயக சமத்துவம் மட்டும் போதாது, சகலருக்கும் சமமான பொருளாதார உரிமைகளும், வசதிகளும் இருக்கவேண்டும்'' என அவர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளுகிறோம். உங்களைவிட இன்னும் சற்றுப் பரந்த கண்ணோட்டம் உடையவர்கள் நாங்கள். சில விடயங்களை மேலும் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறோம். சமமான அரசியல், மொழி, சமூகம உரிமைகளும் எல்லாருக்கும் இருக்கவேண்டும். இப்படி அமைந்தால்தான் உங்கள் வாக்கியத்திற்கும் சர்வோதயத்திற்கும் நெருங்கிய உறவு ஏற்படமுடியும். உங்களை விட எங்களுக்கும் சர்வோதயத்திற்கும் மிகக் கிட்டிய தூரமே உள்ளது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் கட்டுரையில் உங்கள் மனதின் ஒரே நோக்கான அரசுக்கும், அமைச்சருக்கும் புகழ் பாடுவது என்ற எண்ணத்தை நாம் வெளிப்படையாகக் காணக்கூடியதாகவே இருக்கிறது.

அறிவு பூர்வமாக அணுகவேண்டிய எழுத்துக்களை எழுதுபவர் என்று சிலர் கருதிக்கொண்டிருக்கும் ஒரு தகுதியை இழந்துவிடக்கூடிய முறையில் இதுபோன்ற கட்டுரைகளை எழுதி முன்னைப் பெருமைகளை அழித்துக் கொண்டுவிடாதீர்கள்.

காவலூர் இறைமகன்,
கொழும்பு.

'பூரணி'யின் முதல் இதழைச் சுவைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பூரணியின் நோக்கம் என்னைக் கவர்ந்துவிட்டது. முதல் இதழே நல்ல கனமும் தரமும் மிக்கது. இதே அமைப்பில் தரத்தில் தொடர்ந்து பூரணி வரவேண்டுமென்பதே என் நீங்காத அவா.

நீள்கரை நம்பி,
திக்குவல்லை.

'பூரணி' படித்தேன். அதனைப் புரட்டியதும் அதன் பூரணத்துவம் மனதில் ஒருநிறைவை ஏற்படுத்தியது. கட்டுரை இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்த ஓர் களமாக பூரணி அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. அத்வைதக் கோட்பாடுகளை அறிவியல் ரீதியாக அணுகும் தளையசிங்கத்தின் கட்டுரை சிந்தனையைத் தூண்டுகிறது. முருகையனின் கட்டுரை அறிவுக்கு விருந்து, அருமையான சிந்தனைகள். அறிவு மனத்தின் சுயமான முடிவுகள் இலக்கிய ஆர்வலரின் மனதில் புத்துணர்வை ஊட்டுகிறது.

ப. சிவானந்தசர்மா,
கோப்பாய்.

✿ அஞ்சலி

அண்மையில் காலமான இரு சிறந்த படைப்பாளி களின் நினைவாக, அவர்களுடன் நெருக்கமாகப் பழகிய இருவரது கருத்துக்கள் இங்கே தரப்படுகிறது.

# செ. கதிர்காமநாதன்

க. ச.

நல்ல எழுத்தாளரும், அருமை நண்பருமான செ. கதிர்காமநாதன் அண்மையில் அகால மரணமடைந்து விட்டார். முப்பது வயதுகூட நிரம்ப வில்லை. அதற்குள் இந்தக் கொடுமை நிகழ்ந்துவிட்டிருக்கிறது. எளிமை யான குடும்பத்தில் பிறந்து, இனிய சுபாவங்கள் நிரம்பப்பெற்ற அந்த அருமந்த பிள்ளையின் மரணம் அவ ரது குடும்பத்திற்கு மட்டுமல்ல, ஈழத்து இலக்கிய உலகிற்கும் பேரிழப் பாய் முடிந்துவிட்டிருக்கிறது.

நானும் அவரும் மூன்றுண்டுகள் வரை ஒரேயிடத்தில் ஒன்றுக வேலை பார்த்தவர்கள். அந்த மூன்றுண்டு களும் எவ்வளவு சுவை நிரம்பியவை? கலை இலக்கியம்பற்றிப் பேசிப் பேசி நம்மையே மறந்த நாட்கள் எத்தனை? மூன்றுண்டுகள்தான் ஒன்ருயிருந் தோம் ஆனல் முப்பதாண்டுகள் பழ கிய நட்பின் நெருக்கம் எம்மிடை இருந்தது. இலக்கியம் பற்றி மட்டும் தான் நாம் பேசிக்கொண்டோமா என்ன? தனது சுகதுக்கங்களையும் திறந்த மனதுடன் பகிர்ந்துகொண்ட ஓர் அற்புத ஜீவி அவர். அவர் இன் றில்லை, அதை நினைத்துப்பார்க்க முடி யவில்லை.

அவர் காலமாவதற்குச் சில நாட் களுக்கு முன் 7-8-72'ல் ஒரு கடிதம் எனக்கு எழுதியிருந்தார்.

கடிதத்தில் எனது நலனை விசா ரித்துவிட்டு. 'பூரணி' வெளியீட்டு விழாபற்றியும், விழாவிற்குத் தான் வரமுடியாமல் போய்விட்டமை பற்றி யும் குறிப்பிட்டுவிட்டு, இலக்கிய உலகு பற்றியே அதிகம் எழுதியிருந் தார்.

ஓர் இடத்தில்:

''இன்றைய எழுத்துலகில் திற மைகள் செயற்கையாக மறைக்கப் படுகின்றன. இவற்றை நீங்கள் நல்ல ஒரு ரசிகன், விமர்சகன், எழுத்தா ளன் என்ற முறையில் பயனுள்ள கட் டுரைகள் மூலம் அம்பலத்துக்குக் கொண்டுவரவேண்டும்'' என்று எழுதி யிருந்தர்.

இந்த எழுத்து எதனைக் கோருகி றது? கதிருடன் நன்ருகப் பழகிய எனக்குப் புரிகிறது. மற்றவர்களுக் கும் புரியவேண்டுமென்ற விருப்பு எனக்கு நிரம்ப உண்டு. அவர் இறந் ததும் அவரது சிருஷ்டி ஆற்றல் பற்றி எத்தனை பாராட்டுக்கள்! அவர் உயிருடன் இருக்கும்பொழுது இதனைச் செய்ய நாம் ஏன் தயங்கி னோம்? நல்ல எழுத்தை நல்ல படைப் பாளியை உயிருடன் இருக்கும் பொழுதே மனந் திறந்து பாராட்டும் பண்பினை இனியாவது நாம் வளர்த் துக்கொள்வோமா?

இதுதான் கதிர் விரும்பியதும், செய்ததும்.

அந்த நல்ல படைப்பாளி நம் மிடை இல்லாதது மிகமிகக் கொடுமையானதுதான்!

# மதுரகவி இ .நாகராஜன்

சு. வே.

இலக்கிய வானிலே ஒளி விட்டுச் சிரித்த செழுஞ்சோதி மறைந்துவிட்டது; இலக்கியச் சோலையிலே நறுமணங் கமழ்ந்த வாசமலரொன்று காலச் சூறையில் எற்றுண்டு கருகிவிட்டது. நேற்றுவரை இலக்கியமே தன் மூச்சாய், பேச்சாய், வாழ்க்கையாய் வரித்து, ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றிலே நிலையானதோர் இடத்தைப் பெற்றுவிட்ட இலக்கியப் படைப்பாளி மதுரகவி இ. நாகராசன் இன்றில்லை; அமரனாகிவிட்டனன். அவர் மறைவு சகோதர எழுத்தாளர்களையும் சுவைஞர்களையும் அதிரவைத்தது; ஓ! கவிஞனே, கலைஞனே இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரமும் பாட, அன்று ஒரு காளமேகம் இருந்தான். இன்று நீ இருந்தாய்; பெருமைப்பட்டோம்; நீயும் போய் மறைந்தனையோ? என்று புலம்ப வைத்தது.

மறைந்துவிட்ட அந்தக் கலைஞனைச் சுற்றி நினைவுகள் சுழன்று சுழன்று அஞ்சலி செய்கின்றன. மானசீகமான அந்த அஞ்சலியை வாய்விட்டுக் கூற வார்த்தைகளே இல்லை. அவனுடைய புலமை, திறமை, பெருமை என்பனவற்றைப் பற்றிப் படரும் நினைவுகளை வார்த்தையில் வடித்திட சுவை என்ன ஒன்றிரண்டா? மதுரகவி மழை பொழிந்த அவன் கவிவளத்தைப்பற்றிப் பேசிடவா? சிறுகதை ஆசிரியனாய் நிறை நிலாவிலே ஒளிர்ந்த பாங்கினைப் பேசிடவா? குழந்தைக் கவிஞனாய்ப் பிஞ்சு மனங்களைத் தொட்ட கதையைப் பேசிடவா? நாடகப் புலவனாய் நாவலாசிரியனாய் நின்று அவன் தந்தனவற்றைப் பேசிடவா? வானொலி வித்தகனாய் வாழ்ந்த கதையைப் பேசிடவா? உண்மையிலே இவை எல்லாவற்றிலும் தான் உண்மையான நாகராசன் வாழ்கிறான்.

ஈழத்திலே இலக்கியத்தை, எழுத்தைத் தொழிலாகக் கொண்டு வாழும் நெஞ்சுறுதி படைத்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இந்த நெஞ்சுறுதி நாகராசனுக்கு நிரம்ப உண்டு. காலப்போக்கையும், விலைவாசி உயர்வையும் ஒரு சிறிதும் கருத்திற் கொள்ளாது அரை நூற்றாண்டுகளுக்கு முன் அளித்த அதே சன்மானத்தை வழங்கும் பத்திரிகைகளை நம்பி, தான் வெளிக்கொணர்ந்த புத்தக விற்பனையை நம்பி, எழுத்துத் தொழில் செய்து வாழ உறுதி பூண்ட நாகராசன் உண்மையிலே சாதனா புருஷன்தான். அந்தக் கலங்காத மன உறுதியே நாகராசனின் மூலதனம். அந்த மூலதனம் அவருக்கு வளமான லோகயத வாழ்வை அளித்ததா என்றால், அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத்தான் அது தெரியும்.

கவிஞருக்கு இலக்கியம்தான் மூச்சு. மூச்சு முதிர்ந்து வேர்கொண்டு இலக்கியப் பைத்தியமாக்கிவிட்டது. வீட்டிலே வறுமை இமை விடாமல் நச்சரித்துக்கொண்டிருக்கும்போது கவிஞர் எங்கோ ஒரு கவியரங்கிலே கவிமழை பொழிவார்; கவிதை பிரவாகத்திலே நீந்தி மகிழ்வார். இந்நிலையில் அவரை பைத்தியமென்று கூறாமல் வேறு எப்படிக் கூறுவது. இலக்கிய நண்பர்கள் கூடிச் சர்ச்சையிட ஆரம்பித்தால் தன் பசி தாகங்களையும் மறந்துவிடுவார்; வீட்டின் பசி தாகங்களையும் மறந்துவிடுவார். இந்த நிலையை எண்ணும்போது நிச்சயமாக மதுரகவி நாகராசன் என்றே வாழ்ந்து மறைந்து இன்று சங்க இலக்கியங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கும் சங்கப் புலவர்களின் நேர் வாரிசு; நம் கண்முன்னே வாழ்ந்துகொண்டிருந்த சங்கப் புலவன். நாகராசன் வறுமை கண்டு சோர்ந்ததுமில்லை; கலங்கியதுமில்லை. அவரைப் பொறுத்தவரையில் அவருக்குக் குடும்பம் துன்பக்கடலாய் எந்த நிலையிலும் தோன்றியதில்லை. என்றும் அவருக்குக் குடும்பம் பாற்கடல்தான்.

மேடைகளிலும் ஏடுகளிலும் போதனா ரூபமான பேச்சாலும் எழுத்தாலும் மாத்திரமே முற்போக்குச் சமுதாயத்தை அமைத்துவிட முடியும் என நம்பப்படும் இக்காலத்தில் சாதனையிலும் போதனையிலும் முற்போக்குச் சிந்தனைகளை அனுசரித்து வாழ்ந்து காட்டியவர் மதுரகவி. சாதிகள் இல்லையடி பாப்பா என்று அவர் போதனை செய்தது குறைவு; ஆனால் வாழ்ந்து காட்டினார். வறுமை நச்சரித்த வேளையிலும் கூட, ஏழை எளியவர்க்கு உதவ அவர் மறந்ததில்லை. தொர்ழிலாளிகளின் நண்பர் இவர். அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் இத்தன்மையை நன்கு உணர முடியும்.

இந்த முற்போக்கு வாதிக்கு ஆழ்ந்த அசைக்கமுடியாத கடவுள் பக்தியுண்டு. கோட்டை முனியப்பர்தான் அவர் கண்கண்ட தெய்வம். வேளை கிடைத்த வேளையெல்லாம், மாலை நேரங்களில் அவரை அங்கே காணலாம்.

குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் தவறவே மாட்டார். முனியப்பர் மீது வைத்த மாறாத காதலே அவரது மாளாத் துயர்களுக்கு மாமருந்தாய் அமைந்தது போலும்! முனியப்பர் கோவில் நிர்வாகம், முனியப்பர் சந்நிதியில் அளித்த மதுரகவிப் பட்டமே அவர் பெற்ற விருதுகளில் மேலான விருதுபோலும். இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலே பூம்புகார்க் கவிதைப் போட்டியிலே கிடைத்த விருது புலவனுக்குக் கிடைத்த விருது. முனியப்பர் சந்நிதியிலே கிடைத்த விருது கலைஞனுக்குக் கிடைத்த விருது.

மதுர கவியாரின் மறைவு கண்ணீரைப் பெருக்குகிறது; அவரது நினைவு நெஞ்சை நிறைக்கிறது; அந்த நிறைத்தலினால் அது விம்மி அழுகிறது; அழுகை ஆறி சாந்தி நிலவ; இந்தக் கலைஞனுக்கு நாம் செய்யக் கூடிய நிரந்தரமான அஞ்சலி ஒன்றே ஒன்றுதான். அவர் விட்டுச் சென்ற அத்தனை படைப்புக்களையும் நூலுருப் பெற வழிவகுப்பதே அது.

✻ சிறுகதை

# அந்தப்பிறவிகள்

லெ. முருகபூபதி

தென்னோலையால் வேயப்பட்ட கூரை. செங்கற்கள் பதித்த சுவர். கல்பதித்து சீமெந்து போட்டு மெழுகி நாளடைவில் வெடித்துப் பெயர்ந்து போன தளம். மூலைக்கு மூலை எறும்புப் புற்றுக்கள். கூரையிலே எலிகளுக்குப் பயந்து பயந்து பல்லிகளின் சல்லாபம்.

அச்சிறிய வீட்டின் முன் விறாந்தாவில்—நிலத்தில் கால்கள் இரண்டையும் அகட்டியபடி சுவரோடு சாய்ந்திருக்கிறான் செபஸ்தியான். குவிந்து கிடக்கும் நைலோன் வலையின் ஒரு முனையை வலதுகால் பெருவிரலிடுக்கினுள்இறுக்கிப்பிடித்தபடி மறுமுனையை இடதுகரத்தால் பிடித்துக்கொண்டு வலையின் அறுந்துபோன பகுதிகளை ஊசிக்கோலில் கோர்க்கப்பட்ட நைலோன் நாலினால் பின்னிக்கொண்டிருக்கிறான்.

சூடமீன்களுக்காக வீசப்படும் வலையில் சுறாமீன்கள் குறுக்கிட்டு வலையை அறுத்துக்கொண்டு போவதால் நைலோன் நூலுக்கும் வலைக்கும் அடிக்கடி பின்னல்கள். அந்நைலோன் வலையில் எத்தனையோ இடங்கள் அறுந்துபோயிருந்தன. ஓய்வு கிடைத்த போதெல்லாம் அவ்வறுந்த பகுதிகளை பின்னித்தைத்து விடுவான் செபஸ்தியான். மீண்டும் எப்போதாவது பின்னத்தலைப்படும் போது மேலும் சில பகுதிகள் அல்லது ஏற்கனவே பின்னப்பட்ட பகுதிகள் மீண்டும் அறுந்து அவனுக்குக் காட்சி தரும்.

நைலோன் வலைமீது கோபம் கொள்வதா? அதை அடிக்கடி அறுத்துப் பிய்க்கும் பலம்வாய்ந்த மீன்கள் மீது கோபம் கொள்வதா? அந்த அன்றாட உழைப்பாளியின் மீன்பிடி வலைமட்டுமா இப்படி அறுந்து போயிருக்கிறது? சொந்தம், பந்தம், குடும்பம்... இவைகள்?

"கோப்பை ஓட்டை... கோப்பிய சுறுப்பணத்தில் குடிச்சிட்டுத்தாங்க." சொட்டுச்சொட்டாக ஒழுகும் அடிதேய்ந்த அலுமினியக் கோப்பையில் கோப்பியை ஊற்றிக்கொண்டு வந்து செபஸ்தியானிடம் நீட்டுகிறாள் அவன் மனைவி சிசிலி. கைகளில் பிடித்திருந்த வலையையும், ஊசிக்கோலையும் போட்டுவிட்டு கோப்பையை வாங்கிக்கொள்கிறான் அவன். அவ்வலுமினியக் கோப்பையின் மேல் விளிம்பும் சற்று நெளிந்திருக்கிறது. என்றைக்கோ நடந்த குடும்பச் சண்டையில் அலுமினியக் கோப்பையும் பங்கெடுத்திருக்கலாம். கோப்பை பழசானாலும் தொடர்ந்து உயிர் வாழ்கிறது. ஆனால் புதிதுபுதிதாக வாங்கப்படும் சட்டிபானைகள் கெதியாக செபஸ்தியான் மூலம் தம்வாழ்வை முடித்துக்கொள்கின்றன.

நான்கு மாதங்களுக்கு முன்னர் நடந்த தகராறில் அக்கோப்பையின் விளிம்பு நெளிவடையக் காரணம் சிசிலியின் தலைமண்டைதான். கோப்பைக்கு நெளிவு. சிசிலியின் நெற்றிக்குப் புடைப்பு.

சுற்றாடலில் வசிப்பவர்கள் சிசிலியைப் பற்றியும், செபஸ்தியானின் தம்பி பேதுருவைப்பற்றியும் அடிக்கடி கூறும் அவ்வந்தரங்கங்கள் எத்தனை நாளைக்குத்தான் செபஸ்தியானின் மனதில் அந்தரங்கமாகாவே இருக்கும். அப்படி இருப்பதே அவனுக்கு அந்தரம். கடல் ஆழமாக இருந்தாலும் அந்த ஆழத்திற்கு ஒரு எல்லை இருக்கிறதல்லவா. அங்கே மணலைப்போல் இவனது பொறுமையின் எல்லையில் கோபம், மூர்க்கம் இருந்ததை அறிய நாலு மாதங்களுக்கு முன்னர் அவன் வீட்டில் நடந்த சண்டையே சாட்சி.

கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்வதை பாவம் என்று கூறுவது படிப்பறிவுள்ளவர்கள் மட்டுமா? படிப்பறிவற்ற அப்பாமர சமூகம் கணவனுக்குத் துரோகம் செய்பவளை விட்டு வைப்பதில்லை. அப்படிவிட்டு வைத்தாலும் அவள் கணவனை சும்மா விடுவதில்லை.

''டே... செபஸ்தியான் ஒனக்குத் தெரியாதுடா... நீ நெனைச்சுக்கிட்டு இரிச்சிய ஒன்ட தம்பிய நல்லவன் என்டு.. நான் வேலி ஓரத்தில் நின்டு ஒன்டுக்கிரிச்சக்குள்ள அவனும், இவள் சிசிலியும்... அதையேன் கேக்கிய மாதாவே.. வீட்டுக்குள்ள நடக்கிய கூத்தை யன்னலால பார்த்தன்'' பக்கத்துக் குடிசையில் வசிக்கும் திரேசம்மா அவனிடம் சொன்னவைகள் உண்மையா? அவள் சொல்பவற்றை அவனால் நம்ப முடிகிறதா?

தானும் தன்தம்பியும் ஒற்றுமையாக வாழ்ந்து தொழில் செய்வதைப் பார்த்து பொறுக்கமுடியாமல் மற்றவர்கள் சொல்லும் புரளிகள் என்றே சில காலம் எண்ணி வந்தான். வெளியார் சொல்லும் அவ்வந்தரங்க நாடகத்தைதான் நேருக்கு நேர் நின்று பார்க்கும் வரை அவைகள் பொய்யாக, பித்தலாட்டமாக அவனுக்குப் புரிந்தது.

கோப்பியை குடித்துவிட்டு கோப்பையை கீழே வைக்கிறான் செபஸ்தியான். தலைமுடியை வாருவதற்காக கூரையில் சொருகியிருந்த சீப்பை எடுக்க, தன் கால்விரல்களில் முழுப் பாரத்தையும் தங்கவைத்து கையை உயர்த்தி சீப்பை எடுக்க முயற்சிக்கிறாள் சிசிலி.

அவளது செய்கையை கூர்ந்து கவனித்த செபஸ்தியானின் கண்கள் — அவளது மேலெழும்பும் ரவிக்கையின் விளிம்பின் கீழே ' இடுப்பில் சுற்றியணிந்திருக்கும் கம்பாயச் சேலைக்கு மேலே.., இடையே தெரியும் சற்று ஊதிப்பருத்த வயிறையும் கவனிக்கத் தவறவில்லை.

அருகில் கிடந்த பங்குப்பலகையை எடுத்து அதன்மேல் ஏறிநின்று கூரையில் சொருகியிருந்த எண்ணையுடன் கலந்து அழுக்குப்படிந்திருந்த சீப்பை எடுத்துவிட்டாள் சிசிலி. வாசற்படியில் குந்தி தலைவாரத் தொடங்கி விட்டாள் அவள். காதில் சொருகியிருந்த பீடியை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு தன் அலுவலில் தொடர்ந்து மூழ்கிப் போனான் செபஸ்தியான்.

திருமணம் முடிந்து நான்கு வருடமாகியும் தன் கணவன் மூலம் தான் கருத்தரிக்கவில்லையே என்ற ஏக்கம் கணவனின் தம்பி பேதுருவின் மூலம் தீர்ந்து விட்டது என்ற பெருமிதத்தில்.. கணவனை அலட்சியமாகப் பார்த்தாள். அவள் வயிற்றில் வளரும் ஜீவனுக்கு பேதுருதான் தகப்பன் என்பது அவளுக்கு மட்டுமா தெரியும்!

வம்ச விருத்திக்கு தகுதியற்ற மலடனாக செபஸ்தியான் இருந்தாலும் அதுபற்றி சிந்திக்கும் அவனது மூளை மலடல்லவே!

தன் மனைவி சிசிலியும், தன் தம்பி பேதுருவும் அக்கா, தம்பி என்ற உறவில்; தாய், மகன் என்ற பந்தத்தில் உறவாடிப் பழகுகிறார்கள் என்று நம்பி வாழ்ந்தவனுக்கு நாலு மாதங்களுக்கு முன்னர் நடந்த குடும்பத்தகராறு..., அந்தத் தெருவே அவன் வீட்டு வாசலில் கூடி நின்று வேடிக்கை பார்த்த சம்பவம்... சிசிலியின் ஊதிப்பருத்திருக்கும் வயிற்றைப்பார்க்கும் போதெல்லாம் அவன் நினைவுக்கு வந்து விடுகிறது. மனப் புகைச்சலைக் குறைக்க பீடி துணை செய்கிறதோ!

மூன்று தினங்களுக்கு முன்னர் மடுவுக்குச் சென்று மடுமாதாவை தரிசித்துவிட்டு நடுச் சாமத்தில் வீடு திரும்பிய செபஸ்தியான் இங்கே தன் மனைவி தன் தம்பியுடன் நடந்து கொண்டிருக்கும்... அவனுக்கு புரிகிறது தான் நிச்சயமாக கனவு காணவில்லை என்று. வருடம் முழுவதும் சேர்த்த தொகையுடன் மடுவுக்கு யாத்திரை மேற்கொண்டு மடுமாதாவின் தரிசனம் பெற்றுவரும் அவன் இங்கே தனக்கு இப்படியொரு தரிசனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

பெட்டிப்பலகையால் செய்தகதவைத் தள்ளித்திறந்து கொண்டு அவன் உள்ளே வந்ததைக்கூட அவர்கள் இருவரும் கண்டு கொள்ளவில்லை. அவ்வந்தரங்க உறவின் மயக்கம் செபஸ்தியானின் பிரவேசத்தை மறைத்துவிட்டிருக்கலாம்.

மூலையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த துடுப்பு பேதுருவின் முதுகைப் பதம் பார்த்தது. செபஸ்தியானின் கருங்காலி நிறத்துக்கால், ஒரு ஜீவனை சுமக்கப்போகும் சிசிலியின் வயிற்றை உதைத்தது.

''அடே மசவாது நாயே... ஒனக்கு சோறு போட்டு வளத்ததுக்காடா இப்படிச்செஞ்சிரிச்சிய... நீ. ரோட்டுலே போறவாரவன் சொன்னதையெல்லாம் கேக்காம, நம்பாம ஈந்த எனக்கு நீ குடுக்கிய மறுவாதை இதாடா.. ..........?'' — செபஸ்தியானின் அலறல் அந்நடு இரவில் தொழிலுக்குப் போகப்புறப்படும் மீனவர்களை தடுத்து நிறுத்தியது. அக்கம்பக்கத்துக் குடும்பங்கள் இவன் வீட்டு வாசலில் குழுமியது.

''இப்ப என்ன நடந்திச்சுது... எதுக்கு வீரிடுறீங்க...'' — சிசிலியின் பயம் கலந்த நடுங்கும் குரல்.

''அடியே பறவேசை... கட்டிய புருஷனுக்கு துரோகம் செஞ்சிரிச்சிய ஒன்னை உசிரோட வுட்டு வைச்ச ஆகாதுடீ...'' — மீன் வெட்டும் வெட்டுக்கத்தியுடன் அவளை நெருங்கிய செபஸ்தியானை இழுத்துக்கொண்டு தெருவிற்கு வந்தனர் ஒரு சிலர். என்ன நடந்தது என்ற விடயம் பலருக்குப் புரிந்து விட்டது. அவர்கள் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

''இந்தச் செவலயனுக்கு எத்தனை நாள் சொல்லியிரிச்சியன் அவன் நம்பினத்தானே. இப்ப தொண்டை கிழியக் கத்தியான்.'' — தான் அன்று கூறியவற்றை மீண்டும் செபஸ்தியானிடமும், மற்றவர்களிடமும் எடுத்துச் சொல்லி தனது அவதான, அனுமானங்களை ஊர்ஜிதம் செய்கிறாள் திரேசம்மா.

''அடே... பறயா... போடா ஒனக்கும் எனக்கும் இண்டையோட எல்லாம் ஓடைஞ்சுபோச்சு.. மானம் ரோஷம் ஒனக்கு இரிச்சுமென்டால் என்ட வூட்டு வாசல்படிய நீ மிதிச்சக் கூடாது.'' — எகிறிப்பாய்ந்து வந்து பேதுருவை நிலத்தில் தள்ளி விழுத்தியபடி கத்துகிறான் செபஸ்தி

யாள. குசினியிலிருந்த சட்டிபானை கள் அவனது ஆயுதமாக மாறுகிறது. அடிதேய்ந்த அலுமினியக்கோப்பை சிசிலியின் நெற்றியை ருசி பார்க்கிறது.

வாயில் வந்த தூஷண வார்த்தைகளால் தன் அண்ணனைத் திட்டிய படி வெளியே வந்து தெருவில் நின்று ''செவலயா... ஒன்னை கவனிச்ச வேண்டிய இடத்தில் கவனிச்சியன்டா...'', என்று சொல்லிவிட்டு செல்கிறான் பேதுரு.

சண்டை நடந்து நான்கு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. ஆனால் அவன் அன்று கூறிவிட்டு சென்றபடி இன்னும் செபஸ்தியானைக் கவனிக்க வில்லை. அவன் பாஷையில். அன்று சென்றவன் இன்றுவரை செபஸ்தியான் வீட்டு வாசலுக்கும் வரவில்லை.

கடற்கரையில், மீன்கடையில், கள்ளுத்தவறணையில் தன் அண்ணனை காணும் சந்தர்ப்பங்களில் தன்னைக் காட்டிக் கொள்ள அஞ்சி மறைந்து விடுவான் பேதுரு.

பேதுரு இப்போது ஒரு மீன் முதலாளியிடம் கையாளாக வேலை பார்ப்பதாக கேள்விப்பட்டிருந்தான் செபஸ்தியான். அதுதான் உண்மையும் கூட.

தியேட்டரில் கண்டதாகவும், அறக்குளாமீன் முள்ளு பாதத்தில் குத்தி ஆஸ்பத்திரியில் மருந்து கட்டியதாகவும், முப்பது ரூபாய்க்கு டெரிலின் சேர்ட்வாங்கியிருப்பதாகவும்... தன்தம்பியைப்பற்றி மற்றக் 'கரையான்கள்' வந்து சொல்லும் செய்திகளை செபஸ்தியான் கேட்டுக்கொண்டாலும் அவனைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளச் செபஸ்தியான் முயற்சி எடுப்பதில்லை. தனக்கும் தன் தம்பிக்கும் இடையில் இருந்த சகோதர உறவு நாலு மாதங்களுக்கு முன்னர் நடந்த சண்டையுடன் உடைந்து தகர்ந்துவிட்டது என்ற உணர்வில் அவன் இருந்தான்.

நாளுக்கு நாள் பெரிதாகிவரும் தன் மனைவியின் வயிற்றைப்பார்க்கும் போதெல்லாம் அந்த சம்பவங்கள் அவன் நினைவுக்கு வருகிறது. சம்பவங்கள் பழசாகலாம் ஆனால் அது பற்றிய நினைவுகள் பழசாவதில்லையே!

அணைந்துபோன பீடியை பற்ற வைப்பதற்காக தீப்பெட்டியை எடுத்தவன், அதில் குச்சிகள் இல்லை என்பதை திறந்துபார்த்து அறிந்து வெறுப்புடன் வெளியே வீசுகிறான். இதைக் கண்டுகொண்ட சிசிலி படியை விட்டு எழுந்து குசினியினுள் நுழைந்து கொள்ளிக்கட்டையைக் கொண்டு வந்து கணவனிடம் நீட்டுகிறாள். குறிப்பறிந்து செயலாற்றும் தன் மனைவியை மனதிற்குள் மெச்சிக் கொள்ளும் அவன், அவள் அடுத்த கணமே திடீரென வாசற்படியில் குந்தி ஓங்காளித்து வாந்தி எடுப்பதைப் பார்த்து எரிச்சல்பட்டுக்கொண்டான்.

அவள் அடிக்கடி இம்மாதிரி வாந்தி எடுப்பதும், அவன் கடைக்குப் போய் சோடா வாங்கி வருவதும் அக்கம் பக்கத்து வீடுகளுக்குத் தெரிந்த சங்கதிதான். சொற்ப நேரத்திற்கு முன்னர் அவள் குடித்த கோப்பி வாந்தியாக வெளிவந்தது. வலையையும், ஊசிக்கோலையும் போட்டுவிட்டு வந்து அவளருகில் அமர்ந்துகொண்டான் செபஸ்தியான். வலது கரத்தால் நெற்றியை பிடித்துக் கொண்டு இடக் கரத்தால் அவள் முதுகை மேலிருந்து கீழாக அழுத்தித் தடவித்தடவி விட்டான்.

''ஐயா... செபஸ்தியான் ஐயா.. ஓடியாங்கோ. ஒங்கட தம்பிக்கும், அந்தோனி முதலாளிக்கும் பெரிய சண்டை. முதலாளி பொல்லால் அடிச்சு பேதுருவுக்கு மண்டை ஒடைஞ்சிரிச்சுது...'' — இளைக்க இளைக்க சொல்லிவிட்டு ஓடுகிறான், மீன்கடையில் ஆமை அறுக்கும் பீட்டர். இந்தத் திடீர் செய்தியைக் கேட்டு திடுக்கிட்ட செபஸ்தியான், ''அடே பீட்டர் நில்லுடா நானும் வாரன்... என்ட தம்பிய அடிச்சியத்துக்கு எவனுக்கடா உரிமையிரிச்சுது...?'' — உள்ளே ஓடிவந்து வெட்டுக்கத்தியுடன் வெளியே பாயும் கணவனைத் தடுக்கிறாள் சிசிலி.

''போடி உள்ளுக்கு...'' என்று அவளைத் தள்ளிவிட்டு அவன் ஓடுகிறான்; யாரோ ஒருவனிடம் அடிபடும் தன் தம்பியைக் காப்பாற்ற அவன் ஓடுகிறான்.

திரேசம்மா வேலி ஓரத்தில் நின்று ஆச்சரியத்துடன் தெருவைப் பார்க்கிறாள்.

---

## நம்பிக்கை ................!

[ அ. யேசுராசா ]

வாழ்வு ஒருபெரிய
துயரந் தானேயென,
உறுத்திக் கிடந்ததுதான்.

துயரினில் ஆழச்
சுமையென வாழ்வைச்
சலித்திடத்தானா, வந்துபிறந்தோம்...?

என்மன வானில்,
துயர்நிறை மேகம்
சூழ்ந்து கவிந்தனதான்

இல்லை இல்லை!;
இன்னும் அதனால்,

வாழ்வு ஒருபெரிய
வசீகரமாயே,
நீண்டு தெரிகிறது.......!

✲ சிறுகதை

# ஒருவழிப்பாதை

யோ. பெனடிக்ற்பாலன்

“எப்படி எம். ஜி. யார் நடிப்பு?” ரெங்கன் கேட்டான்.

“ரொப்டா!”

இது அமீன்.

“காதல் காட்சியில் என்னமாதிரி நடிக்கிறான்?”

“சரோஜாதேவியைப் புரட்டி எடுக்கிறான் இல்லியா?”

“அப்பா! அதெண்ணா சோக்!”

“நாளைக்கும் பார்க்கவேணும்!”

“ஒவ்டா! ரொப்பெக்க!” என்றான் புஞ்சிக்கீரா.

அமீனும், ரெங்கனும், புஞ்சிக்கீராவும் நீகலில் ‘திருடாதே’ பார்த்துவிட்டு திருகோணமலை வீதியில் உள்ள ச. தொ. ச. விருந்தையின் மூலையில் உட்கார்ந்து இருந்தனர்.

இரவு பத்து மணியாகிவிட்டது.

வீதியில் ஜன நடமாட்டம் நன்றாகக் குறைந்துவிட்டது. சரியான குளிர்.

மூவரும் உடுத்திருந்த சாறங்களால் போர்த்து மூடிக்கொண்டு ஒருவரை ஒருவர் அணைத்தவாறு ‘பீடி’ அடித்துக்கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு நித்திரை வரமாட்டேன் என்கிறது.

அமீன் பீடிப் புகையில் வட்டம் விட்டவாறு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான்.

மூவரும் மிக நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர். மூவரும் இந்தப் ‘பேமண்ட்’ வாழ்க்கைக்கு வந்து அதிக காலமில்லை ஆறு மாதங்களுக்குள்தான்.

அமீன் கொழும்பு பஸ்ராண்டில் பத்திரிகை விற்கிறான்.

ரெங்கன் சுவீப் டிக்கட். கண்டி ரவுணெல்லாம் அலைவான்.

புஞ்சிகீரா பஸ்ராண்டுகளில் ரொபி விற்கிறான்.

மூவருக்கும் தொழிலில் ஏற்பட்ட சிநேகம்தான்.

அமீன், கண்டியில் உள்ள நசீம் டெயிலரின் ஏழாவது மகன். தகப்பன் இறந்துவிட்டார். அதன்பிறகு வீட்டில் அன்றாட வாழ்வுக்கே பெரும் கஷ்டம். அதனால் தாய் ஆண் பிள்ளைகளை ஏதாவது வேலைக்குப் போய் உழைக்கச் சொல்லிவிட்டார். அமீன் நன்றாகப் படிப்பான். அவனுக்கும் படிக்க விருப்பம். தொடர்ந்தும் படிக்க முடியாததால் ஐந்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டு பேமண்டுக்கு வந்தவன் வீட்டுக்குப் போவதையே மறந்துவிட்டான். வீட்டில் அந்த நெருக்கடிக்குள் தூங்க விருப்பமில்லை. வீட்டுக்கு விரும்பினால் செல்வான். தாய்க்கு கொஞ்சம் காசு கொடுப்பான். மற்றப்படி பேமண்டில் தான்.

ரெங்கன் அந்தோனிமலைத் தேயிலைத்தோட்டத்தில் இருந்து வந்தவன். தானாகவே இரண்டாம் வகுப்புடன் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் நின்று, மலையெல்லாம் அலைந்து திரிந்தவன். அவனைப் பள்ளிக்கூடத்துக்குப் போகும்படி யாரும் வற்புறுத்துவதுமில்லை. தகப்பன் இருக்கக்கூடியதாக தாய் வேறு ஒருவனோடு ஓடிவிட்டதால் அங்கு இருக்கப் பிடிக்காமல் ஓடிவந்துவிட்டான். அவனை இப்போது யாரும் தேடுவதில்லை.

புஞ்சிகீரா சிங்கள விவசாயியின் மகன். புத்தகம் இல்லாமல், உடுத்த நல்ல உடுப்பு இல்லாமல், பட்டினி கிடந்து பாடசாலைக்குப் போக அவன் விரும்பவில்லை. ஏதாவது உழைத்து வயிற்றைக் கழுவ ரவுனுக்கு வந்தவன் திரும்பிப் போவதில்லை. அவனை அக்கறையோடு யாரும் தேடுவதில்லை.

மூவரும் இந்தக் குறுகிய கால 'பேமண்ட் வாழ்க்கையில் பல அனுப வங்களைப் பெற்றுள்ளார்கள். ஆரம் பத்தில் பீடி புகைக்கப் பழகி, சிகரெட் சுருட்டு எல்லாம் புகைத்து அனுப வித்து, ரகசியமாக கஞ்சாவும் அடித் துப் பார்த்துவிட்டார்கள். அதைத் தொடர்ந்து கள்ளும் சாராயமும் கிழமைக்கு இரண்டுமுறையாகுதல் குடிக்காவிட்டால் அவர்களுக்கு விசர் வந்துவிடும்போலிருக்கும். கண்டியில் மட்டுமல்ல, குண்டசாலை, கம்பளை, நாவலப்பிட்டிக்குப் போய்க்கூட படங்கள் பார்க்கத் தவறுவதில்லை. மிகச் சமீபத்தில் 'குதிரை' ரேஸும் போடப் பழகிவிட்டார்கள். அவர்கள் கண் விழித்துப் பார்க்கும்போது வீதி களிலும் சந்துகளிலும் 'குதிரைரேஸ் பேப்பர் வைத்து படித்துக்கொண்டி ருப்பவர்களைத்தான் பார்க்கிறார்கள். இங்கு அவர்களுடைய வாழ்க்கை ருசிக்கத் தொடங்கியிருக்கிறது.

''அமீன் என்னடா யோசனை?'' என்றான் ரெங்கன்.

''ம்''

''என்ன இண்ணைக்கும் சாராயம் குடிக்கணுமா?''

''இல்லேடா!''

''வீட்டைப்பத்தியா?''

''இல்ல. அந்தக் கவலே யாருக்கு இருக்கு. இப்ப பாத்த படத்தில் எம். ஜி. யாரிடை லவ் சீனை நிணைக்கி றேன்!''

''எனக்கும் அதுதாண்டா கண் ணில் இருக்கு'' என்றான் புஞ்சிகிரா.

''எனக்கும் தாண்டா...''உன்னரு கில் நானிருந்தால் இயற்கையெல் லாம் சுழலுவதேன்... என்று காதற் காட்சியில் பாடிய பாட்டைப் பாடி னான் ரெங்கன்.

மூவரும் சற்றுநேரம் மௌனமாக இருந்தனர்.

''டேய் எனக்கிப்ப ஒரு பொம் பிளையைக் கட்டிப் பிடிக்கணும்போல இருக்கு!'' என்றான் அமீன்.

''குளிருக்கு நல்லா இருக்கும். எனக்குந்தாண்டா. ஓடியனில இங்கி லீஸ் படம் அடல்ஸ் ஒன்லி படம் என்னடாது பாத்தம் சுதிப்படமடா!'

''ஆ! புளோ ஹொட் புளோ கோல்ட்!''

''எப்படி அதில்?''

''நைஸ்!''

''எனக்கு அப்படி கிஸ் கொடுக்க வேணுமெண்டு ஆசை!''

''எனக்கு ஆ! கட்டிப் புடிக்கோ ணும்'' என்றான் புஞ்சிக்கிரா.

இந்த குளிருக்கு நல்லம்!''

''கதைச்சென்னடா! பொம்பிளை இல்லேயே!'' என்று கவலைப்பட்டான் புஞ்சிக்கிரா.

ரஜவீதி மூலையில ஒரு கறுப்பி இருக்கிறாளடா, நாம அடிக்கடி காணு வமே. வர்றீங்களா போய்ப் பாப் பம்!'' என்று மௌனத்தைக் கலைத் தான் அமீன்.

'அவளுக்கு காசு குடுக்கணுமே?'

''என்னிடம் ரூ றுப்பீஸ் இருக்கு!'

''அமீனிட்டை!''

''ஒன்லி வண் றுப்பி''

''புஞ்சிகிரா கியதடா!''

''நமக்கிட்ட சத திஸ்பஹ வித் தற!''

''வாங்கடா போவோம். இந்த உலகத்தில் நமக்கு என்ன இருக்கு! நமக்குப் படிக்க வழி கிடைகல்ல; நம் மைப்பத்தி கவலைப்படவும் யாரும் இல்லை'' என்றான் ரெங்கன்.

''ஆமடா!'' என்று கூறிய அவன் திடீரென எழுந்தான்.

''வாங்கடா போவம் இந்த உல கத்தில் அனுபவிக்கறதை அனுபவித்து சாகணும்!''

''அதுதான் சரி'' என்றான் ரெங் கன். ''ஓவ்டா'' என்று கூறிக்கொண்டு எழுந்தான் புஞ்சிக்கிராவும்.

மூவரும் மிக உஷாராகி எழுந்து வீதியில் வந்தனர்.

மூவருக்கும் சேவல் கூவுற பரு வம்தான்.

''ஆரும் பாத்திருவாங்கடா!'', அமீனுக்கு பயம்.

''இந்த ரைம்ல யாரடா நம்மைப் பார்க்கிற?''

''பாத்தா என்ன? யாருக்கு நாம பயப்புடணும்!''

''அதுதான்டா நாம யாருக்குப் பயப்புடணும்!''

மூவரும் தோளில் கைபோட்டுக் கொண்டு ரஜவீதிக்கு வந்து கறுப்பி யைத் தேடினர்.

''எங்க போயிருப்பாள்?'' என்று அவசரமாகக் கேட்டான் அமீன்.

''அவ யாரோடையும் போயி ருப்பா!'' என்றான் ரெங்கன்.

மூவரும் அதில் நின்று யோசித் தனர். வீதியில் வேறு யாரும் இல்லை. சிறைச்சாலைச் சுவரில் 'காவல்காரன்' போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. பக் கத்தில் குடியரசுத் தினப் போஸ்டரும் பெரிதாக இருந்தது.

''எம். ஜி. யாற்றை புடியைப் பார்!'' ரெங்கன் ஒரு விசிலடிச்சான்.

''ஜெயலலிதாயிடை பின் பக்கத் தைப் பாரடா எனக்கு ஏதோ செய் தடா!'' என்றான் அமீன். புஞ்சிக்கிரா சுவருக்குக் கிட்டப் போய் ஜெய லலிதாவின் முகத்தில் ஒரு கிஸ் கொடுத்தான்.

''ஆ''

அமீன் அவளின் பின் பக்கத்தில் கையால் சுரண்டி ஓட்டை செய்துவிட் டான். மூவரும் சிரித்தனர்.

''நெஞ்சைப் பாரடா!''

''ம், என்று நிக்குது'' என்று கூறிய ரெங்கன் அந்த இடத்தில் கைகளை வைத்தான்.

''டேய் வாங்கடா, குயின்ஸ் ஹோட்டல் பக்கமாகப் போய் லேக்கை சுத்தி வருவம். ஆராவது அலைவாள்!''

அமீன் கூறியதும் மற்ற இருவரும் நடக்கத் தொடங்கினர். ஒவ்வொரு

வருடைய கண்களும் பிச்சைக்காரர்கள் கிடக்கும் சந்துகள் எல்லாம் 'சரக்கு' தேடி அலைந்து வந்தன.

மூவரும் மீண்டும் தோளில் கை போட்டுக்கொண்டு பீடியைப் புகைத்துக்கொண்டு குயின்ஸ் ஹோட்டல் சந்தியை நோக்கி நடந்தனர்.

வழியில் உள்ள சினிமாப் போஸ்டர்கள் எல்லாம் பார்த்து தமது அபிப்பிராயங்களை கூறிக்கொண்டு சென்றனர். ரெங்கனுக்கு "அடிமைப் பெண்ணில்" ஒரு பாட்டு ஞாபகத்துக்கு வந்தது.

"ஆயிரம் நிலவே வா!
இதழோரம் இதழ் சேர்த்து
புதுப் பாதைகாண
ஆயிரம் நிலவே வா!"

அமீனும், புஞ்சிகிராவும் ரசித்துவிட்டுக் 'சுதியான பாட்டு'என்று கூறி தங்களுக்குள் முணுமுணுத்தனர். உள்ளுக்குள்ளே ஆசை அதிகரித்துக் கொண்டது.

குயின்ஸ் ஹோட்டலுக்கு முன்னால் மூவரும் தோள்களில் கைகளைப் போட்டு கழுத்தை வளைத்து இறுகி அணைத்தவாறு வந்து நின்று உள்ளே எட்டி எட்டிப் பார்த்தனர்.

அங்கு உள்நாட்டுப் பெரிய மனிதர்கள், அரசியல் வாதிகளின் அந்தரங்க வாழ்க்கையின் சுதிகளைப்பற்றி அங்கு வேலை செய்யும் தொழிலாளி நண்பர்கள் அவர்களுக்குக் கதைகதையாகக் கூறியுள்ளார்கள். மூவரும் தமதுபேச்சுக்களில் அவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டனர்.

"கொடுத்து வைச்சவனுங்க அனுபவிக்கிறுங்க, வாங்க" என்று ரெங்கன் மற்றவர்களை இழுத்தான்.
லேக் பக்கத்தில் நடந்து மாளிகாவக்கு கிட்ட வந்து விட்டனர்.

குயின்ஸ் ஹோட்டலும், லேக்கின் மறு கரையில் உள்ள சுயிஸ் ஹோட்டலும், லேக்கிளப்பும் அப்பால் உயரத்தில் உள்ள சானே றெஸ்ட் ஹவுஸும் மின்சார விளக்குகளால் நிறைந்து இந்த நடுச்சாம வேளையிலும் விழித்திருக்கின்றன. நாட்டின் கௌரவமான பெரிய மனிதர்கள் அங்கு விழித்திருந்து என்ன செய்கின்றுர்களோ?

மாளிகாவக்கு கிட்டவாக லேக் மூலையில் நின்று லேக்கைச் சுற்றியும் மாளிகாவச் சுற்றியும், சந்துகளையும் மூவருடைய கண்களும் வேட்டை நாய்கள் போல முகர்ந்து வந்தன.

"அந்தா ஒருத்தி வாருள்!"

அமீன்தான் கண்டான். மூவரும் மிக அவதானமாக அவளைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டு நின்றனர்.

"இது அப்படியான கேஸ்தான்; இந்த நேரத்தில் ஏன் வருகுது, இல்லையா?" என்றுன் ரெங்கன்.

ஒரு பெண் கட்டைக் கவுண் அணிந்தவாறு லேக் கரை ஓரமாக மாளிகாவை நோக்கி மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்தாள்.

"ஆ! இது கண்டி வீதியெல்லாம் அலைஞ்சிட்டிருக்கிறவதான் நான் கண்டிருக்கிறேன்" என்றுன் புஞ்சிகிரா.

"ஆமா, ஆமா! புஞ்சி நீ போயி கதையைக் குடு. சரியா?" என்றுன் அமீன். புஞ்சிகிரா தைரியமாக விரைவாகச் சென்று அவளருகில் போனுன். அமீனும், ரெங்கனும் பின்னுல் மெதுவாக வந்தனர்.

"எனக்கென்னவோ பிழை செய்கிறதா பயம்மாயிருக்கு!" ரெங்கன் பயந்தவாறு கூறினுன்.

"இந்த பாரு, அந்த ஹொட்டல்களில் பெரிய மனுஷங்க செய்யறதெத்தான் நாங்களும் செய்யிறம் இதிலென்னயிருக்கு?"

ரெங்கனுக்கு அதைக் கேட்டதும் பயம் ஓரளவு குறைந்தது.

அவர்கள் கண்டியன் ஆர்ட் ஒன்றுக்கு கிட்ட வந்துவிட்டனர் புஞ்சிகிரா ஓடிவந்தான்-

"றைட்!"

"என்ன?"

"காசு கேட்கிற ஐஞ்சு ரூபா"

"நம்மிடம் இல்லையே?"

"மூன்று ரூபாதான் இருக்கெண்ணேன் சம்மதிச்சிட்டா!"

"நாங்க மூணு பேரு எண்ணு சொன்னியா?"

"ஆமா"

"இப்ப எங்க போறது?" என்று அவசரப்பட்டான் அமீன். ரெங்கன் மௌனமாக நின்றுன்.

"அந்தா தெரியுது 'ஜாதிகபொல' நடக்கும் இடம் அங்கை. அவள் அங்கை போய் நிற்கிறுள் நம்மை அங்கை வரச் சொன்னு!"

"ஆமா, அங்க இருட்டு யாருமில்ல"

மூவரும் அந்த இருட்டை நோக்கி நடந்தனர்.

'ஒவ்வொருத்தரா வரச்சொன்னு!' என்றுன் புஞ்சிகிரா. புஞ்சிகிரா முதலில் போனுன். அந்த ஆளைத் தெரியாத இருட்டு மூலைக்குள்ளே ஒவ்வொருத்தராக மறைந்தனர்.

எல்லாம் முடிந்தது.

மூவரும் வீதிக்கு வந்தனர். ஒரு பீடியை மூவரும் மாறி மாறிப் புகைத்தனர்.

"எப்படி?" என்று மௌனத்தைக் கலைத்தான் அமீன்.

"சோக்" என்றுன் புஞ்சிகிரா.

"நாளைக்கும் வரச்சொல்லுவமா?", என்று கேட்டான் ரெங்கன்.

"ஓ!"புஞ்சிகிரா ஓடிப்போய்க்கூறிவிட்டுத் திரும்பி வந்தான். மூவரும் புது அனுபவத்தைப் பெற்ற கிளுகிளுப்புடன் நடந்துகொண்டிருந்தார்கள்.

இவர்களைப்போல் எத்தனை பேர்?

இவர்கள் செல்லும் பாதையில் போகலாம்; மீண்டு வர்முடியாது.

இந்நாட்டின் எதிர்கால பிரஜைகளான இவர்களை இந்த வழியில் உருவாக்கிவிட்டவர்கள் யார்?

இவர்களின் பெற்றோர்களின் தவறு?

இவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்கிறுர்களா?

தனி மனிதர்கள் இவர்களைக் கெடுத்து விட்டார்களா? அல்லது, லாபத்தையே தனது பிரதானநோக்கமாகக் கொண்டு, இன்றும் இவர்களைப்போல் பலரை உருவாக்கிக் கொண்டிருக்கும், உருவாகுவதற்கான சீர்குலைவுச் சமுதாய நிலைமைகளை ஏற்படுத்தும் ஓர வஞ்சகமான முதலாளித்துவ சமுதாய அமைப்பா?

ஏதோ பெரிய மனிதர்கள் பெற்றுவிட்ட அனுபவங்களையெல்லாம் தாம் பெற்றுவிட்ட இறுமாப்போடு மூவரும் தங்கள் 'பேமெண்ட்'டை அடைந்து ஒருவரை ஒருவர் அணைத்தவாறு தூங்கத் தொடங்கினுர்கள். அவர்கள் யாரைப்பற்றியும் கவலைப்படவில்லை. அவர்களைப்பற்றிக் கவலைப்பட யார் இருக்கிறுர்கள்?

யாரும் இருக்கிறுர்களா?

✻ சிறுகதை

# குருவியும் அந்தக் கிராமத்துச் சிறுமியும்

க. சட்டநாதன்

பங்குனியின் கடைக்கூறு. வெய்யில் மணலை வறுத்தெடுத்துக் கொண்டிருந்தது. அந்த வெய்யிலையும் பொருட்படுத்தாமல் அவள் — அந்தச் சிறுமி 'சொர்ணம்மகள்' — பெரிய புலம்வெளி முழுவதும் பம்பரமாய்ச் சுழன்று வந்தாள். அவளது தலையில் ஒரு பெரிய நார்க்கடகம். கடகம் நிறைந்துவரும் எரு. அவள் இப்பொழுது செல்லமுத்தாச்சிக்கு எருப் பொறுக்குகின்றாள்.

ஆச்சிக்கு ஆயிரங்கண்டுத்தறை. புகையிலைச் செய்கை. அதற்கு ஆச்சி எரு அது இதென்று அலைவதில்லை. சொர்ணம் மகளே அவளுக்குத் தேவையான எருவைச் சேர்த்துக் கொடுத்துவிடுகின்றாள்.

எருவை 'அம்பாரமாய்'க் குவிந்து கிடக்கும் 'கும்பியில்' கொட்டிவிட்டு "ஆச்சி எணேய்.." என்று ஒரு குரல் கொடுத்தால் போதும், ஆச்சி வடித்த கட்டரிசிக் கஞ்சியில் 'இரண்டவிள்' சோறு போட்டுக்கலக்கி ஊற்றுவாள். அதை 'மண்டி' விட்டு நேரே நாகுக்குஞ்சி வீட்டிற்கு ஓடுவாள். குஞ்சி வயிருறச் சோறு போடுவாள்.

குஞ்சி தனிக்கட்டை. இளமையிலேயே விதவையாகிவிட்டவள். வாழ்க்கையில் பற்றுதலற்ற ஒரு யோகிபோல வாழ்ந்து வந்தாலும், சொர்ணம் மகளில் அவளுக்குப் பற்றுதல், பிரியம்.

அது எதனால்?
சொர்ணம் இவளது இளம் பராயத்துத் தோழி என்பதனாலோ?
இருக்கலாம்.

அந்தத் தோழமை இப்பொழுது அவளது மகள்பால் ஓர் இயல்பான அன்பாகிவிட்டிருக்கிறது.

சொர்ணம்மகளுக்கு நாகுக்குஞ்சி தான் எல்லாம்! "சரசு.. சரசு... என்னடியிது.. தலை ஒரே பிசாணாய்க் கிடக்குது...?" என்று கேட்டபடி அவளைக் குளிப்பாட்டி, தலைவகிடெடுத்து, சடைபோட்டு விடுவதெல்லாம் கூட நாகுக்குஞ்சி தான்! குஞ்சி இல்லாத வாழ்வை அந்தப் பிஞ்சு உள்ளம் கற்பனை பண்ணிப் பார்ப்பதில்லை. அது அவளால் முடியாத ஒன்று.

மதிய உணவை முடித்ததுதான் தாமதம், "கனகுமாமி வரச்சொன்னவ குஞ்சி..." என்று கிளம்பிவிடுவாள்.

ஒருமணி தொடக்கம் மாலை ஆறு மணிவரை மாமிக்கு, 'மேட்டுத்தறையில்' மிளகாய்ப்பழமாய்வாள். பின் கிளாக்கர் பெண்சாதிக்குப் பால் வாங்கச் சாட்டிவரை ஓடவேண்டும். பால் வாங்கி வந்த கையோடு மீண்டும் மாமி வீடுதான் அவளுக்குத் தஞ்சம்.

கனகுமாமி வீட்டில் ஒரு பெரிய கேப்பை மாடு உண்டு. கொம்பன் மாடு. பார்ப்பதற்குப் பயமாயிருக்கும். ஆனால் மாமி பயப்படாமல் பால் கறப்பாள். வாளி வைத்துத்தான் கறப்பாள்.

மிளகாய் தெரியும்பொழுது, மாமி எல்லாருக்கும் தேத்தண்ணி ஊத்திக் கொடுப்பாள். 'பால்த்தண்ணி!' சொர்ணம் மகளுக்கும் தருவாள் தான், வெறுந் தேத்தண்ணி. சீனி கூடப்போடாமல், "கையிலை தொட்டுக்குடியடி—" என்று தருவாள்.

சரசுவுக்கு அந்தக் கேப்பை மாட்டுப்பால் குடிக்கச் சரியான

ஆசை. ஒருசமயம் நாகுக்குஞ்சியைக் கேட்டாள், "குஞ்சி அந்தக் கனகு மாமி வீட்டுக் கேப்பை மாட்டுப்பால் எப்படியிருக்கும்?"

"என்ரை நாச்சியாருக்கு வேணுமே..." என்று உருகிய குஞ்சி அன்றிலிருந்து ஓர் அரைப்போத்தல் வாங்கி, வற்றக்காய்ச்சித்தான் கொஞ்சம் குடித்துவிட்டு இவளுக்கும் தருகின்றாள்.

இவள் மிளகாய் தெரியும் பொழுதெல்லாம் கனகுமாமி, "சரியாய் இருண்டிப் போச்சுது... இங்கை இண்டைக்குப் படு... படடி..." என்று நச்சரிப்பாள். இந்த நச்சரிப்பெல்லாம் ஓர் லாபம் கருதித்தான் என்பது இவளுக்குத் தெரியும்.

காலையில் பாட்டம் பாட்டமாய் மிளகாயில் வந்து விழும் கிளிகளை ஓட்டுவதற்குத் 'தில்லையர் பெண்டிலுக்கு' நாளாந்தம் அளக்கும் இரண்டு ரூபாயை ஒரு வெறுந் தேத்தண்ணியுடன் சரிக்கட்டிவிடலாமே என்ற கணிப்பு மாமிக்கு. மாமியின் கள்ளத்தனத்திற்கெல்லாம் மசிந்து கொடுக்காமல் இவள் மிளகாய் தெரிந்த கையோடு குஞ்சி வீட்டிற்கு ஓடிப்போய்ப் படுத்துக் கொள்கின்றாள்.

நாள் முழுவதும் அடித்துக் கொடுத்த அலுப்பில் இவள் அயர்ந்து தூங்கினாலும் குஞ்சி விடுவதில்லை. "சரசு... சரசு நாச்சியார்.. எழும்பு ...எழும்படி !" என்று நீரூற்றிய சோற்றைப் பிழிந்து, மீன்குழம்புடன் பிசைந்து தருவாள். இவள் பசிதீர உண்பாள்.

இவை அனைத்தும் சொர்ணம் மகள் சரசுவின் வாழ்வில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகள்.

இன்றும், இதோ அவளது நித்திய கருமத்தில் ஒன்று முடிவடையும் நிலை. எருவை ஆச்சி வீட்டில் கொட்டியதும், நாகுக்குஞ்சி வீடு, கனகு மாமி வீடு, கிளாக்கர் பெண்சாதி வீடு, மீண்டும் கனகுமாமி வீடு என்று அவள் அடித்துக் கொடுத்து ஓய வேண்டும்.

ஆலடித்துண்டைக் கடந்து வந்தவள், வெட்டுக்குளப் பக்கம் நடந்தாள். குளத்தின் வடகரையில் ஆலமரம். அதன் விழுதுகள் நீரைத் தழுவிச் சல்லாபித்தபடி கிடந்தன.

எருக்கடகத்தை ஆலின் அடியில் வைத்தவளுக்கு, அந்த ஆலமரத்தின் விழுதுகளில் ஊஞ்சலாட வேண்டும் போலிருந்தது. தளிர் விழுதுகளைப் பற்றித் தொங்கி ஆடிப்பார்த்தாள். அடிவயிற்றில் யாரோ கிச்சுமூட்டுவது போலிருந்தது. கூசிக் கிளுகிளுத்துச் சிரித்தவள், ஊஞ்சலாடுவதை விடுத்துத் தனது சட்டையை உருவி எருக்கடகத்தின் பக்கத்திலே எறிந்துவிட்டு, மெதுவாகக் குளத்தினுள் இறங்கி நீந்தினாள். வெய்யிலின் வெம்மைக்கு அந்தக் குளிப்பு அவளுக்கு இதமாயிருந்தது.

சிறிது நேரம் மீன்குஞ்சுபோல நெளிந்து வளைந்து நீராடியவள், அதிலும் சலிப்புற்றுக் கரையேறித் தனது ஆடைகளை உடுத்திக்கொண்டு, எருக்கடகத்தைத் தலையில் வைத்தபடி, ஆச்சி வீட்டை நோக்கி நடந்தாள்.

தாவாடிப் பள்ளத்துள் இறங்கியவளுக்கு ஆச்சரியம் தாளவில்லை. அவள்முன் இரண்டு வாலாட்டிக் குருவிகள். அவற்றுடன் ஒரு சிறிய குஞ்சு. அது கோழிக்குஞ்சு போன்று — ஆனால் சற்றுச் சிறிய உருவ அமைப்புக் கொண்டிருந்தது. சாம்பலும் வெண்மையும் கலந்த நிறம்.

ஒரு விநாடி அக்குருவிகளையே வைத்த கண்வாங்காமல் பார்த்தவள், அடுத்த விநாடிகளில் அவற்றை நெருங்கினாள். இவளைக்கண்டதும் 'பெற்றதுகள்' பயத்துடன் விர்ரென்று பறந்துபோய் அடுத்த வயல் வரம்பின் எல்லைக் கல்லின் மீதிருந்து அபயக்குரலில் அரற்றின. ஆனால் அந்தப் 'பிஞ்சுக்குருவியலோ' அதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் ஒருகணம் அசையாமல் நின்றது. பின் அங்குமிங்கும் அலமந்து ஓடியது.

மின்வெட்டும் நேரம்தான்! அதற்குள் அது எங்கே மாயமாய் மறைந்துவிட்டது?

ஆச்சரியமுற்று நிமிர்ந்தவள் அதனை, ஒரு சிறுபுதரின் பக்கத்தில் வீழ்ந்து கிடப்பது கண்டு, நெருங்கிச் சென்று கையில் எடுத்துப் பார்த்தாள்.

அசைவில்லை. அது ஜடப்பொருளாய்த் தவமியற்றியது.

"உண்மையில் இது இறந்துவிட்டதோ?" அவளது உள்மனம் பரிதவித்துப் பதைத்தது.

கண்களில் அதனை ஒற்றி, அதன் உடலைத் தடவி ஆசுவாசப்படுத்தியவள், மீண்டும் அதை அந்தப் புதரின் அடியிலேயே கிடத்திவிட்டுச் சற்றுத் தூரத்தே நின்று பார்த்தாள்.

சில விநாடிகளில் அது சிலிர்த்தெழுந்து 'பெரியதுகளை' நோக்கி ஓடியது. அந்த அற்புதத்தில் ஒரு கணம் லயித்தவள், மீண்டும் கைகளைக் கொட்டி ஆரவாரப் பெருங்குரலில் 'கூ... கூ...' என்று கூச்சலிட்டு அதனைத் துரத்தினாள். அது மீண்டும் ஓர் உழவுசாலின் மடிப்பில் மரணித்து விந்தை காட்டியது.

இவள் அமைதியுற்றாள். அது அசைந்து காட்டியது. மீண்டும் இவளது சந்தடி, சலசலப்பு. அது சடமாய் சமைந்து சாலங் காட்டியது.

உயிர்ப்பும் இறப்பும் ஒரே சமயத்தில்! அவளுக்கு அது வேடிக்கையான அனுபவந்தான்.

அந்த அனுபவத்தின் அடியாக இழையும் ஒருவகை உணர்வு அவளை ஆட்கொள்கிறது.

'ஓ'! இத்தினேண்டு குஞ்சு... அது ...அது என்னமாய்த் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயல்கிறது...'

அந்த வியப்பின் மிதப்புடன் கடகத்தைத் தூக்கியபடி நடந்தாள்.

சிறிதுதூரம்தான் நடந்திருப்பாள், அப்பொழுது 'யானைவெடி' வெடித்ததுபோல் 'பட்'டென்று ஓர் ஓசை. 'டக்'கென்று தலையைத் திருப்பியவளுக்குக் கழுத்துச் சுழுக்கிவிடுகிறது.

சரவணை மாஸ்டருடைய மூத்த மகன் துவக்கும் கையுமாக நின்றான். அவனுக்குப் பக்கத்தில், இலுப்பை வளவு விநாசி. அவர்களுக்கு நேரெதிரே அந்த 'வாலாட்டியள்' இரத்த வெள்ளத்தில் — வயல் வரம்பின் எல்

லைக்கல்லடியில் சுருண்டு கிடந்து துடித்தன. அவற்றின் காலடியில் அந்தச் சின்னஞ்சிறிசும் பிணமாய்க் கிடந்தது.

பிணமாகிவிட்ட பெற்றதுகளைத் தூக்கிய மாஸ்டருடைய மகனும், அவனுடன் வந்தவனும், ''மச்சான் ! நல்ல இறைச்சியிருக்கும் போலை... முழுக்கும் அதுவுமா... நல்ல வேட்டை...'' என்று கூறிக்குதூகலித் தபடி நடந்தனர்.

சொர்ணம்மகள் ஓடிப்போய் அந்த அனாதையாகிவிட்ட – பிணமாய்ச் சரிந்து கிடக்கும் – குஞ்சைப் பார்த்தாள். அதிலும் இரத்தக்கறை, அவளுக்குக்கண்ணீர் துளிர்த்து விடுகிறது.

'இது... இது உண்மையில் இறந்து விட்டதோ?' என்ற 'சமுசயத்துடன்' கையிலெடுத்துப்பார்த்து, அதன் மெத்தென்ற மிருதுவான அனிச்சமலர்த்தூவிகளைக் கண்களில் ஒற்றி உதட்டில் வைத்து முத்தமிட்ட பின், நிலத்தில் அதனைக் கிடத்திவிட்டு, தூரத்தில் விலகி நின்று பார்த்தாள்.

சில வினாடிகள் கழிந்து அது அசைவுகாட்டித் தெளிவு பெற்று எழுந்தோடியது.

'இது தானாக... தானாக இரை தேடி... இனி உயிர் வாழமுடியுமா?' அந்தப் பிஞ்சு உள்ளம் முதல் முதலாகச் சிலிர்ப்புற்று விழிப்புக் கொண்டது.

அவளைப்போல அதுவும் இப்பொழுது ஓர் அனாதை. ஒரு ஜீவிதப் பிணைப்பு சடுதியில் விளைந்த விதியால் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

அவளும் அப்படித்தானே ஒரு சந்தர்ப்பத்தில் அனாதையாக்கப்பட்டாள்!

அந்தச் சம்பவம் நடக்கும்பொழுது சொர்ணம்மகளுக்கு விருத்தெரியாப் பருவம். நாலுவயது கூட நிரம்பவில்லை. அது நடந்து இப்பொழுது ஆறேழு வருடங்களாகிவிட்டிருக்கிறது.

நாகுக்குஞ்சிதான் அடிக்கடி 'சொர்ணத்தாள் ஏனெடி உனக் கிந்தப்புத்தி இப்படிப் போச்சுது... நீ போயிட்டை இந்தக் குஞ்சை விட்டிட்டு... ஆனால் அதுபடுகிற பாடு... ஊருக்கு உழைச்சுக் கொடுத்து ஓடாய் போகுதே.'' என்று புலம்புவாள்.

குஞ்சி புலம்பிப் புலம்பிச் சொன்னவைகள் இவளுக்கு மனதில் பதிந்து விட்ட விஷயங்கள். அதை அவள் இப்பொழுது மீண்டும் நினைவு கூர்ந்தாள்.

சொர்ணத்திற்கு அப்பொழுது பதினைந்து அல்லது பதினாறு வயது தான் இருக்கும். பருவத்தின் தலைவாசலில் அவளுக்கும் சண்முகத்திற்கும் அந்த இளமைப் பரிச்சயம் ஏற்பட்டிருக்கக் கூடாது. அந்தப் பரிச்சயம் காதலாக மலர்ந்திருக்கவும் கூடாது. அவர்களது அந்தக் காதல் எவ்வளவு அநர்த்தங்களை ஏற்படுத்திவிட்டது.

'வெள்ளாளப்பெட்டை அந்தச் சாதி கெட்டதோடை ஓடிவிட்டது' என்ற இளக்காரம் – ஊரில் ஒரு கொதிப்பையே ஏற்படுத்தியது.

சண்முகத்தின் குடியினர் – மரம் ஏறும் தொழிலாளிகள் — ஓர் இருபத்தெட்டுக் குடும்பம் அந்தக் கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில், மேட்டுக் குடிவாசிகளான வெள்ளாளக் குடிகளுக்குக் கீழ்புறமாக உள்ள ஊர்ச் சிவன் கோயிலுக்கு வடக்கேயிருந்தனர்.

இந்த இரு குடியிருப்புகளுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்புத்தான் கோயிற்புலமும், குளத்துக்காணியும். குளத்துக்காணி எப்பொழுதும் பச்சைப்பசேலென்றிருக்கும். நெல் அறுவடையானதும் வயல் நிலத்தில் எள்ளு, மிளகாய், கத்தரி, வெள்ளரி, பூசினி என்று ஏதாவது பயிர்பச்சையிருக்கும். தோட்டக் காணிகளில் புகையிலைச் செய்கை நடைபெறும். புகையிலை வெட்டியதும் நிலக்கடலை போடுவார்கள். ஊரின் மேற்குப் பக்கம் முழுவதுமே பனங்கூடல்கள். இந்தப் பனங்காணிகளில் வேலைசெய்யும் குடிமைகள் தான் சண்முகத்தின் குடியினர்.

இந்த பெரிய நிலப்பரப்பின் சரிபாதிக்குமேல் கோயில் மணியகாரர் மணியத்திற்கும், பழைய விதானையார் தருமர், என்ற தர்மலிங்கத்திற்கும் சொந்தம். இருவரும் ஊரின் நாட்டாண்மைக்காரர்கள். சண்முகமும் சொர்ணமும் தலைமறைவானது இந்த இரு நாட்டாண்மைக்கும் ஏதோ தங்கள் பெண்டுபிள்ளைகள் சாதி கெட்டதுகளுடன் சோரம் போனது போன்ற வெக்கறை, வெதும்பல். அவர்கள் தங்கள் அடி ஆட்களுடன் அந்த 'எளியதுகளின்ரை' இருபத்தெட்டுக் குடிசைகளையும் தீக்கிரையாக்கினர். திரண்ட சாதி வெறியர்களின் அராஜகத்தில் சண்முகத்தின் தாயும் தகப்பனும் அடித்துக் கொலை செய்யப்பட்டனர்.

சட்டத்தின் பெயரால் மேட்டுக் குடிவாசிகள் கைது செய்யப்பட்ட போதிலும் பணம், தேர்ந்த வக்கீல் என்ற அனுசரணைகளால் தப்பித்துக் கொண்டார்கள். பழி அத்துடன் தீர்ந்ததா என்ன? அதுதான் இல்லை. சாம்பல்பூத்த தணலாய் அது கனன்று கொண்டேயிருந்தது.

தலைமறைவான சண்முகமும், சொர்ணமும் தலைமறைவாகவே இருந்திருக்கலாம். ஓர் ஏழாண்டு இடைவெளிக்குப் பின் ஊர்ப்பக்கம் தலைகாட்டிய பொழுது, தணலாய்க்கனன்ற நெருப்பு சுவாலை கக்கி எரியத் தொடங்கியது. அவர்களுடன் சொர்ணம்மகளும் வந்திருந்தாள். இவர்கள் ஊர்வந்த செய்தி அறிந்த சாதி வெள்ளாளர் குத்துவாள், கோடரி, சுழல்வாள், துப்பாக்கி சகிதம் குடிசைகளை நோக்கிப் படையெடுத்தனர். அந்த 'எளியதுகளும்' சளைத்தவர்களா என்ன? கையில் அகப்பட்ட ஆயுதங்களுடன் அலைபோல் வந்த பகையைத் தடுத்து வெறியுடன் தாக்கினார்கள்.

''எளியதுகள்... எங்கடை எச்சிலை ஏந்தியளுக்கு... என்னதிமிர் எங்களுக்கு எதிராய்க் கை ஓங்க...'' என்று மிடுக்குடன் கூறிய தருமர் அடுத்த நிமிடங்களில் அடித்துக் கொலை செய்யப்பட்டார். மற்றச் 'சாதிமான்களும்' முறையாகப் பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டார்கள். அந்தக் கலவரத்தில் சொர்ணம்மகள் தனது பெற்றோரை ஒருங்கே இழந்தாள்.

அப்பொழுது அநாதையானவளைத் தூக்கியவள் நாகுக்குஞ்சிதான். அவளது அந்தச் செய்கைக்கு ஊர் ஒன்றும் செய்யமுடியவில்லை. அப்படியொரு நல்ல ஜீவியின் செயலில் தலையிட ஊரிலுள்ள எந்த நாட்டாண்மைக்கும் தைரியம் பிறக்கவில்லை. அந்தச் சாதித் 'தடியர்களின்' தைரியமின்மைக்கு நாகுக்குஞ்சியின் நல்ல தனம் மட்டும்தான காரணமா? இல்லை, இல்லை. இந்த ஏழு வருட இடைவெளி அந்த எளியதுகளிடம் ஏற்படுத்திவிட்ட மாற்றமும் ஒரு வகையில் காரணமாய் அமைந்துவிட்டது.

பல்வகைச் சுரண்டல்களுக்கும், பாதிப்புக்களுக்கும் உட்பட்ட அந்த உழைக்கும் பாட்டாளிகளிடம் 'வாலாட்ட' இவர்கள் பயந்தார்கள். இயல்பாகவே போராட்ட குணம் கொண்ட அந்த சமூகத்தினருக்கு; தங்கள் போர்க்குணத்தை சமூகநலனுக்கு,வர்க்கவிடுதலைக்கு ஒருமுகப்படுத்திப்பயன்படுத்த வேண்டும் என்ற விவகாரமெல்லாம் தெரியாத விஷயங்களாகவே இருந்தன. அந்தப் புதிய விஷயங்களை எல்லாம் அவர்களிடம் பகிர்ந்துகொள்ள அக்குக்கிராமத்தில் எவருமில்லை. அந்தப்புதிய மனிதர்களை, அவர்களது வரவை மிகுந்த நம்பிக்கையுடன் அவர்கள் எதிர் பார்த்து நிற்கிறார்கள்.

பழைய நினைவுகளில் மிதந்தபடி வந்த சரசுவுக்கு, நேராக எருவுடன் ஆச்சி வீட்டுக்குப் போகாமல், நாகுக் குஞ்சியிடம் போகவேண்டும் போலிருந்தது. குஞ்சியின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழவேண்டும் போலிருந்தது.

அந்தச் சின்ன உள்ளத்திற்கு எல்லாமே புரிந்தது. 'இந்த நாகுக் குஞ்சி இல்லை என்றால்?' ஓ! அதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஊருக்கு உழைத்துக் கொடுத்து ஓடாய்ப்போன அந்தச் சின்ன மனசில்கூட ஓர் சிந்தனைத் தெளிவு.

அவளது மனக்கண்முன் கள்ளத்தனம் மிக்க கனகுமாமி, கட்டரிசிக் கஞ்சி செல்லமுத்து, காரியக்கெட்டி கிளாக்கர் பெண்சாதி என்று எல்லாருமே நிழல் போல் தோற்றினர்கள்.

'இரத்தமுறிஞ்சி அட்டையள்...! இரத்தமுறிஞ்சி அட்டையள்...! அவளது அடிமனதின் நினைப்பு. அந்த நினைப்பே அவளுக்குக் கசப்பைத் தருகிறது. கைப்புடன் காறித் துப்பினாள்.

அவள் எருவைக்கொண்டு போய் நாகுக்குஞ்சி வீட்டுத் தோட்டத்தில் தான்கொட்டினாள். இனியும் நாகுக் குஞ்சி வீட்டில் தான் கொட்டுவாள். அவளது மனது அதை 'சங்கற்பம்' செய்துகொள்கிறது.

'ஏன் சும்மா எருப் பொறுக்கி கொடுக்க வேணும்... இனிச் சும்மா எவருக்குமே வேலை செய்ய மாட்டன்.. கனகுமாமிக்கு மிளகாய் பிடுங்கிறதெண்டாலும் இனிக் காசுக்குத்தான் பிடுங்குவன்... பேய்மாதிரி அடிச்சுக் கொடுத்ததெல்லாம் கட்டரிசிக் கஞ்சிக்கும் வெறுந் தேத்தண்ணிக்கும் தானே..? இந்த நாகுக்குஞ்சிக்கு நான் என்ன செய்தேன்...? இதேன் என்னிலை இவ்வளவு அன்பாய் இருக்குது...!'

அவள் குஞ்சியின் மடியில் தலை வைத்துப் படுத்தபடியே நினைவில் ஆழ்ந்து போகின்றாள்.

அப்பொழுதுதான் ஆச்சிவந்து, ''அந்தச் சாதிகெட்ட சதிர்த் தேவடியாள் எங்கை நாகமுத்து...'' என்றாள்.

அதைக் கேட்டதும் சொர்ணம் மகளுக்குக் கோபம் 'சுருக்' கென்று வந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு ஆக்ரோசத்துடன் எழுந்தவள், நாகுக் குஞ்சியைப் பார்த்தாள்! அவளது மனக் கொதிப்பைப் புரிந்து கொண்ட குஞ்சி வெளியே வந்து:

''ஆச்சி ஆப்பிடிப்பேசாதை... உனக்கவள் இனி எருப் பொறுக்க மாட்டாள்''.

''அப்படியே சங்கதி... சின்னச் சிறுக்கிக்கு .. ஆள்படைவேறையே... எல்லாம் நீ கொடுக்கிற தைரியமடி...''

என்று கூறிய ஆச்சி, முற்றத்தில் கிடந்த கடகத்தை எடுத்துக் கொட்டிய எருவை அள்ளத் தொடங்கினாள்.

இவற்றையெல்லாம் உள்ளிருந்தபடி கவனித்த சொர்ணம்மகள் திடீரென வெளியே ஓடிவந்து, '' எருவைத் தொடாதை... நான் குவிச்சு வைக்கப் போறன்... கடகத்தைக் கொண்டுபோ..'' என்று கத்தினாள்.

அவளது தீர்க்கமான குரல் ஒரு கணம் ஆச்சியைத் திகைக்க வைத்தது. ஆச்சரியத்துடன் அந்தச் சிறுமியையே பார்த்தபடி எருவிலிருந்து கடகத்தை எடுத்தவள், அங்கு நிற்பதற்கே சற்று நடுக்கமுற்றவளாய் மெதுவாக வெளியேறினாள்.

குஞ்சிக்குக் கண்களில் நீர் துளிர்த்துவிடுகுறது. '' சரசு... நீ... நீ...... நானில்லாக் காலத்திலையும் பிழைச்சிருவையடி பிழைச்சிருவை...''

அவளுக்குத் தொண்டை கரகரத்தது, அவள் வாஞ்சையுடன் சொர்ணம்மகளை அள்ளி அணைத்து உச்சிமுகர்ந்தாள்.

இப்பொழுதும் சொர்ணம்மகள் முன்போல் கனகுமாமிக்கும், கிளாக்கர் பெண்சாதிக்கும், வேலை செய்கிறாள்தான். ஆனால் ஊதியமில்லாமல் இல்லை. அவளது வேலைக்கேற்ப ஏதோ ஊதியம் பெற்றுத்தான் உழைக்கின்றாள். அவள் இனியும் கட்டரிசிக்கஞ்சிக்கும், வெறுந் தேத்தண்ணிக்கும் வேலை செய்வாளா என்ன?

அவள் எருக்கூடப் 'பொறுக்க'ப் போவதுண்டு அப்பொழுதெல்லாம் அந்தக் குருவிக் குஞ்சையும் பார்க்கவே செய்கின்றாள்.

அது இப்பொழு குஞ்சல்ல - குருவி!

---

நான் எழுதி ஓய்ந்த பிறகு என்னை முழுமையாகப் பயின்றபிறகு கணிக்க வருவது தான் சரியான முயற்சியாகும்; அப்போதும் கூட இரண்டு அபிப்பிராயங்கள் எழுவதற்கு நியாயம் உண்டு. — ஜெயகாந்தன் —

# அணைந்த சுவாலை

கிருஷன் சந்தர். எம். ஏ.
தமிழில் முக்தார்

என்னருமை எஜமானரே!

நான் இப்பொழுதுதான் 'வர்லிசால் எண், 17'ல் பந்துவைக் கொலை செய்துவிட்டுத் திரும்பினேன். தங்கள் மில்லின் - தொழிற்சாலையின் - மூன்றாவது மாடியில் இருக்கும் நிர்வாக அதிகாரியின் அறையில் உட்கார்ந்தவாறு தங்கட்கு இந்த மடல் வரைவதில் முனைந்திருக்கிறேன். இங்கு நிசப்தம் நிலவுகிறது. நிர்வாக அதிகாரியும் இல்லை. காவல் காப்போரைத் தவிர அந்நிய மனிதன் எவனுமில்லை. நான் வீற்றிருந்த இடத்தை விட்டெழுந்து ஜன்னலைத் திறந்து வெளியே பஜாரிலே பார்வை செலுத்துகிறேன். ஆனால் சாலையிலும் எவருமில்லை. தொழிற்சாலை கடைகளும் மூடப்பட்டிருக்கின்றன. நான்கு புறங்களிலும் அமைதி பரவியுள்ளது. 'வர்லிசால் எண். 17'ல் பந்துவின் சடலம் கேட்பாரற்றுக் கிடக்கிறது. என் கைகள் அவன் இரத்தத்திலே தோய்ந்திருக்கின்றன. அவனது சடலமோ வெகு தூரத்தில் இருக்கிறது.

இப்பொழுது பந்துவைக் கொலை செய்வது கடினமாகவும் கஷ்டமாகவும் இருந்தது. இதைப்போன்ற கஷ்டம் சாவந்தைக் கொலை செய்தபோது தோன்றவில்லை. வருங்காலத்தின் இன்னல்களைத் தங்களுக்கு உணர்த்தவே இத்த அஞ்சல் தீட்டுகிறேன். சாவந்தைக் கொலை செய்த சமயம் என் கூட்டத்திலே அறுபது பேர் எனது சகாக்களாக ஒத்துழைத்தனர். அவர்கள் பாட்டாளி மக்கள் வாழும் இடங்களிலும், தொழிற்சாலையின் ஒவ்வொரு இலாகாவிலும் பரப்பப்பட்டிருந்தார்கள். தங்களுக்கு நன்றாக ஞாபகமிருக்கலாம் காந்தியை வெள்ளையர் சிறையிலடைத்த சமயம் தொழிற்சாலையின் பாட்டாளி மக்களும், வேலைநிறுத்தமும் மறியலும் அனுஷ்டித்தனர். அப்பொழுது நீங்கள் அவர்கள்மீது சினங்கொண்டு சீறி விழுந்தீர்கள். அச்சமயம் நீங்கள் காங்கிரஸில் சேர்ந்திருக்கவில்லை. உங்கள் தலையின் மீது 'கதர் குல்லாய்' காட்சியளிக்கவில்லை. நீங்கள் வெறுப்பும் அதிருப்தியும் அடைந்து, பாட்டாளிகளைக் கிளர்ச்சி செய்யத் தூண்டிவிட்டு அவர்களை நடத்திச் செல்வோரின் பட்டியலைத் தயாரிக்குமாறு மொழிய, நான் இரண்டே நாட்களில் பட்டியலைத் தயாரித்துத் தங்களிடம் சமர்ப்பித்தேன். ஆனால் அப்பொழுது ஒன்றுமே கூறாமல் மௌனம் சாதித்தீர்கள். அதற்கு ஆறுமாதங்களுக்குப் பிறகு தானிய வகைகளின் விலையேற்றம் காரணமாக அதிக சம்பளம் கொடுக்குமாறு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததும் நீங்கள் சாவந்தைக் கொலை செய்யுமாறு உத்தரவு அளித்தீர்கள். அவன் பெயர்தான் என் பட்டியல் தலைப்பிலும் எழுதப்பட்டிருந்தது. நீங்கள் பல பணிகளில் ஈடுபட்டு அவகாசமின்றியிருப்பினும் இந்தப் பட்டியலை மறந்துவிடாமல் எங்ஙனம் ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறீர்களோ நானறியேன். அப்பட்டியல் இன்றும் தங்களிடம் இருக்கிறது. ஆனால் அதிலிருந்து பல பெயர்கள் நீக்கப்பட்டுவிட்டன. அதில் சேர்க்கப்பட்டிருந்த சாவந்த், அம்ஜத், கூர்தயால், ரங்காச்சாரி, ரகீபு, டிகாஸ்டா, முதலியோர் இப்போது இவ்வுலகில் இல்லை. அந்தகாரம் சூழ்ந்த இரவிலோ ஒரு வீதியின் திருப்பத்திலோ அல்லது ஒரு குடிசையின் மூலையிலோ, ஒரு கத்தி மின்னும். அது உடனே ஒரு மனிதனின் முதுகில் பாய்ந்துவிடும். தங்கள் பட்டியல் - என் கரங்கள் - தொழிலாளரின் உயிர்கள் - !

சென்ற பதினைந்தாண்டுகளாக நானும் என் கூட்டத்தாரும் தங்கள் பணியைத் திறம்படச் செய்து வருகிறோம்; தங்கள் கட்டளைகளை நிறை

வேற்றியிருக்கிறோம். அதற்கு இந்த ஆறேழு கொலைகள்மட்டும் ஆதாரமன்று. உங்களுக்காகப் பல வேலை நிறுத்தப் போராட்டங்களை வெற்றி பெறுவண்ணம் முறியடித்து இருக்கிறோம். உரிமைக் குரல்களை நசுக்கியிருக்கிறோம். அதன் பயனாகத் தங்கள் செல்வம் வளர, பெருகி இருக்கும் பல புதிய தொழிற்சாலைகள்ஞாபகார்த்தமாகத் தோற்றமளிக்கின்றன நீங்கள் என்னிடம் ஒன்றும் கூறவில்லையெனினும், தொழிற்சாலைக்கு வெளியில் இருக்கும் பஜாரே தங்களுக்குச் சொந்தமென்பதும், மாதுங்காவில் நிறுவியிருக்கும் புதிய அரிசி மில்லுக்கும் தாங்களே பூரண உரிமையாளரென்பதும் எனக்குத் தெரியும். மேலும் அகமதாபாத்திலிருக்கும் 'ஐஷன் வீவிங் மில்'லில் எழுபது சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகள் தங்களுடையதே. கடந்த பதினைந்தாண்டுகளாகத் தொழிற்சாலைக் கணக்கிலே 'நஷ்டம்' என்றே காட்டியிருக்கிறீர்கள். தொழிலாளர்களின் கிளர்ச்சிகளையும், உரிமைக் குரல்களையும் எங்ஙனமேனும் நசுக்கி, அவர்களுக்குச் சலுகைகள் காட்ட மறுத்துவிட்டீர்கள். ஆனால் எவருமறியாதவாறு பல தொழிற்சாலைகளை நிறுவியிருக்கிறீர்கள். மாளிகைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன; அநேக கட்டடங்களைச் சொந்தமாக்கிக்கொண்டீர்கள். அன்பு நிறை முதலாளி அவர்களே! இன்று நீங்கள் ஒரு புதிய மனிதராகத் திகழுகிறீர்சள். நேற்றுத் தொழில் மந்திரி, நீங்கள் தலைமை வகித்த, 'தி கிரேட் மெர்கண்டைல் அசோசியேஷன்' சார்பில் நடந்த கூட்டமொன்றில், சொற்பெருக்காற்றுகையில் தங்களை வெகுவாகப் புகழ்ந்து, தாங்கள் ஆற்றிய பணிகளாலும், இடைவிடாத உழைப்பாலும், விசாலமான அறிவின் காரணமாகவும் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார். மக்கள் அனைவரும் மகிழ்வுற்றுக் கைகளைத் தட்டினார்கள்.

மதிப்பிற்குரிய எஜமானரே! உண்மையிலேயே தொழில் மந்திரியார், உங்களது முன்னேற்றத்துக்காகவும், செல்வப் பெருக்கை உத்தேசித்தும் எத்தனை தொழிலாளர்கள் கொலையுண்டனர்; எத்தனை போராட்டங்கள் முறியடிக்கப்பட்டன என்பவற்றை அறியாரோ? கடந்த பதினைந்து ஆண்டுகளில் கணக்கிலா பசிகள் வெவ்வேறு பொட்டலங்களாகக் கட்டி உங்கள் இரும்புப் பெட்டிகளில் வைத்துப் பூட்டப்பட்ட விஷயம் அவருக்குத் தெரியாதோ? அன்பு மிக்கீர்! நீங்கள் கத்தியை என் கரங்களில் மின்னச் செய்வதுபோல் அவர் நாவிலும் உமது நாவை வைத்துவிட்டீர்களா? உண்மை யாதோ? ஒன்றும் மறைக்காமல் பகருங்கள். திரை எதற்கு?

நான் மாறிவிட்டேன், அல்லது எனது நடத்தையிலோ குணத்திலோ மாறுபாடு தோன்றி வருவதாக நீங்கள் நினைத்தால் அந்த எண்ணத்தை உடனே அகற்றிவிடுங்கள். அருமை எஜமானரே! நான் அதே பழைய அடிமை என்பதை உறுதியுடன் நம்புங்கள். நீங்கள் தாதரிலிருக்கும் சூதாட்ட அறையிலிருந்து போலீசாரிடமிருந்து விடுவித்துக்கொண்டு வந்து புது வாழ்வு அளித்த அதே அடிமைதான் யான். நீங்கள் அப்போது என்னைக் காப்பாற்றாமல் இருந்திருப்பின், அந்தச் செல்வம் கொழித்த கிழவனைக் கொலை செய்த குற்றத்திற்காகப் போலீசார் என்னைக் கைது செய்து, சிறையிலடைத்து இதுவரை தூக்குத் தண்டனை பெறச் செய்திருப்பார்கள். ஆனால் நீங்கள் என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள். நான் அந்த நன்றியை என்றும் மறவேன். நீங்கள் இன்று, 'முப்திலால் சோலை' மாளிகையில் வசிக்கிறீர்கள். நானோ அந்தப் பழைய இருள் நிறைந்த - கர்ற்றோட்டமில்லாத அறையிலே வாழ்கிறேன். உங்களிடம் செல்வம் குவிந்திருப்பதும் உண்மை. நான் இன்றும் அதே சம்பளம் பெறுவதும் பொய்யல்ல. ஆனால் நான் தங்களிடம் முறையாடவில்லை. குறை கூறவில்லை. நான் வயிறாரப் புசிக்கிறேன். என்னால் விலையுயர்ந்த ஆடைகளும் அணியமுடியும். ஆனால் இதர தொழிலாளர்களுக்குப் பயந்து நான் அவ்வாறு செய்ய முடிவதில்லை. நான் தங்களது அனுமதிச் சீட்டுக்களில் திரைப்படம் காணுகிறேன். இரவுகளில் தங்கள் தயவால் மதுவும், யௌவன மங்கையின் உடலும் பெற்று இன்பலோகத்தில் சஞ்சரிக்கின்றேன். சூதாடச் சென்றால் உங்கள் கணக்கில் சூதாடிவிட்டுத் திரும்புகிறேன். சூதாட்டத்தில் வெற்றி பெற்றால் கிடைக்கும் பணம் என்னுடையது; தோல்வி எனின் தொகை உங்கள் கணக்கில் எழுதப்படுகிறது. உங்களுக்கும் எனக்கும் இரத்த பாத்தியமன்றோ? நாம் இருவரும் ஒருவரை ஒருவர் எங்ஙனம் பிரியமுடியும்? இருபது நாட்களாகப் பந்துவின் தலைமையில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நீடிக்கிறது. சற்று முன்புதான் நான் பந்துவைக் கொலை செய்தேன்.

ஆனால் நீண்ட நாட்களாக என் சிந்தனையில் சிறிது சிறிதாகத் தோன்றிய ஒரு பிரச்சனை - அல்ல ஒரு விஷயம் இப்போது வளர்ந்து பலமடைந்துவிட்டிருக்கிறது. அதனைத் தங்களிடம் நான் மொழிந்துவிட விரும்புகிறேன். அது அச்சந்தரும் - திகிலைக் கிளப்பிவிடும் விஷயமாகும். அது பந்துவைக் கொலை செய்ய முடியாமல் தோல்வி கண்டேன் என்பதல்ல-அவன் சொலையுண்டான் - அவன் மனைவி விதவையாகிவிட்டாள் - அவனது குழந்தைகள் அனாதையாகிவிட்டன. அவனது சடலம் 'வர்லிசால் எண்' 17'ல் இருக்கிறது. தாங்கள் விரும்பினால் நேரில் சென்று கண்ணுறவும் முடியும்.

ஆனால் எங்களைத் திடுக்கிடச் செய்யும் விஷயம்யாதெனில், இந்தக் கொலையை நான் தனியாகவே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இப்போது என்னுடன் ஒத்துழைக்கும் தோழன் ஒருவனுமில்லை. அறுபது சகாக்களில் நாட்கள் செல்லச் செல்ல, இருபத்தி இரண்டு பேர் எஞ்சி நின்றனர். அந்தத் தொகை பிறகு பதினைந்தாகவும், பிறகு பத்தாகவும் மாறியது. இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமான சமயத்தில் என்னுடன் ஏழு பேரே இருந்தனர். சில நாட்களுக்குப் பிறகு இருவரே (அஷ்பாக்கும், ராம்தயாலும்) மனந்தளராமல் என்னுடன் உழைத்தார்கள். நான் அவர்களிடம் பந்துவைக் கொலை செய்யும் விஷயத்தை வெளியிட்டதும், அவர்கள் வெளித்தோற்றத்திற்கு அதை ஆமோதித்தனர். ஆனால் மறுநாள் அவர்கள் வரவில்லை. இறுதியில் நான் ஒருவனே இப்பணியில் ஈடுபட நேர்ந்தது. பந்துவும் ஒரு பெரிய முட்டாளாக இருந்தான். நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு தொழிலாளியை நலம் விசாரிக்கத் தனியாகவே மாஹம் சென்றுகொண்டிருந்தான். எனக்கும் சந்தர்ப்பம்

வாய்த்துவிட்டது - அவனால் இனி பாட்டாளி மக்களை உரிமைக் குரல் எழுப்புமாறு ஏவி ஊக்கமளிக்க முடியாது.

இதுவரை நான் கூறியவைகள் அனைத்தும் உண்மை... ஆனால்... இதுவரை தங்கள் தலைவன் சாய்ந்ததும் பாட்டாளி மக்கள் உறுதி குலைய வேலை நிறுத்தப் போராட்டங்களை வாபஸ் பெற்றார்கள். ஆனால் இப்பொழுது அங்ஙனம் நடைபெறாது. என்னருமை எஜமானரே! பந்து இறந்துவிட்டான். ஆனால் ஹர்த்தால் முடிவடையாது; சற்றேனும் சீர்குலையாது. நான் பந்துவைக் கொலை செய்துவிட்டேன். ஆனால் இந்தப் போராட்டத்தை முறியடிப்பதில் என்னால் வெற்றி காண முடியாது. இப்போது நீங்களும் நானும் செய்யும் சூழ்ச்சிகள் பலிக்காது; முயற்சிகளும் பலன் தரா. நான் காரணமின்றி வீணாக அச்சமுறுவதாக நீங்கள் கூறலாம். ஆனால் அங்ஙனம் எண்ணுவது சரியன்று. என் அன்பிற்குரியவரே! நான் தவறான விஷயத்தை என்றும் கூறினதில்லை. இதனை நீங்கள் நன்குணர்வீர்கள். பல ஆண்டுகளாகத் தொழிலாளர்களுள் துரோக மனப்பான்மையை வளரச் செய்து அவர்கள் ஒன்றுபட்டு, ஒத்துழைத்துப் பாடுபடாதவாறு நான் தடுத்திருக்கிறேன். அவர்களைப்பற்றி நான் நன்கு அறிவேன். ஆதலின் தங்களுக்கு, அவர்கள் இந்தப் போராட்டத்தை வாபஸ் பெறமாட்டார்கள் என்பதை முன்னெச்சரிக்கையாக அறிவிக்கிறேன், கடந்த ஏழு நாட்களாக நான் ஒரு நவீன பாட்டாளியின் முகத்தினைக் காணுகிறேன். அந்த உருவான பாட்டாளி அதிகமாகப் பேசுவதில்லை; கோஷங்களை வீணாகக் கிளப்புவதில்லை; அவன் கண்களில் கண்ணீர்த் துளிகளுமில்லை. அவன் மனோரதமும், உறுதியும் எஃகைப் போன்றவை.

நான் பலவீனமாகிவிட்டேன்- என் கண்கள் மங்கிவிட்டன - கொலை உணர்ச்சி என்னைக் கோழையாக்கிவிட்டது - என்று நீங்கள் கூறலாம். ஆனால் அஃது சரியன்று. என்னைத் துரோகம் செய்து எனது சகாக்கள் அவர்களுடன் சோந்து கொண்டார்கள். அதனால் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறும்.

அன்று நான் 'எண் 16'ல் இருக்கும், தோண்டு மேஸ்திரியின் வீட்டில் ஒரு ரூபாயைக் கொடுக்க விரும்பினேன். ஆனால் அவன் சகவாசியான ஸ்வர்ணா அந்நாணயத்தை வீசி எறிந்துவிட்டாள். இரவு முதல் அவர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். தோண்டுவோ, அவன் மனைவியோ, அவர்கள் குழந்தையோ ஒன்றும் சாப்பிடவில்லை என்பது எனக்குத் தெரியும். என்றாலும் அவள் ரூபாயை வீசி எறிந்தாள். கடந்த காலத்தை நோக்கி வீசிவிட்டாள். என் எஜமானரே! இன்று நான் அலட்சியமாக வீசி எறியப்படுகிறேன். ஒரு புதிய தொழிலாளர் சமூகம் உருவாகிறது.

தோண்டுவின் சிறுவன் கையில் பென்சிலை எடுத்து ஒரு காகிதத்தில் ஒரு ஜன்னல் படத்தை வரைந்து கொண்டிருந்தான். நான் அவனை நோக்கி, 'இதென்னவோ?' என வினவ அவன் 'அது ஜன்னல்' என்றான். நான் 'இது ஜன்னல் என்பது சரி, ஆனால் வீடு இல்லையே' எனக் கூற, அவன் மிகவும் அமைதியும் உறுதியும் நிறைந்த குரலிலே, 'வீடும் நிர்மாணிக்கப்பட்டுவிடும்' எனப் பகர்ந்தான்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தொழிலாளர்கள் ஒரு ஜன்னலை மட்டும் சிருஷ்டித்தார்கள். அப்போது அவர்களிடம் வீடொன்றும் இல்லை. ஒரு ஜன்னல் மட்டும் இருந்தது. அவர்கள் அதன்வழியே வருங்காலத்தை நோக்கினார்கள். பதினைந்தாண்டுகளில் படிப்படியாக முன்னேறி, பல தியாகங்கள் செய்து பலம் பொருந்திய சின்னஞ்சிறு வீடொன்று நிர்மாணித்து விட்டார்கள். ஒருபுதிய சமூகம் உருவாகிவிட்டது. ஒருதொழிலாளர் கழகம் தோன்றிவிட்டது. இப்போது அவர்கள் தங்கள் கோட்டையினுள் உட்கார்ந்திருக்கிறார்கள். வாயிற்கதவுகளும், ஜன்னல்களும் மூடப்பட்டுள்ளன, இந்தப் போராட்டத்தை என்னால் முறியடிக்கவே முடியாது. 1944-ல் வேலைநிறுத்தத்தின் போது நான் தங்களிடம் கொடுத்த பட்டியல் சுருக்கமானது. ஆனால் அவ்வித பட்டியலொன்றை இன்று தயாரித்தால் அது என்றும் முடிவு பெறாது. ஒவ்வொரு பெயரையும் அழித்து வரும் பணியில் ஈடுபட்டால் என் கைகள் சோர்வடைந்துவிடும். ஆனால் தொழிலாளர்கள் மனம் தளரமாட்டார்கள்.

உங்கள் செல்வம் பெருகிவிட்டதும் உண்மையாகும். ஆனால் தொழிலாளர்களின் தொகையும் அதிகரித்துவிட்டது. முன்பு உங்கள் செல்வம் வல்லமையும் பலமும் பெற்றுத் திகழ்ந்தது. ஆனால் இன்று தொழிலாளர்கள் வலிமை மிகுந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். நீங்கள் ஒவ்வொரு புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கும்போதெல்லாம் பாங்கியில் ஒரு புதிய கணக்கும் ஆரம்பமாகின்றது. அத்துடன் தொழிலாளர்களின் தொகையும் ஆயிரக்கணக்கில் அதிகரித்தது. இது ஒரு விநோதமான யுத்தமாகும். நீங்கள் ஒரு கையினால் தொழிலாளர்களைக் கொன்று குவிக்கிறீர்கள். ஆனால் மற்றொரு கை ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைச் சிருஷ்டித்து விடுகிறது. உயர்திரு முதலாளியே! உங்கள் வீழ்ச்சிக்கு நீங்களே காரணஸ்தரன்றோ?

இப்போது என்னால் ஒன்றும் சாதிக்க முடியாது என்பதை நான் நன்கு புரிந்துகொண்டேன். நீங்கள் சமரசம் பேசத் தொழிலாளர் தூதுகோஷ்டியொன்றை அழைத்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த முனைந்தீர்கள். அதில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. உங்கள் சார்பில் நிர்வாக அதிகாரியும், உங்கள் குமாரரும் உரையாடல் நடத்தினார்கள். அன்று நான் எல்லாவற்றையும் இதே அறையில் இருந்தவாறு கவனித்தேன்; சமரசம் ஏற்பட வழியில்லை என்பதை அறிந்தேன். உங்கள் சார்பில் பேசிய மனிதர்கள் ஏதோ ஒரு நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் போல ஒரு வேறுவித மொழியில் பேசினார்கள். தொழிலாளர் தூதுகோஷ்டியினர் மற்றொரு நூற்றாண்டில் இருப்பவர்கள்போல வேறொரு பாஷையில் பேசினார்கள். அன்பரீர்! நீங்களும் நானும்-அந்தத் தொழிலாளர்களும் வெவ்வேறு காலங்களில், ஏதும் தொடர்பின்றி வாழ்ந்திருக்கிறோம். இரண்டு வெவ்வேறு வித மொழிகள் பேசுபவர்களாக இருக்கிறோம். அவர்கள் பாஷை எங்களுக்குப் புரியவில்லை. எங்கள் மொழியை அவர்கள் அறியார்கள். உங்கள் பிரதிநிதிகளும், அவர்கள்

'நம்பிக்கை நட்சத்திரம்' சிறுகதைத் தொகுதியில் இருந்து நன்றியுடன் எடுத்துத்தரப்படுகிறது.

தூதுகோஷ்டியினரும் தனித்தனியே உட்கார்ந்திருந்தனர். இருவருக்குமிடையே ஒரு மேஜை இருந்தது. மரணத்திற்கும் வாழ்வுக்குமிடையே ஒரு கத்தி மின்னுவதுபோல-!

அவர்களுக்கு ஏதும் கூறுவதும் எடுத்துரைப்பதும் பலன் தராது என்பதை நான் உணர்ந்தேன். அன்று நான் மிகவும் சோர்வடைந்து ஆயாசம் கொண்டேன். நான் வாழ்நாட்களில் கொலைகள் மட்டும் செய்திருக்கிறேன். எங்கும் காதல் கீதம் இசைக்கவில்லை என்பது தங்களுக்குத் தெரியும். நான் விவாகம் செய்துகொண்டு வாழ்வைச் சிறப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் என்றுமே கொள்ளவில்லை. உங்கள் பிரதிநிதிகளுக்கு எதிரில் அஞ்சாமல், தொழிலாளர்கள் தீரமாக, கர்வங் கலந்த நடயிலே மூர்க்கத்தனமாக உரையாடும் காட்சியைக் கண்ணுற்று நான் மனமகிழ்ந்தேன். என் வாழ்வு வேறு பாதையில் அமைந்திருந்தால் - எனக்கென்று ஒரு வீடு-ஆறுதல் கூறி மனதைத் தேற்ற ஒரு மனிதப் பிறவி இருந்தால்- என்ற எண்ணங்கள் தோன்றி என்னைச் சஞ்சலப்படுத்தின - எங்கேனும் நான் மனிதர்களுள் அன்பையும் உறவையும் உண்டாக்கி அதனைப் பயன்படுத்தும் சக்தியுள்ள 'ஒரு வார்த்தை' அறிந்து கொண்டால்- 'காதலை'க் கண்டு வியப்போடு, 'இது உங்கள் முத்தமா' என்று வினவும் 'அழகு' கிடைத்து விட்டால்—...

இந்த ஆசைகள் என் சிந்தனையில் ஒரு விநாடிக்காகத் துளிர் விட்டன. ஆனால் நான் மனந்தளராமல், ஜேப்பில் கையை விட்டு, கத்தியின் முனையை விரல்களால் தடவினேன்.

திடீரெனச் சாலையில் மக்கள் நடமாடும் சத்தம் கேட்கிறது.

நான் ஜன்னல் வழியே வெளியே பார்வையைச் செலுத்துகிறேன்.

தொழிலாளர்களுடன் ஊர்வலம் வந்துகொண்டிருக்கிறது. தொழிற்சாலை உங்களுடையது. பஜார் உங்களுக்குச் சொந்தமானது. ஆனால் அதன் வழியே பாட்டாளிகளின் ஊர்வலம் பவனி வருகிறது. அவர்கள் அமைதியுடன் ஆரவாரம் செய்யாமல், கோஷங்களைக் கிளப்பாமல் வருகிறார்கள். முன்னணியில் இருப்போர் ஒரு சடலத்தைத் தாங்கிக்கொண்டு வருகிறார்கள். இன்று அவர்கள் அழவில்லை. அவர்கள் கண்களில் ஒரு துளி கண்ணீரும் இல்லை. அவர்களில் சிலர் என்னைக் கண்ணுற்றுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒருவருடைய கண்களிலும் ஆவேசச் சுவாலை காணப்படுவதில்லை. ஒரு கோஷமோ, எதிரொலியோ கிளம்பவில்லை. அவர்கள் அணி வகுத்தவாறு அமைதியுடன் வருகிறார்கள். அவர்கள் நடையிலிருந்து அவர்கள் இங்கேதான் வரப்போகிறார்கள் என்று தெரிகிறது- இங்கு பந்துவின் சடலம் வந்துகொண்டிருக்கிறது.

நான் உட்புறமாக நிர்வாக அதிகாரியின் அறையைத் தாழிட்டுக் கொண்டிருக்கிறேன். ஜன்னல்களும் உட்புறமாக மூடப்பட்டுவிட்டன.

மேஜையிலிருந்து கைத்துப்பாக்கியும் எடுத்துக்கொண்டேன். ஆனால் எனது இருதயம் வேகமாக அடித்துக் கொள்கிறது. அவர்கள் நடந்துவரும் ஓசை தெளிவாகக் கேட்கிறது.

அன்புள்ள எஜமானரே! இவர்கள் ஏன் அழவில்லை? கூக்குரல்களைக் கிளப்பி ஏன் முறையிடவில்லை? ஏன் புரட்சிக் கோஷங்களை எழுப்பவில்லை? அமைதியுடன் முன் நோக்கி வருகிறார்களே, ஏன்- என் மனக் கண்கள் முன்பு ஒரு கடுமையான புயல் வீசும் காட்சி தோன்றுகிறது.

இது - ஒரு நவீன பாட்டாளிக் குழு!

உயர்திரு முதலாளியே! நேற்று வரை உலகம் ஒரு புண்ணாக இருந்தது. அதனுள் கையை விட்டுத் தமது பிடியிலே வேண்டுமளவு இரத்தம் எடுத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் இன்று அங்ஙனம் செய்யமுடியாது.

நாம் இன்றுவரை வாழ்ந்தோம்; சிறப்புடன் வாசஞ் செய்தோம்; இன்று மரணம் சமீபித்துவிட்டது. இன்று நாங்கள் மறுமொழி பகராமல் இறந்துவிடவேண்டியதுதான். வாய் திறவாமல், வாழ்வின் வருங்காலத்தை இந்தப் பாட்டாளி மக்களிடம் ஒப்படைத்து விடுவதே நலம். இன்றேல் புதிய கட்டடங்களை நிர்மாணிக்க, பாழடைந்த வீடுகளைத் தகர்த்தெறிவதுபோல வேரோடு பிடுங்கி எறியப்படுவோம்.

எஜமானரே அவர்கள் வந்து விட்டார்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்!

அவர்கள் என்னை அணுகிவிட்டார்கள்!

என்னைக்காப்பாற்றுங்கள், என் எஜமானரே!!

அவர்கள் கதவினருகில் வந்து விட்டார்கள்!!!

---

அவன் விரல்கள் ஜாலம் நிறைந்த விரல்கள். விரலுக்கு விரல் தனித்தனி உயிர்கொண்டு, வாய் வார்த்தையினும் அர்த்தம் நிறைந்த விரல்கள். மிருதுவாய் நீண்டு நுனி சிறுத்து, நயமும் நுட்பமும் நலுங்கும் விரல்கள். அவள் கைமேல் வளைந்து சுருண்டு பதுங்கிக் கொஞ்சி நெகிழ்த்தி வளையலை வெகுலாகவமாய்ச் செலுத்தின.

வளையல்காரன் — லா. சா. ரா.

---

# 'பூரணி வெளியீட்டுவிழா'

-நெல்லை க. பேரன்-

ஈழத்து இலக்கிய உலகம் பெருமைப்படத்தக்க வகையில 'பூரணி' என்ற காலாண்டு இலக்கிய ஏடு வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டு விழா கடந்த 22-7-72-ல் கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் கலாநிதி கா. சிவத்தம்பியின் தலைமையில் நடைபெற்றது.

'பூரணி'யின் இணை ஆசிரியர்களுள் ஒருவரான திரு. என். கே. மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துகையில் கலை,இலக்கிய,விஞ்ஞானத்துறை விடயங்களை பூரணத்துவமாக தரவேண்டும் என்ற அடிப்படையிலேயே 'பூரணி' என்ற பெயரை இச்சஞ்சிகைக்கு வைத்தோம். எங்கள் நோக்கம் உலகளாவியது. உலக சிந்தனையை மாற்றக்கூடிய யாவும் இலக்கியமே என்ருர். இதைத் தொடர்ந்து கலாநிதி சிவத்தம்பி தலைமையுரையையும் வெளியீட்டுரையையும் ஒன்ருகவே நிகழ்த்தினர். தலை சிறந்த இலக்கிய விமர்சகரான இவர் பேசுகையில், "இலங்கையின் புதிய இலக்கியச் சூழ்நிலைக்குப் பூரணியும் வித்தாகின்றது. இத்தகைய முயற்சிகளின் தன்மையும் எதிர்காலமும் என்ன? இலங்கையில் கடந்த ஒருவருட காலமாக இலக்கிய உலகில் இறக்குமதிப் பதிலீட்டுத் தொழிற்பாடு நடந்து வருகிறது. வெளிநாட்டுச் சஞ்சிகைகள் கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் வாசகர்களின் தேவைக்காகப் பிரசுரகர்த்தர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் தோன்றுவது சகஜமாக இருக்கிறது. இத்தோற்றம் வளரக்கூடிய இலக்கிய ஆக்கங்களைப் பாதிக்கக்கூடியனவவாக அமையலாம். தென்னிந்தியச் சஞ்சிகைகள் வரும்வரையில் நம்நாட்டுச் சஞ்சிகைகள் இலக்கியப்பணியை உயர்ந்த மட்டத்தில் வைத்து ஆக்கி வந்தன. தரத்தை நிர்ணயிப்பதிலும் வாசகர் தொகையைப் பெருக்குவதிலும் உள்ள முரண்பாடே ஈழத்துத் தமிழ் இலக்கியச் சஞ்சிகைகளின் வரலாருகும். இங்கு இலக்கியகாரர்களே வியாபார ரீதியில் நடத்தக்கூடிய நிறுவன அமைப்புகளும் இல்லை. எமது சஞ்சிகைகள் வாசகர் மத்தியிலே எந்தளவிற்கு நுழைகின்றன? பூரணமாகத் திருப்தியடையாத இலக்கிய அறிவுப் பசிகொண்ட வாசகர் கூட்டம் ஒன்றுக்குத் திருப்தி தரத்தக்கதாக 'பூரணி' வளரவேண்டும்" என்று கூறி பூரணியின் முதற் பிரதியை விற்பனை செய்யும் பணியைத் தொடக்கி வைத்தார். கலாநிதி சிவத்தம்பியிடமிருந்து நெல்லை க. பேரன் பூரணியின் முதலாவது பிரதியைப் பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து பூரணி பற்றிய ஆய்வுரைகள் இடம் பெற்றன.

ஆய்வுரையை ஆரம்பித்து வைத்து மு. வாமதேவன் பேசுகையில், "இது இறக்குமதிப் பதிலீட்டுக் காலம் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. 1958-ன் பின்னர் வெளிவந்த சுயமொழி மாணவர்கள் புதிய பார்வையுடனும் புதிய உத்வேகத்துடனும் உலகை நோக்குகிருர்கள். இவர்களுடைய அறிவுப் பசிக்குத் தேவையான உணவு இன்னும் வழங்கப்படவில்லை. இன்று முதலாளித்துவ பொருளாதார அமைப்பிலிருந்து விலகி புதிய சோஷலிச சமுதாயம் மலரும் காலகட்டத்தைத்தான் நாம் பார்க்கிருேம். சோஷலிச அமைப்புக்குச் செல்லும் பாதை ஒரு தத்துவ அடுப்படையில்தான் அமையவேண்டும். பூரணியில் வெளியான 'மலைநாட்டின் இலக்கியச் சிந்தனைகள்' பற்றிய கட்டுரை முழுமையாக மலையக இலக்கியத் தேவைகளைப் பிரதிபலிக்கவில்லை. இ. முருகையனின் 'தேமதுரமும் மாமதுரமும்' என்ற கட்டுரை மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. மாக்சியக் கருத்து ஒருபோதும் இதுதான் திட்டவட்டமான முடிவு என்று கூறியது கிடையாது. சர்வோதய சோஷலிசத்தைக் கட்டி வளர்ப்பதற்கு இப்பத்திரிகை முயலுமோ என்ற சந்தேகத்துடன் எனது ஆய்வுரையை முடிக்கின்றேன்"

என்று கூறி அமர்ந்தார். அடுத்து எஸ். பொன்னுத்துரை பேசுகையில், 'சுவைஞர்களை நாம் நீண்டகாலமாக ஏமாற்றிவிட்டோம். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பகீரதன், பாஸ்கரன் ஆகியோர் இந்த மண்டபத்தில் இருந்தபோது தமிழ்நாட்டானுக்கு எதிராகக் கூச்சல் போட்டோம். அரசியல்வாதிகளைப் பின்பற்றிச் செல்பவர்கள் வைப்பதுதான் கோஷம். 'கோஷம்' சமயா சமயங்களில் உற்சாகத்தைத் தருமே தவிர அது ஒரு உருப்படியான அறுவடை அல்ல. கடந்த இரண்டு தசாப்தங்களில் வந்த கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் போன்றவை சுவைஞனைத் தமது போக்கிற்கேற்ப வளம்படுத்தி வந்துள்ளன. இதனாற்றான் ஈழத்து இலக்கியப் படைப்புக்களோடு சாதாரண சுவைஞர்கள் முரண்படுகிறார்கள். இளைய தலைமுறையினரின் சத்திய இலக்கியப் பரிசோதனையாக இப் பூரணி வெளிவந்துள்ளது. என். கே. மகாலிங்கனின் சிறுகதை ஒரு அழகான கதைக்கரு. இதையே நான் எழுத முனைந்திருந்தால், 'அவனுடைய மனைவி மூன்று மாசக் கர்ப்பிணி' என்று ஒரே வசனத்தில் எழுதியிருப்பேன். ஆனால் மகாலிங்கன் அதனைச் சிறப்பாக எழுதியுள்ளார். என்னிலும் காட்டிக் கலைத்தன்மை மிக்க ஒரு படைப்பு என்று கூறும் திராணி வளர்ந்துள்ள ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் இருக்கவேண்டும். அதுதான் இந்த நாட்டு இலக்கியத்துக்குச் சேமமாகும். புதிய சத்திய இளைய இலக்கியப் பரம்பரையின் குரலாக 'பூரணி' விளங்கட்டும்'' என்றார்.

அடுத்து மு. தளையசிங்கம் பேசுகையில், ''பூரணி மாணவர்களுக்கு மட்டுமல்ல- எழுத்தாளர்களுக்கும் பலன் தரும் பத்திரிகையாக விளங்கும். இந்திய எழுத்தாளர்களை விடத் தாம் 'சீரியஸாக' எழுதுவதாக இலங்கை எழுத்தாளர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்திய சனத்தொகையுடன் ஒப்புநோக்கும்போது நமது எழுத்தாளர்கள் மக்களுடைய பிரச்சனைகளைப் பற்றி அதிகம் எழுதுகிறார்கள் என்பது உண்மைதான். எமது எழுத்துக்கள் ஏன் மக்களிடம் பாதிப்பை ஏற்படுத்தவில்லை? இன்னும் அரசியல் வாதிகள்தான் மொழியுணர்வைக் காட்டி இந்நாட்டு இளைஞர்களை ஏமாற்றிவருகிறார்கள். இப்படியான சூழ்நிலையில் நான் ஒரு எழுத்தாளனாக இருப்பதையிட்டுத் துக்கப்படுகிறேன். தமிழினம் காட்டு முதலாளித்துவ மனப்பான்மை கொண்டது. தென்னிலங்கையில் முற்போக்கு எழுத்தாளன் விழிப்படையும்போதுதான் நமது எழுத்தாளர்களும் துணிந்து எதையாவது சிந்திக்க முடிகிறது. இங்கு மக்களைப்பற்றிச் 'சீரியஸாக' எழுதுபவர்கள் மக்களோடு உண்மையில் தொடர்பற்றவர்களே. நமது எழுத்தாளர்கள் கொழும்பில் இருந்துகொண்டு எழுதுகிறார்களே தவிர உண்மையில் மக்களைத் தொட்டவர்களாக இல்லை. ஒருவனது இலக்கியம் அவனுடைய வாழ்க்கையிலேயே உருவாகவேண்டும். இந்தியாவில் மாக்சீயவாதிகள் ஜெயகாந்தனைப் பயன்படுத்தமுடியாமல் இருந்துவிட்டார்கள். சமூகத்தில் எழுத்தாளன் புகுந்து வாழ்ந்தாலேதவிர மக்கள் இலக்கியத் திறனால் பிரயோசனமில்லை. சமூக் மாற்றத்திற்கு எதிரான கருத்துக்களைத்தான் மதங்கள் தருகின்றன என்பது தவறான கருத்தாகும். தேங்கிவிட்ட மாக்சியம்கூட ஒரு காலத்தில் அதற்கு எதிரான கருத்துக்களை எதிர்நோக்கவேண்டிய கட்டமும் வரலாம். விவேகானந்தர், அரவிந்தர் போன்றோர் சமூக மாற்றத்திற்கு எவ்வளவோ தூரம் ஆதரவு கொடுத்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்றார்.

இந்த ஆய்வுரைகளைப்பற்றி கலாநிதி கா. சிவத்தம்பி குறிப்புச் சொல்கையில், ''அண்மைக் காலத்தில் 'நவ மாக்சிசம்' என்ற ஒரு தத்துவம் காணப்படுகிறது. புதியவர்கள் வந்து சேருகிறபோது பழைய கட்டுக்கோப்புகளையே நாம் இயந்திரரீதியாகப் பின்பற்றக்கூடாது. புதுமைகளைச் செய்யவேண்டும். இங்கு அரசியல் ஒரு தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாம் எதற்காகப் போராடுகிறோமோ அந்தப் போராட்டம் பற்றிய உணர்வு, சத்தியம் இருக்கவேண்டும். இந்தியாவுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது எமது இலக்கியங்கள் விமர்சனத்தோடு இணைந்தே வளர்கின்றன. தென்னிந்திய தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இது காணப்படவில்லை ''என்றார்.

இதனைத் தொடர்ந்து 'ஈழத்து இலக்கியம்' பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. இது ஓரளவு சுருக்கமாகவே நடைபெற்றது எனலாம். முதலில் இ. முருகையன் பேசுகையில், ''இன்று ஈழத்தில் 'மைதிலி' போன்ற நாவல்கள்தான் அதிகமாக விற்பனையாவதைக் காண முடிகிறது. மக்கள் ரசனையையும் எமது இலக்கியத்தையும் இணைக்கமுடியாதா?' என்றார். அடுத்து மு. பொன்னம்பலம், ''மக்களோடு பழகாத விரக்தி மனப்பான்மைதான் தெளிவற்ற இலக்கியங்களைப் படைக்கவைக்கிறது'' என்றார். பதிலை மு. நித்தியானந்தன் பேசுகையில், கடந்த ஓராண்டு காலமாக இலங்கை மகனின் வாழ்க்கைப் பிரச்சனைகளை உணர்த்தும் இலக்கியங்களை உருவாக்க முடியவில்லை. மு. தளையசிங்கம் தமது கட்டுரையில் வளரும் தலைமுறைக்கு ஒரு மயக்கத்தைத் தருகிறார் ஒரே குழப்பம். காந்தி தனி மனிதனை மாற்ற முயன்றபோது நேரு சமுதாயத்தை மாற்ற முற்பட்டார். காந்தீயத்தை உயிர்ப்படுத்த மு . தளையசிங்கத்தின் கட்டுரை எழுதப்பட்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை'' என்றார். இவரது பேச்சிலே தமது கொள்கைகளுக்கு எதிரானவற்றைக் கண்டிக்கும்போக்கு இருந்தது. அடுத்து எம். ஏ. ரஹ்மான் பேசுகையில், ''மைதிலி வேண்டாம் என்றால் அதை வாசிக்கவேண்டாம் என்று மக்களை நாம் கட்டளையிடமுடியாது. 'குமுதம்' வாசிக்கவென்று ஒரு வாசகர் கூட்டம இருக்கிறது. நாம் ஐந்து ஆண்டுகள் முயன்றாலும் ஒரு குமுதத்தைப் பெற்றுவிடமுடியாது. பத்து ஆண்டுகளின் தோல்விகளின் பின்பாவது இனி மற்றவர்களைத் திட்டாது எமது துறைகளை வளர்த்துக்கொண்டு போகலாம்'' என்றார். தொடர்ந்து சில்லையூா செல்வராசன் பேசுகையில், ''மக்களைப்பற்றி எழுதுகிறார்களா மக்களுக்காக எழுதுகிறார்களா? விவசாயி - தொழிலாளி தாழ்த்தப்பட்டவர்களுக்காக எழுதப்படுகின்றவை எல்லாம் அவர்களால் படிக்கப்படுகின்றனவா? என்று கேட்டார்.

மாவை தி. நித்தியானந்தன் கருத்துத் தெரிவிக்கையில், ''எழுத்தாளர்கள் மட்டும் மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. உண்மையில் அரசியல் மாற்றமே மாறுதலை ஏற்படுத்த முடியும். எமது நாட்டு வானொலியில் 'புரட்சி' என்ற சொல்லே வரக்கூடாது என்றால் இங்கு எழுத்தாளர்களால் எதையுமே சாதிக்க முடியாது. மக்களை அடையும் சாதனங்கள் சரியான

வகையில் எழுத்தாளனுக்குப் பயன்தர வேண்டும். வருடந்தோறும் கொடியேற்றம், விரதம், திருவிழா பற்றிப் பக்கம் பக்கமாகக் கட்டுரை பிரசுரிக்கும் எமது பத்திரிகைகள் இலக்கிய விஷயங்கள் பற்றிப் பெரிதாக ஒன்றும் போடுவதில்லை. எழுத்தாளர்களிடையே பலமான கட்டுக் கோப்பு இல்லை'' என்ருர்.

இறுதியாக கே. எஸ். சிவகுமாரன் பேசுகையில், ''இலக்கியம் என்று தனியாக ஒன்று இல்லை; அதனேடு இணைந்த பல விஷயங்கள் உண்டு'' என்று குறிப்பிட்டார்.

ஏற்கனவே பலரது கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டமையினல் இவர் மிகவும் சுருக்கமாகவே பேசினர்.

ஒரே சமயத்தில் பலதரப்பட்ட இலக்கியக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் மோத வைத்து அதன்மூலம் ஈழத்து எழுத்தாளர்களுக்கும் சுவைஞர்களுக்கும் சிந்தனைக்கு வழிவகுத்த 'பூரணி' இலக்கியக் குழுவினரை என்னல் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட அனைவரும் தரமான சஞ்சிகைகள் மலரும்போது அவற்றைத் தாமாகவே வாங்கி ஆதரிக்கவேண்டும் என வேண்டிக்கொண்டு எனது செய்தித் தொகுப்புரையை முடிக்கின்றேன்.

## தாழ் போட்ட கதவு

—சிவம் - கோப்பாய்—

நாம் போகும் பாதையிலே நமக்கு முன்பு
    தாழ் போட்டு நிற்கிறது கதவு ஒன்று
நாம் அந்தக் கதவுதனை நோக்கி நின்று
    நாட்களினைப் போக்குகிறேம் திறக்கும் என்று.
ஆனலும் வேறு ஒரு புறத்தில் இன்னேர்
    அருங்கதவு 'வா'என்று திறந்து நிற்கும்.
தானக வரவேற்கும் அதனை விட்டுத்
    தாழ்போட்ட கதவுதனை ஆவலோடு
வீணகப் பார்த்திருந்(து) அழுகையோடு
    விரக்தியுடன் வாணளைப் போக்குகின்றேம்.
வாணளை வீணகப் போக்குகின்ற
    வடித்தெடுத்த முட்டாள்கள் நாங்கள்தானே!

✻ கவிதை

# மக்கள்யுகம்

எம். ஏ. நுஃமான்

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்.
எந்தச் சிறு நிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்.

'எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது?
எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது?'

'வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்.'

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்.

'நீண்ட இரவு
நியமப் படிகழிந்து
மீண்டும் ஒருநாள் விடியும்!'

'மீண்டும் விடியும் விடிவை எதிர்கொள்ள
நாங்கள் விழித்தெழுவோம்.
நாங்கள் விழித்தெழுவோம்!'

'சூரியனின் தேர்ச்சில்லைத்
தோளால் அசைத்திடுவோம்
தேரின் குதிரைகளை
எம்திசையில் செல்லவைப்போம்''

''நாங்கள் ஒரு வையகத்தை
நாங்கள் ஒரு வானகத்தை
எங்கள் கரத்தால்
இணைக்கி முடித்திடுவோம்
அங்குபுதுச் சூரியன் ஒன்
ருக்கி அமைத்திடுவோம்''

'எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது?
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்'

காற்றுஇப் பெருங்குரலைக்
கையெடுத்துச் சென்றது
நாற்றிசையும் இக்குரலின்
நாதம் பரவியது

மண்ணின் புழுதி இவ்
வார்த்தைகளை ஏந்தியது
விண்ணில் முகிலில் இதை
மீண்டும் எழுதியது.

அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்
எந்தச் சிறுநிழலும் இல்லாத பாதையிலே
அந்த வெயிலில் அவர்கள் நடந்தார்கள்.

II

''யார்நீங்கள்...?
இந்த நடுமதிய வேளையிலே
போர்புரியும் நோக்கில் புறப்பட்டு வந்துள்ளீர்
யார்நீங்கள் ..?''

''யார்நீங்கள்...?
மாளிகையில், நாங்கள் களைப்பாறும்
வேளையிலே
கோப வெறியை வெளிக்காட்டிப்
போர்புரியும் நோக்கில்
புறப்பட்டு வந்துள்ளீர்
யார் நீங்கள்...?''

''யார்நீங்கள்...?
எங்கள் அனுமதியை நாடாமல்
வீதி கடந்து
வெளிவாயிலும் கடந்து
போர்புரியும் நோக்கில்
புறப்பட்டு வந்துள்ளீர்
யார்நீங்கள்..?''

ஆளும் குரல்கள்
அதிகாரக் கூக்குரல்கள்
சூழும் குளிர்ந்த நிழலில் சுகங்காணும்
ஆளும் குரல்கள்
அதிகாரக் கூக்குரல்கள்.

சுங்கான் புகையின்
சுகந்த மணத்திடையே
யானைப் பிளிறல்போல்
நாற்திசையும் கேட்டன.

III

''நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் உழைப்பாளர்!''

''நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் வறியவர்கள்!''

''நாங்கள் யார்?
நாங்களே இந்நாட்டின் வெகுஜனங்கள்!''

''நாங்கள், ஆம்
நாங்களே இந்நாட்டின் வரலாற்றை
ஆக்கி வளர்க்கும்
அரிய படைப்பாளர்!''

''நீண்ட இரவில் நெடுநாள் துயில் புரிந்து
மீண்டும் உமது சுமையால் துயில்கலைந்த
நாங்கள், ஆம்
நாங்களே இந் நாட்டின் எஜமானர்!''

''இந்த யுகமும்
இனிவரும் ஒவ்வொர் யுகமும்
எங்கள் யுகமாகும்
எங்கள் யுகமாகும்''

காற்று இப் பெருங்குரலைக்
கையெடுத்துச் சென்றது
நாற்திசையும் அக்குரலின்
நாதம் பரவியது.

மண்ணின் புழுதி இவ்
வார்த்தைகளை ஏந்தியது
விண்ணில் முகிலில் இதை
மீண்டும் எழுதியது.

''யாருடைய வேர்வை இந்
நாட்டை நனைத்ததுவோ
யாருடைய வேர்வை இந்
நாட்டை வளர்த்ததுவோ
ஆம் அவர்க்கே நாட்டின் அனைத்தும் உரித்தாகும்
ஆம், அவர்க்கே நாட்டின்
அனைத்தும் உரித்தாகும்.''

''நாங்களே இந்நாட்டை நனைத்தவர்கள்
நாங்களே இந் நாட்டை வளர்த்தவர்கள்
எங்கள் வயிற்றில்
நெருப்பே எரிகிறது
எங்கள் வயிற்றில்
நெருப்பே எரிகிறது.''

'' எங்கள் குருதியினால்
நாங்கள் இதை வென்றெடுப்போம்
எங்கள் வியர்வையினால்
நாங்கள் இதைச் சுத்தி செய்வோம்.''

''எங்களிடம் என்ன
இழக்க இருக்கிறது
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் நாங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்.''

காற்று இப்பெருங்குரலைக்
கையெடுத்துச் சென்றது
நாற்திசையும் அக்குரலின்
நாதம் பரவியது.

மண்ணின் புழுதிஇவ்
வார்த்தைகளை ஏந்தியது
விண்ணில், முகிலில் இதை
மீண்டும் எழுதியது.

✻ கட்டுரை

# கொழும்பில் தமிழ் நாடகங்கள்

கே. எஸ். சிவகுமாரன்

ஈழத்தில் தமிழ் நாடகத் துறையை இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று: கொழும்பு மேடை நாடகங்கள். இரண்டு: வெளியூர் மேடை நாடகங்கள். வெளியூர் நாடகங்களையும் நகர்ப்புறத்து நாடகங்கள், மரபு வழி நாடகங்கள் என்று பிரிக்கலாம். நகர்ப்புறத்து நாடகங்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, பதுளை, புத்தளம், மன்னார், வவுனியா போன்ற நகரங்களிலும் பட்டினங்களிலும் மேடையேற்றப்படும் நாடகங்களைக் குறிக்கும். மரபு வழி நாடகங்கள் தென்மோடி, வடமோடி, நாட்டுக் கூத்துக்கள், மலைநாட்டு காமன்கூத்துப் போன்றவையாகும்.

கொழும்பு மாநகரத்திலே மேடையேற்றப்படும் நாடகங்களை நகர்ப்புறத்து நாடகங்கள் என்று கூறுவதே பொருந்தும். பேராசிரியர் சு. வித்தியானந்தனின் இராவணேசன், வாலிவதை, நொண்டி நாடகம், கர்ணன் போர் ஆகியவை நகர்ப்புறத்து மக்களைக் கவரத்தக்கவிதத்தில் அமைந்த மரபு வழி நாடகங்களே. கொழும்பில் வசிக்கும் என்போன்ற பார்வையாளர் கொழும்பில் அரங்கேற்றப்படும் நாடகங்களைப் பற்றித்தான் தாராளமாக மதிப்பிட முடிகிறது. எனவே கொழும்பில் மேடையேற்றப்படும் நாடகங்களில் நான் பார்த்தவை பற்றி இங்கு குறிப்பாகவும் நாடகக் கலைபற்றி பொதுவாகவும் இங்கு பேச விரும்புகிறேன்.

முதலில் நாடகக் கலை பற்றிச் சிறிது பார்ப்போம். உலக நாடகப் போக்கு கிரேக்க நாடகத்துறையை, குறிப்பாக அரிஸ்ரோட்டலின் வியாக்கியானத்தை ஒட்டியே வளரப் பெறினும், காலத்திற்குக் காலம் வெவ்வேறு புதிய அனுசரணைகளைத் தழுவிச் சென்று வளர்ந்து வருவதையும் நுட்ப அவதானிகள் கவனித்திருக்கக் கூடும். உதாரணமாக 'துன்பியல்'. பற்றிய ஷேக்ஸ்பியரின் கோட்பாடு சிறிது வேறுபட்டு இருப்பதை புலமைமிக்க சில மேலைத்தேய விமர்சகர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். இதேபோன்று அபத்த நாடகம் (தி அப்ஸர்ட் தியேட்டர்) என்ற ஒருவகை நாடகப் போக்கு அண்மையில் உருவாகி வளர்ந்து வருவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. வழக்கமாக ஆரம்பம், வளர்ச்சி, மோதல், உச்சம், முடிவு என்ற ரீதியில்தான் நாடகங்கள் அமைவதுண்டு.

நாடகங்களில், 'நாடகத்தன்மை' என்று கூறத் தக்க அம்சங்கள் சில உள்ளன. அவற்றில் சிலவற்றை இனிப் பார்ப்போம். கதை நிகழ்வோட்டம், பாத்திரத்தன்மை, உரையாடல், சிந்தனை ஆகியவை ஒரு நாடகத்தில் இருக்கவேண்டிய அம்சங்கள் என்று கூறலாம். (எரிக் பென்ட்லி என்ற அமெரிக்க விமர்சகர் இதுபற்றி விரிவாக எழுதியிருக்கிறார்.) நாடகம் பார்ப்பதற்கு நாம் செல்வதற்கான முக்கிய காரணம் உணர்வு நிலையில் மெய்மறப்பதற்காகவே. தொடர்ச்சியான தொடர்புள்ள நிகழ்வோட்டத்தின் மூலம் இந்த உணர்ச்சிநிலையை நாம் அடைகிறோம். முரண் நிகழ்ச்சிகளை நாடகத்தில் இருந்து நாம் கிரகித்துக்கொள்கிறோம். அந்த முரண் நிகழ்வின்போது ஆச்சரியம் கலந்த புளகாங்கிதத்தை நாம் அடைகிறோம். அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற ஐயப்பாட்டை உருவாக்குவது எது? நடக்கப்போவது என்ன என்று அறியாத நிலை. அது மாத்திரமல்ல, அறியவேண்டும் என்ற விருப்பம் முன்னர் நடைபெற்ற சம்பவங்களின் உத்தல்களினால் எழும் விருப்பமும் இந்த ஐயப்பாட்டு நிலையை உருவாக்குகின்றன.

கதை நிகழ்வோட்டம் என்பது விவரணை அல்லது சம்பவக் கோவை யாகும். அதாவது உரிய தாக்கத்தை பார்வையாளர் மத்தியில் ஏற்படுத்தும் பொருட்டு சம்பவக் கோவை ஓர் ஒழுங்கு முறையில் மாறிமாறி அமைவது நிகழ்வோட்டம். இதனுடன் சேர்க்கப்படுவது அச்சம்பவங்கள் உணர்த்தும் அர்த்தங்களாகும். சாமானிய நிகழ்ச்சி கூட ஒருவகையில் நிகழ்வோட்டத்திற்கு வலுக்கொடுக்கும். நாளாந்தம் நாம் பயன்படுத்தும் பயனற்ற சொற்கள் இல்லாது, நாடகத்தில் ஆச்சரியத்தையும் களிப்பையும் உண்டுபண்ணும் பயனுள்ள சொற்கள் இடம்பெறுகின்றன. வாழ்க்கையில் நாம் சராசரி உபயோகிக்கும் சொற்களை விட இறுக்கமான, உன்னதமான சொற்களை நாடக ஆசிரியன் பயன்படுத்துகிறான். அதாவது குறிப்பிட்ட நாடகப் பாத்திரத்திற்கு மாத்திரம் அல்லாது (அவை கொச்சை மொழியாகவும் இருக்கலாம்) நாடகம் முழுவதற்குமே பொருத்தமுள்ள சொற்களை அவன் பயன்படுத்துகிறான். பாத்திரம் ஒன்றின் பேச்சுகள் உன்னதமானவையாகவும் பாத்திரத்திற்கு உரிய பாணியில் அமைந்ததாகவும் இருந்தால் வெவ்வேறு பாத்திரங்களுக்கு இடையே நடைபெறும் உரையாடல்கள் கூட அவ்விதம் அமைதல் வேண்டும். பாத்திரம் நம்பும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.

நாடகத்தில் ஒவ்வொரு பேச்சும் ஒரேயளவுடையதாக இருத்தல் வேண்டும். ஒவவொரு பாத்திரமும் எவ்வித உணர்ச்சியைப் பரிவர்த்தனை செய்ய வேண்டுமென்று அறிந்திருப்பதுடன், எவ்விதத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும், எவ்விதம் மற்றொரு பாத்திரத்தில் இருந்து அந்த உணர்ச்சிப் பரிவத்தனையைப் பெற்று வெளிப்படுத்த வேண்டும் என்பன போன்ற விஷயங்களை அறிந்திருக்க வேண்டி உள்ளது. ஒரு பாத்திரம் எவ்வளவு பேசவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அந்தப் பாத்திரம் என்ன பேசுகிறது என்பதும். எனவே பாத்திரம் ஒன்று அதன் தன்மையைக் காட்டுவதற்காகப் பேசுவது மாத்திரம் அல்ல; பாத்திரத்தை முழுமையாக சித்திரிப்பதற்காக பேசுவது மாத்திரம் அல்ல, நாடகம் முழுவதற்குமே அது பேசுவது முக்கியத்துவம் பெறுகிறது. எவ்வளவு தேவையானதோ அந்த அளவில் தனது பேச்சை அது நிறுத்திக்கொள்ள வேண்டும். மௌனமும், தேவையற்ற பேச்சும், சில வேளைகளில் புறநடையாக நாடகத்திற்கு வலுவூட்டலாம்.

பகுத்தாயும் பண்பை இழந்துவிட்ட நாடகாசிரியர் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் தவறிவிடுகிறார். எல்லாக் கலைஞர்களுமே ஆய்வறிவாளர்கள் அல்லர். ஆனால் ஆய்வறிவு, உணர்ச்சி, கற்பனை ஆகியனவற்றில் இருந்துதான் கலை பிறக்கிறது. இவற்றிற்கிடையே ஒரு சங்கமம் ஏற்படும்பொழுது நாடகமும் பிறக்கிறது. உலகில் சிறந்த நாடகங்கள் கருத்து அல்லது சிந்தனை வெளிப்பாடாகவே அமைகின்றன. குறிப்பிட்ட கால எல்லையில், குறிப்பிட்ட முரண்பாட்டுச் சுழிவுகளையும் மோதல்களையும் நெறிப்படுத்தி, சிக்கனமாகக் காட்டும்பொழுது, அங்கு நாடகம் பிறக்கிறது. சுருங்கச் சொன்னால் பார்வையாளர்களுக்கும் நடிகர்களுக்கும் இடையே செயற்படும் ஓர் உணர்ச்சிப் பரிவர்த்தனைதான் ''நாடகத் தன்மை''.

இரண்டு விதங்களில் இது செயற்படுகின்றது. ஒன்று: நாடக எழுத்துப் பிரதி சிக்கனமான, தறித்த, கார்ப்புள்ள வசனங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இரண்டு: நடிகர்கள் வசனங்களுக்கு உயிரூட்டவேண்டும். நடிகர்கள் இரண்டு வழிகளில் இதனைச் செய்யலாம். ஒன்று: அங்க அசைவுகளினால். மற்றையது: குரலினால். மேடைநாடகங்களுக்கும் முக பாவங்கள் தேவைதான் என்றாலும் சினிமா கமெராவிற்குத் தேவையான அளவு வேண்டியதில்லை. தவிரவும் ஒப்பனை மூலம் பாவங்களை மிகைப்படுத்திக் காட்ட முடியும். மேடையில் தோன்றும் தோரணை, பாத்திரத் தன்மைக்கேற்ற நடையுடை பாவனை, அசைவுகள் ஆகியனவற்றுடன் வசனங்களை நிறுத்தி, முறித்து, குழைந்து திட்பமாக உச்சரிக்கத்தக்க குரல் அமைப்பும் நடிகர்களுக்குத் தேவை. லடீஸ் வீரமணி, சில்லையூர் செல்வராஜன், தாசன் பெர்னாண்டோ, ஆர். பேரம்பலம், எஸ். எஸ். கணேசபிள்ளை, இராஜேஸ்வரி சண்முகம் போன்றவர்கள் குரலுக்கும் உச்சரிப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து நன்றாக நடிக்கிறார்கள். நல்ல நடிகர்கள் தமது திறனாற்றலினால் நாடகத்தில் உள்ள இதர குறைபாடுகளை ஓரளவிற்கு மறைத்துவிடுகிறார்கள்.

லடீஸ் வீரமணி 'கலைஞனின் கனவு' என்ற நாடகத்தில் உணர்ச்சியும் மனச்சாட்சியும் மோதிடும் பொழுது பிறக்கும் ஓர் அதீத உணர்ச்சியை மிகைப்படுத்தாது, அளவாக சித்திரித்துக் காட்டிய தோரணையும், அவர் பேசிய முறையும் குறிப்பிடத்தக்கது. தாஸன் பெர்னாண்டோ 'டாக்டர் போஸ்டஸ்' நாடகத்தில் இருந்து ஒரு காட்சியை - சுய உரையாடல்- நன்றாக நடித்துக் காட்டினார். சில்லையூர் செல்வராஜன் 'மதமாற்றம்' போன்ற நாடகங்களில் தமது பல்கலைத் தேர்ச்சியை செம்மையாக வெளிப்படுத்தினார், நடிப்பு என்னும் பொழுது அங்க அசைவும், மேடைக்கேற்ற நாடக இலட்சணங்களும் மாத்திரம் அல்லாது, வசனங்களை உணர்ந்து, தெளிவாக நிறுத்தி, முறித்துப் பேசுவதில் இருக்கிறது. குரல், தொனி, உச்சரிப்பு, அழுத்தம் ஆகியவை இங்கு முக்கியமானவை.

நகர்ப்புறத்து நாடகங்களை ''சீரியஸ்'' நாடகங்கள் என்றும் களிப்பூட்டும் நாடகங்கள் என்றும் வசதியை முன்னிட்டு வகுக்கலாம். எல்லாக் கலைகளும் களிப்பூட்டும் தன்மை வாய்ந்தவைதான் என்றாலும், சில கலைகளில் களிப்பூட்டும் தன்மையே சகலதுமாக இருக்கிறது. சிலவற்றில் இந்தத் தன்மையுடன் வேறு சில அடிப்படை விஷயங்களும் உள்ளடங்கியிருக்கின்றன.

களிப்பூட்டுவதை மாத்திரமே முதல் நோக்கமாகக் கொண்டவை, காத்திரமான நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவை என்று தம்மை அறிமுகப்படுத்திக் கோண்டால், அது கண்டிக்கத்தக்க விஷயமாகும். நாடகங்கள் பலவகைப்படும். ஹாஸ்ய, மர்ம, காதல், துப்பறியும் நாடகங்கள் களிப்பூட்டலைத்தான் முதல் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. சமூகப் போராட்டங்களைச் சித்திரிப்பவை கொஞ்சம் காத்திரமானவை. களிப்பூட்டலுடன் அவை சிந்தனையையும் ஆழமாகத் தூண்டுபவை. பொழுதுபோக்கு அல்லது களிப்பூட்

டல் நாடகங்களுக்கும் இடமுண்டு. தம்மளவில் நேர்த்தியாக உருப்பெற்றிருந்தால், இந்த ''இலகு'' நாடகங்களும் இரசிக்கத்தக்கவைதான். இந்த விதத்தில் லண்டன் கந்தையா, ஆச்சிக்குச் சொல்லாதே, டயல் எம் போர் மேடர், ஸ்பூட்னிக் சுருட்டு, காதல் ஜாக்கிரதை, புரோக்கர் கந்தையா, கலாட்டா கல்யாணம், பார்வதி பரமசிவம், இது ஒரு காதல்கதை, அவளா இவள், சிறகொடிந்த பறவை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலகு நாடகங்கள் தம்மளவில் நேர்த்தியாக அமையாமலும் அதே நேரத்தில் கனமான நாடகங்களுடன் தம்மை இனம் கண்டுகொள்ள முற்படுவதும் தான் கண்டிக்கத் தக்கது.

ஒரு சமூக நாடகத்தில் ''நாடகத் தன்மையைத்'' தரும் காத்திரமான பொருட்கள் எவை என்று அறிவதுடன் நாடகாசிரியன் சமூகத்தை எவ்விதம் பொருள் கொண்டு விளங்க வைக்கிறான் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். உண்மையில் ஒரு நல்ல கலைஞன் ஒரு நல்ல விமர்சகனும்கூட. பேர்னாட் ஷோ, இப்ஸன் போன்றவர்கள் 19-ஆம் நூற்றாண்டில் மேல்நாட்டுச் சமூகத்திற்கு விளக்கம் கொடுத்தனர் தமது நாடகங்களில். இன்று யுத்திக்கு விரோதமான ஆவேசப் படைப்புகளை மேல்நாட்டு நாடகாசிரியர்கள் தீட்டுகிறார்கள் என்றால் மேல்நாட்டுச் சமூகம் சீர்குலைந்து, பரிவர்த்தனை அற்று, கசப்படைந்து வருகின்றது என்பதுதான் பொருள். நல்ல வேளையாக நாம் வாழ்க்கையில் அவ்வளவு தூரம் விரக்தி அடையவில்லை. எனவே இயற்கைக்கு மாறாக, நாம் நமது நாடகங்களை எழுதவேண்டியதில்லை. நடைமுறை வாழ்க்கைக்கு முரணாக எழுதாமல் அதனை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் சமூக யதார்த்தம் கொண்டதாக எழுதினால் பயன் உண்டு.

கொழும்பில் தமிழ்நாடகத்துறை (பல குறைபாடுகள் இருந்தபோதிலும்) எண்ணிக்கையிலும் தரத்திலும் வளர்ச்சியடைந்துவருகின்றது என்று கூறமுடியும். ''மதமாற்றம்'' தொடக்கம் ''என்ன உலகமடா'' வரை இது பொருந்தும். தமிழ் நாடகங்களைக் கொழும்பில் ஒரு சிலரே பார்க்கிறார்கள். நாடகத்துறையில் ஈடுபட்டவர்களின் நண்பர்கள், உறவினர்கள்தான் கூடுதலாக தமிழ் நாடகம் பார்க்கின்றனர். பொழுதுபோக்க விரும்பும் ஒரு சிலரும் இந்த நாடகங்களைப் பார்ப்பதுண்டு. களிப்படைவதற்காகவே சகலரும் நாடகம் பார்க்கின்றனர். சீரியஸான முறையில் நாடகக் கலையை அணுகிப் பார்ப்பவர்கள் மிகக் குறைவே மேல் தட்டுவட்டாரத்தைச் சேர்ந்த பார்வையாளர்கள் இல்லை என்றே சொல்லலாம். எனவே, ஈழத்துத் தமிழ் நாடகம் குழூஉக் கலையாகவே இருந்துவருகிறது என்று கூறலாம். தவிரவும், மேடையேற்றப்படும் நாடகங்கள் அநேகமாக ஒரே வார்ப்புடையனவாக, தன்மையவாய் இருக்கின்றன. பல்வேறு ரகமான நாடகங்களாக அவை அமைந்தால் வெவ்வேறு ரசனை உடையவர்கள் அவற்றைப் பார்ப்பதற்குச் செல்லக்கூடும். இது பொதுப்படையான நிலை. இப்படி இருந்தபோதிலும் சில நல்ல மூல நாடகங்களும் கொழும்பில் மேடையேறியிருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. நகரப்புறத்து மக்களைக் கவரக்கூடிய இந்த நாடகங்கள் சில ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியைக் காட்டுவனவாக இருக்கின்றன. உதாரணமாக கடூழியம், கோடை, புதியதொரு வீடு, வேதாளம் சொன்ன கதை போன்ற கவிதை நாடகங்கள் பரிசோதனை நாடகங்களாக விளங்குகின்றன. இவற்றில் சில உள்ளடக்கச் சிறப்புக் கொண்டவையாகவும் அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தேரோட்டி மகன், சாணக்கியன், சலோமி, யாருக்காக அழுதான்?, அவளைக் கொன்றவள் நீ, இருதுயரங்கள், கடலில் அக்கரை போவோர், காட்டுமிராண்டி, பொம்மலாட்டம், பெண்பாவை, நினைத்தது நடந்ததா? போன்ற தழுவல் நாடகங்களும், வீடு யாருக்கு? வாடகைக்கு வீடு, சுமதி, சதுரங்கம், என்ன உலகமடா போன்ற வேறு சில நாடகங்களும் மேடையேற்றத்தில்-அரங்க நுணுக்கங்களில் வெற்றி கண்டன. இன்னும் பல நாடகங்கள் நகைச்சுவையாக சமுதாயப் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டின. ராஜ் நகைச்சுவை மன்றத்தினரின் வெறும் உதிரியான ஹாஸ்யத்துணுக்குகள் கூட பார்வையாளரைப் பரவசப்படுத்தின. மதமாற்றம், அவனுக்கென்ன தூங்கிவிட்டான், விடிவை நோக்கி, அபசுரம், சங்காரம் போன்ற நாடகங்கள் உள்ளடக்க ரீதியில் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

சிங்கள நாடகங்கள் பெரும்பாலும் பிற மொழித் தழுவல்களாக இருக்கும் பொழுது தமிழ் நாடகங்கள் சரியோ, பிழையோ, எமது சொந்த நாடகப் பொருட்களைக் கொண்டிருப்பதனால் அவை ஆக்கபூர்வமாக அமைகின்றன. இதுபற்றி தமிழமுது ஏப்ரல்–ஜூன்–72 இதழிலும், மல்லிகை ஜூலை–1971 இதழிலும் எழுதியிருக்கிறேன். தமிழில் தழுவல் நாடகங்கள் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும். இதுபற்றியும் ரோஜாப்பூ ஜூன் 1970 இதழில் எழுதியுள்ளேன். இந்தக் கட்டுரைகளின் சாராம்சத்தை பூரணத்துவம் குறித்து இங்கு சேர்த்துள்ளேன். இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு நன்றி.

சிங்கள நாடகங்கள் பலவும் வெற்றியடைவதற்கான காரணம் அவை பிற மொழி நாடகங்களின் தழுவல் நாடகங்களாக அல்லது மொழி பெயர்ப்புகளாக அமைந்திருப்பது தான். பிற மொழி நாடகங்களில் காணப்படும் அரிய நாடகத் தன்மை, நாடகப் பொருள், உத்தி ஆதியன சிங்கள ஆக்கங்கள் மூலம் சிங்கள நாடகங்களிலும் அமைந்துவிடுகின்றன. பிற மொழி நாடகங்களில் காணப்படும் இறுக்கம் பாத்திரவார்ப்பு, சிக்கனம், கரு, உரு, உரிப் பொருட்கள் போன்றவை சிங்கள நாடகங்களிலும் அமைவதால் அவை நாடகத் தன்மை என்று நாம் கூறும் உணர்ச்சி அல்லது சிந்தனைப் பரிவர்த்தனை உடையவையாகக் காணப்படுகின்றன. அதாவது பார்வையாளர்களுக்கும் நாடகாசிரியனுக்கும் இடையே நடிப்பின் மூலமும் மனம், புத்தி மூலமும் பிணைப்பு ஏற்படுகின்றது. சிங்களத்தில் தழுவப்படும் அல்லது மொழிபெயர்க்கப்படும் நாடகங்கள் எந்த வகையில் சிங்கள மக்களுக்குப் பயன்படுகின்றன என்பது வேறு பிரச்சினை. அதாவது அந்த நாடகங்களில் உணர்த்தப்படும் கருத்து அல்லது அனுபவம் சிங்கள மக்களின் கலாசாரம், வாழ்க்கை முறை ஆகியவற்றை ஒட்டியிருக்கின்றனவா என்பதை விவாதிப்பது நமது பிரச்சினை அல்ல. ஆனால், அவ்விதம்

தழுவப்படும் அல்லது மொழிபெயர்க்கப்படும் நாடகங்கள் மேடையில் எவ்வாறு அரங்கேற்றப்படுகின்றன? நியாயமான அளவிற்காகுதல் வெற்றி காணப்படுகின்றனவா என்பதை நாம் சிறிது பார்க்கலாம். தழுவப்படும் மூல நாடகங்களிலேயே நாடகாசிரியர்கள் சிங்கள நெறியாளர்களுக்கான குறிப்புக்களைக் கொடுத்துவிடுகிறார்கள். நாடகப் பொருள் செறிவு, சிக்கனம், ஒருமைப்பாடு மேடையில் பாத்திரங்கள் இயங்கும் முறை போன்றவற்றைக் குறிப்பிட்டுவிடுவதனால் அந்த நாடகங்களைத் தழுவி மேடையேற்றும் சிங்கள நாடக நெறியாளர்கள், தயாரிப்பாளர்களுக்கு சுமை பெருமளவு குறைந்துவிடுகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மாற்றங்களைச் செய்து நயமாக மேடையேற்றிவிட முடிகிறது. பெரும்பாலான சிங்கள நாடக நெறியாளர்கள் தாமே மூலப் பிரதிகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துவிடுகின்றனர். அல்லது தழுவி எழுதுகின்றனர். எனவே மேடையேற்றத்தில் அத்தகைய சிங்கள நாடகங்கள் வெற்றி காண்பதில் வியப்பெதுவும் இல்லை.

அந்நாடகங்கள் வெற்றியடைவதற்கு மற்றுமொரு காரணம் தழுவ எடுத்துக் கொள்ளப்படும் நாடகங்கள் தலைசிறந்தவை என்று மேற்கு நாட்டு விமர்சகர்களால் கருதப்படுபவையாக இருப்பதாகும். குறிப்பாக பிரச்ட், பெக்கிட், ரெனிஸி வில்லியம், ஜோன் ஒஸ்பரன், அயனஸ்கோ, லோற்கா போன்ற அண்மைக்கால அல்லது சமகால நாடகாசிரியர்களின் நாடகங்களை சிங்கள நெறியாளர்கள் தெரிவு செய்கின்றார்கள். உறித்த ஹொந்த அம்மாண்டிய, ஹுனுவத்தே கத்தாவ, கொடோ எனகங், கவுறுத் என்ன நேமுஹுது புத்து, வெஸ் முஹுணு, நட்டுக்காரி போன்ற சிங்கள நாடகங்கள் பிறமொழி நாடகங்களின் தழுவலாக்கங்களாக வெற்றிபெற்றுள்ளன.

சிங்கள மொழியில் தழுவப்படும் நாடகங்கள் இலக்கிய ரீதியிலும் பிரபல்யம் அடைந்திருக்க தமிழில் தழுவப்படும் நாடகங்களோ இரண்டாம் மூன்றாந்தர பிறமொழி நாடகங்களாக இருக்கின்றன. நோத். லெஸ்லி சான்ட்ஸ், ஒல்டஸ் ஹக்ஸ்லி, எல்மார் ரைஸ், சமசெட் மோம் போன்றோரின் நாடகங்களைத் தழுவுவதற்கு நம்மவர்கள் முயல்வதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இந்த நாடகங்களில் விறுவிறுப்பு அம்சம் நிறைய உண்டு. துப்பறியும் நாடகங்களாகவும் மர்ம நாடகங்களாகவும் இவை இருப்பதால் மேடை உத்திகளும் திருப்பங்களும் புதுமையாக தமிழுக்கு அமைந்துவிடுகின்றன. ஆனால் தலைசிறந்த நவீன மேற்கு நாட்டு நாடகங்களில் மேடையமைப்பு, ஒலி, ஒளி போன்றவை மிகவும் எளிமையாக இடம்பெறுகின்றன. நாடகாசிரியர்கள் தாம் கூறவருவதற்குத்தான் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். நாடகம் அர்த்தச் செறிவுள்ள, இறுக்கமான உரையாடல்கள்மூலமே பெருமளவில் நகர்த்தப்படுகின்றது. இந்த இடத்தில்தான் சிங்களத் தழுவல் நாடகங்களின் உள்ளடக்கச் சிறப்புப்பற்றிக் குறிப்பிடல் வேண்டும். இந்த நாடகங்களில் உள்ளடக்கம்தான் முக்கியத்துவம் பெறுகின்றது. சமூகப் பிரச்சினைகளை அல்லது தனி மனிதரின் விரக்திப் போக்கை ஆராய்கின்றன. தமிழ் தழுவல் நாடகங்கள் துப்பறியும் நாடகங்களாக களிப்பூட்டுபவையாக மாத்திரம் இருக்கின்றன. களிப்பூட்டலை மீறிய உணர்வாழம் கொண்ட தமிழில் தழுவப்பட்ட நாடகங்கன் சிலவும் இருக்கின்றன. செக்கோவ், சிங், வைல்ட் போன்றோரின் நாடகங்கள் தமிழ் நாடகாசிரியர்களுக்கு வித்தியாசமானவையாகக் காணப்படவில்லை; அதாவது, பரிசோதனை முயற்சிகளாக அவை தழுவப்பட்டபோதிலும் அவை தமிழ் ரசிகர்கள் மத்தியில் அமைதி கண்டன. தமிழ் நாடசங்கள் போலவே இருந்தன. இரு துயரங்கள், கடலில் அக்கரை போவோர், காட்டுமிராண்டி, மற்றும் சுயமாக எழுதப்பட்ட ஆனால், அயனெஸ்கோவின் நாடகம் ஒன்றின் அருட்டுணர்வினால் வரையப்பட்ட அபசுரம் போன்றவை வெற்றி பெற்றனதான். இப்ஸனின் பெண்பாவை ஓரளவுக்குத் தமிழிற்கு முரணாக இருந்ததற்கான காரணம் இப்ஸன் தழுவப்படாமல் மொழி பெயர்க்கப்பட்டதாகும். எனவே தமிழில் பிறமொழி நாடகங்கள் தழுவப்படுவது பரிசோதனை முயற்சிகளுக்காக என்பதும் தெரியவருகிறது. ஆனால், சிங்களத்தில் அதுவே வழமையாக ஆகிவிடுகிறது. தமிழில் தழுவப்பட்டுள்ள நாடகங்கள் விறுவிறுப்பு, ஐயப்பாடு, அதிர்ச்சி விளைவுகளுடன் களிப்பூட்டலுக்காகவும் பாத்திர வார்ப்பு என்ற உணர்வாழத்திற்காகவும் தழுவப்பட்டிருக்கின்றன.

இன்னொரு விஷயம் என்னவென்றால், சிங்கள நாடகக் கலைஞர்கள் பெரும்பாலும் இருமொழிப் பாண்டித்தியம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிங்கள நாடகங்கள் பற்றி ஆராயப்படுகின்றன. பிறமொழி நாடகங்கள்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். தமிழில் நாடகம் போடுவோர் பலரும் தென்னிந்திய திரைப்படத்தை மாத்திரம் முன்மாதிரியாகக் கொள்ளுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக சிங்கள நாடக நடிகர்கள் கட்டுப்பாட்டுடனும் நிதானத்துடனும் மேடைக்கேற்ற முறையில் நடித்துவிடுகின்றனர். நாடகப் பயிற்சி அவர்களுக்கு நம்மவர்களைவிடக் கூடுதலாக இருக்கிறது, பிறமொழி நாடகங்களைத் தழுவுவதைவிட சுயமாக நாடகங்கள் எழுதுவதே மேல். பிறமொழி நாடகங்களின் உத்திகளைத்தான் நாம் பின்பற்றலாம். அவற்றின் உள்ளடக்கம் எமது சமூகத்திற்கும் பொருத்தமானதாக இல்லாதிருக்கலாம். ஒ கல்கத்தா 1, த ஹெயார், ஹூ இஸ் எப்ரெயிட் ஒப் விர்ஜீனியா வூல்ப் போன்ற நாடகங்களை நாம் தழுவுவதில் பயன் இல்லை. எனவே தழுவும் பொழுது அப்பிறமொழி நாடகங்கள், நமது பண்புக்கு ஒட்டியவையா என்பதை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இப்பொழுது சிங்கள நாடகங்கள் பலவும் அந்நியமாக இருக்கின்றன என்று சில விமர்சகர்கள் கூறத் தொடங்கி இருக்கிறார்கள் இருந்தாலும் தழுவல் ஆக்கங்களினால் தான் சிங்கள நாடக உலகில் ஒரு நாடகப் பிரக்ஞை ஏற்பட்டிருக்கிறது. அதனால் உலக நாடக மேடையை அவர்கள் காண முடிகிறது. விரிந்த தொடுவானமாக அமைகிறது. அதனால் உலக நோக்கும் அறிவும் அனுபவமும் விரிவடைகின்றன. எனவே, பிற தழுவலாக்கங்களும் இதர தழுவல் ஆக்கங்கள் போல உயிரூட்டக்கூடியவை.

இருந்தபோதிலும் சர்வதேச நாடக அரங்கில் இருந்து ஓரிரு நாடகங்களைப் புதுமைக்காகத் தழுவினால் அல்லது பெயர்த்தால் பாதகம் இல்லையாயினும் இந்தத் தழுவல் முயற்சியே வழமையாகிவிட்டால் பின்னர் உள்ளூர் நாடகம் உண்மையில் எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளது என்று கூற முடியும்? குறிப்பிட்ட இந்தத் தழுவல் மொழிபெயர்ப்பு நாடகங்கள் ஒரு சில கொழும்பு நகரப்புறத்தவர்களை மாத்திரம் கவர்ந்துள்ளன. சிங்கள மக்கள் அனைவரினதும் வாழ்க்கைப் போக்கைச் சித்திரிப்பவையாக இவை அமையவில்லை. இருமொழிப் பாண்டித்தியம் உள்ள விமர்சகர்கள், நாடகத்துறையில் ஈடுபட்டவர்கள், பட்டதாரி மாணவர்கள், மேற்கு நாட்டுப் போக்கை அனுசரிக்கும் அறிவுத் துறை உயர்தளத்தவர்கள் – இவர்கள்தான் கொழும்பில் உள்ள சிங்கள நாடகங்களைப் பார்க்கச் செல்கிறார்கள். அப்படிப் பார்க்கச் செல்வது நாகரிகம் எனக் கருதுகிறார்கள். சாதாரண சிங்கள மக்கள் இந்த நாடகங்களைப் பார்ப்பதில்லை. ஏன்?

அம்பாந்தோட்டையில் உள்ள ஒருவனுக்கு ரெனஸி வில்லியம்சின் நாடகம் ஒன்றின் தழுவலாக்கம் 'அபத்த நாடகம்' எவ்விதம் அபத்தமாகத் தோன்றுகிறதோ அதே போல் அபத்தமாகத்தான் இருக்கும். அபத்த நாடகத்துறை பிரியர்கள் என்னை மன்னிக்கவும். இவ்விதம் பார்க்கும்பொழுது உள்ளடக்க ரீதியாகவும் மேடையேற்றத்திலும் வெற்றியடைந்துள்ள ஒருசில தமிழ் நாடகங்கள் நேரடியாகவே சாதாரண மக்களைப் பாத்திரமாகக் கொண்டவை, தேசியத் தன்மையற்ற அல்லது அந்நிய நாடகப் பொருட்கள் (உதாரணமாக சீரழிந்துவரும் மேற்கு நாட்டுச் சமூகத்தின் அவநம்பிக்கை வாதம் போன்றவை) அவற்றில் இடம்பெறவில்லை. அத்துடன் தனிநபர்களின் மனக் கோளாறுகள் அல்லது அவலநிலை அவற்றில் சித்திரிக்கப்படவில்லை. ஆயினும், பெரும்பாலான மூல தமிழ் நாடகங்கள் மேடையேற்றத்தில் திருப்தியளிப்பதில்லை. சிங்கள நாடகம் ஒன்றின் மேடையேற்றத்தில் காணப்படும் மெருகை தமிழ் நாடகங்களில் காண முடியவில்லை. ஆயினும் தமிழ் நாடகங்கள் எமது மண்ணில் காலூன்றியவையாகும். ஒரு சில நாடகங்களில் வாய்ப்பாட்டு அம்சங்கள் தென்னிந்திய திரைப்படங்களில் இருந்து கடன்வாங்கப்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும் அந்த நாடகங்கள் கூட ஆசிய அல்லது கீழைத்தேய தன்மை கொண்டவையாக விளங்கின. வெற்றியடைந்துள்ள நாடகங்கள் எனக் கருதப்படும் சகல தமிழ் மூல நாடகங்களும் ஈழத்துப் பின்னணியில் ஈழத்து வாழ்க்கைப் பாங்கில் அமைந்துள்ளன. இன்னும் குறிப்பாகச் சொன்னால் ஈழத்துத் தமிழ் மரபு வளமுடையனவாக அவை இருந்தன.

இந்தத் தழுவலாக்கங்கள் ஓரளவுக்குத்தான் தமிழ் நாடகம் தழைத்தோங்க உதவும் என்பதை வலியுறுத்தவேண்டும். அதாவது அந்நிய உத்திமுறைகளைப் பரிச்சியம் செய்துகொள்ளவும் அவற்றை நமதாக்கிக் கொள்ளவும் அவை பயன்படுகின்றன. ஆனால் தாக்கமான ஆழமான செல்வாக்கைத் நமது நாடகங்கள் பெற்றுப் பரிணமிக்க வேண்டுமாயின் சுயமாகவே நாடகங்கள் தமிழில் எழுதப்படுவது தவிர்க்க முடியாதது. அத்தகைய நாடகங்கள் சமூகப் பிரக்ஞையுடன் சமூக விமர்சனங்களாக இருத்தல் விரும்பத் தக்கது. அப்பொழுது தான் நாடகக் கலையும் சமூகப் பணி கொண்டதாக விளங்குவதுடன் சமூகத்திற்கு வழிகாட்டியாக விளங்கும் சாதனமாகவும் அமையும். தமிழில் தழுவப்பட்ட சில நாடகங்களின் பட்டியல் கட்டுரையின் இறுதியில் தரப்படும். பெரும்பாலான தமிழ் நாடகங்கள் பார்வையாளர்களைக் கவரும் கலைப் பரிவர்த்தனைச் சாதனமாக அமையத் தவறிவிடுகின்றன. அதாவது பார்வையாளருக்கும் நாடகாசிரியருக்கும் இடையில் நடிப்பின் மூலம் பிணைப்பு ஏற்படத் தவறிவிடுகிறது. சுருங்கக் கூறினால் இறுக்கம், பாத்திரவார்ப்பு, சிக்கனம், கரு போன்ற அடிப்படை நாடகத் தன்மைகள் அவற்றில் இயைந்து காணப்படுவதில்லை. கொழும்பில் நாடகத்துறை வளர்ந்துவந்தாலும் நல்ல நாடகங்களிடை மோசமான நாடகங்களே அதிகம் மேடையேறுகின்றன. இவைபற்றியே நாம் இங்கு ஆராயவேண்டும்.

கொழும்பில் தமிழ் நாடகங்களை மேடையேற்றுவதற்கு முன்வருவோர் பலர் பல்வகைக் காரணங்களுக்காகவே செயலில் இறங்குகிறார்கள். முக்கியமாக அவர்கள் தமது நடிப்புத்திறமைகளுக்கு ஓர் அரங்கம் ஏற்படுத்தவே நாடகங்களை மேடையேற்றுகின்றனர். திரைப்படப்பாணியில் தங்களால் நடிக்கமுடியுமென்றும் அதனைப் பிறர் கண்டு பாராட்டவேண்டுமென்றும் அவர்கள் விரும்புவதுபோல் தெரிகிறது. அதற்காக நாடகம் என்ற பெயரில் எதனையும் மேடையேற்றிவிடலாமென்று அவர்கள் எண்ணுகிறார்கள் போலும். இன்னும் சிலர் நாடகம் என்ற பெயரில் நைந்துபோன நாடகப் பொருட்களையும் வசனங்களையும் பிரயோகிப்பதுடன் அவற்றிற்கு புது மெருகு கொடுக்கவும் தவறிவிடுகிறார்கள். வேறு சிலர் நாடகத்தில் நடித்தால் உள்ளூர்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தமது படங்களில் ஒப்பந்தம் செய்துகொள்வார்கள் என்று நினைக்கின்றனர். இவ்வாறு பல காரணங்கள். இதற்கேற்ப நாடகத் தயாரிப்பாளர்களும் நடிகர்களும் பாமர ரஞ்சகத் தன்மை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் ஆர்வத்தைப் பாராட்டினாலும் அவர்களின் துணிவு மொத்தத்தில் நாடக வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கிறது என்னும் கசப்பான உண்மையையும் நாம் ஒப்புக்கொண்டு தானாகவேண்டும்.

ஒரு நாடகத்தை மேடையேற்றுவது என்றால் அந்த நாடகம் ஒரு நல்ல நாடகத்திற்குரிய அடிப்படை விதிமுறைகளை அனுசரித்து இருத்தல் வேண்டும். அடிப்படை அம்சங்களை இல்லாமல் புத்தி - ரசனைக்கூர்மை நிரம்பிய பார்வையாளர்கள் மத்தியில் மேடையேற்றத் துணிவது அவ்வளவு புத்திசாலித்தனமல்ல. ஆற்றல் இருக்கலாம், திறமையும் இருக்கலாம். ஆனால் அவை நெறிப்படுத்தப்பட்டு ஒரு சில விதிமுறைகளை அனுசரித்திருத்தல் வேண்டும். மேடையில் அனுசரிக்கப்படவேண்டிய சில வரன்முறைகளை மீறும் விதத்தில் கொழும்பில் இடம் பெறும் நாடகங்கள் பல அமைவதால் நாடகங்களைப் போதிய கவனத்துடன் பார்வையாளர் பார்த்து அனுபவிக்க முடிவதில்லை. நாடகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் குறிப்பிட்ட உணர்ச்சியை பார்வை

யாளர்களிடம் உண்டுபண்ணுவதற்குப் பதிலாக வேண்டப்படாத உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கின்றன. நாடகக் கலையில் உண்மையான அக்கறை இருக்குமாயின் நாடகத் தயாரிப்பாளர்கள் நாடகமாட முனைவதற்கு முன்னர் நாடக இயல்புபற்றி தெளிவாகப் புரிந்துகொண்டு அரங்கிற்கு வரவேண்டும். அப்படியல்ல நாங்கள் போடுவதைப் பார்ப்பது உங்கள் கடமை என்று பார்வையாளர்களைத் தயாரிப்பாளர்கள் வற்புறுத்தினால் பார்வையாளர்கள் தமது அபிப்பிராயத்தைத் திட்டவட்டமாகவே தெரிவித்துவிடுவார்கள். நாடகம் பார்க்க அவர்கள் செல்லமாட்டார்கள். இது உற்சாகத்தைத் தரமாட்டாது. நாடகக்கலைஞர்களின் ஆர்வத்தைக் குறைக்கும் வண்ணம் வெறுமனே கண்டிப்பதனால் அவர்களின் ஆக்க முயற்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் அவர்களை உற்சாகப்படுத்தும் முறையில் விமர்சனம் அமையவேண்டும் என்றும் கூறுபவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் கூற்று ஓரளவுக்குத்தான் நியாயமானது. ஏனெனில், நல்ல நாடகங்கள் சில மேடையேறும் அதே வேளையில்தான் அபத்தமான நாடகங்களும் மேடையேறுகின்றன. ஆதலால் காரசாரமான கண்டிப்பான விமர்சனம் தேவையானது.

கொழும்பிலே நாடகக் கலைஞர்கள் காட்சி ஜோடனைகள், ஒலி, ஒளி அமைப்பு, உரையாடல், நடிப்புப் போன்ற அம்சங்களுக்கு அக்கறை காட்டும் அளவிற்கு நாடகப் பொருளில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. சமூகப் பிரக்ஞை இல்லாத உண்மைக்கு விரோதமான நடைமுறைக்கு புறம்பான கரு உடைய நாடகங்களை மேடையேற்றுவதால் பிரயோசனமில்லை. நமது நாடகாசிரியர்கள் எமது நிகழ்காலப் பிரச்சினைகளை விமர்சன நோக்கோடு சித்திரித்தல் வேண்டும். சமூகப் பிரச்சினைகள் பற்பல. ஒரே பிரச்சினையைக் கூட வெவ்வேறு கோணங்களில் நின்று ஆராயலாம். சிக்கலான சமூகச் சூழலில் தனிமனிதனின் முயற்சிகள் பலம் இழந்து நிற்பதையும் தனிமனிதக்கோட்பாடு சமூக கதியில் செயலற்று நிற்பதையும் சித்திரிக்கலாம். சமூக பலமே தனி மனிதனின் வளர்ச்சி எனவும் கோடிட்டுக் காட்டலாம். எமது அன்றாட வாழ்க்கையை எதிர்நோக்கும் இயல்பான மனிதர்களின் ஏற்றத்தாழ்வுகளையும் பாத்திர முரண்பாடு குணநலன்களையும் சித்திரிக்கும் நாடகங்களை நாம் அமைத்துக் கொள்ளலாம். எதுவாக இருந்தாலும் அவை சென்றகாலச் சமூகப் போக்குகளை விமர்சிப்பதாகவும் நிகழ்காலத்தின் போக்கு நலன்களைக் காட்டுவதாகவும் வருங்காலப் போக்கு எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைந்தால் நலம்.

கருத்துப் பரவுதலுக்கு உகந்த சாதனமாக நாடகம் அமைவதனால் சமூகத்தில் உள்ள குறைபாடுகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டவும் அவற்றிற்கான பரிகாரங்களைத் தொட்டுக் காட்டவும் நாடகாசிரியனால் முடிகிறது. இதனாலேயே பார்வையாளராய் வரும் வெகுஜனங்களுக்கும் அவனுக்கும் ஒரு உறவு ஏற்படுகிறது. குறிப்பிட்ட சில பிரச்சினைகளை இனம் கண்டுகொள்ளும் ஆற்றல் நாடகாசிரியனுக்கு இருப்பதனால் அவன் அவற்றிற்கு தனது பிரத்தியேக பார்வை மூலம் உயிரூட்டுகிறான். நாடகத்தை நுகர்பவர்களும் நாடகாசிரியனின் பார்வையில் தாமும் புதிய அனுபவத்தை பெறுகிறார்கள், எனவே நாடகாசிரியன் சமுதாய இயக்கங்களை விஞ்ஞான ரீதியாகக் கணித்தறியும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். சமூகப் போக்குகளில் மேலோட்டமான முழு விபரங்களையும் ஊடுருவி உள்ளியல்பினைக் கண்டறிதல் வேண்டும். எனவே நாடகாசிரியன் உண்மையைத் தேடும் யதார்த்த நெறியினைக் கடைப் பிடித்தல் வேண்டும்.

அண்மைக் காலத்தில் ஒரு சில நாடகங்கள் குறிப்பிடத் தக்க விதத்தில் மேடையேற்றப்பட்டுள்ளன என்பதை நாம் மறுக்காத அதே வேளையில் ஈழத்துப் புனைகதை, கவிதை, விமர்சனம் ஆகிய துறைகளில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியின் அளவிற்கு நாடகம் வளரவில்லை என்பது நாம் அறிந்ததே. இதற்குரிய காரணங்களை நாம் ஆராய்ந்தால் விடைகள் வெளிப்படையாகவே தெரியவருகின்றன. நல்ல சமூக நவீன நாடகங்கள் மேடையேற்றப்படாதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

இத்தகைய நாடகங்கள் தமிழில் எழுதப்படாதது முதலாவது காரணம். மேடையேறுவதற்கு உகந்தவை அல்லாவிட்டாலும் படிப்பதற்குத் தன்னுமாதல் நாடகங்களை எழுதக் கூடியவர்கள் ஒரு சிலரே இருக்கிறார்கள். நாடகம் எழுதும் நுட்பத்தைப் பலர் அறிந்திருக்கவில்லைப்போல் தெரிகிறது. சிறு கதைக்கு என்றொரு வடிவம். நாவலுக்கென்றொரு வடிவம் இருப்பதைப் போல நாடகத்திற்கும் ஒரு வடிவம் இருப்பதை நம்மில் பலர் இனம் கண்டுகொள்ளாதது மற்றொரு காரணம். புனைகதை என்ற துறை அதன் நவீன அர்த்தத்தில் மேல்நாட்டுத் தொடர்பினால் வடிவம் பெற்றதுபோல நாடகம் என்ற துறையும் அதன் நவீனத்திற்கு மேல்நாட்டுத் தொடர்பு கொண்டதாகும். இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை; தமிழில் சுயமாக நல்ல நவீன நாடகங்கள் ஏழுதப்படுவதற்குத் தூண்டுகோலாக மேல்நாட்டு நாடகங்களை நமது நாடகாசிரியர்கள் பயின்று உத்தி முறைகளை அனுசரித்துக்கொள்ளலாம். இதனால் சுயமாக நல்ல நாடகங்களை எழுதும் கைவண்ணம் வரப்பெறலாம். பத்திரிகைகள், நாடகங்களைப் பிரசுரிக்க முன்வருமாயின் எழுத்தாளர்கள் உற்சாகம் பெற்று நல்ல நாடகங்களைப் படைக்கக்கூடியதாக இருக்கும். நல்ல சமூக நவீன நாடகங்கள் உருப்பெறாததற்கு மற்றொரு காரணம், நாடகாசிரியர்களுக்குத் தெளிந்த சமூகப் பார்வை இல்லாதது எனலாம். பிரச்சினைகளைச் சித்திரிக்கும் விஷயத்திலும் அவற்றை அலசும் விஷயத்திலும் அவற்றில் உள்ள முரண்பாடுகளை அணுகும் விதத்திலும் நாடகாசிரியர்கள் விமர்சனக் கண்ணோட்டத்தில் செயற்பட்டு வந்தால் ஓர் ஒழுங்கு, ஓர் இறுக்கம், ஓர் கட்டுப்பாடு நாடகத்தில் தானாகவே வந்து அமைகிறது. எனவே, தெளிவான சிந்தனை ஓட்டமும் கருத்தாழமும் கூற வருவதைக் கலாரீதியாக எடுத்துக் கூறும் ஆற்றலும் எடுத்தாளும் துறையில் நுட்பங்கள் பற்றி அறிந்து இருத்தலும் நாடகாசிரியனுக்கு அவசியமாகின்றன.

நாடகம் என்ற பெயரில் மேடையேற்றப்படும் 'சினிமாடகங்களில்' தென்னிந்தியத் திரைப்படங்களின் செல்வாக்கு நடிப்பில், நட்டுவாங்கத்தில், நாடகப் பொருட்களில் விரவி

நிற்கும் அசட்டு அபிமான உணர்ச்சிகளில்,மிகைப்படுத்திய சம்பவங்களில் எல்லாம் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. சினிமா வேறு, நாடகம் வேறு, என்ற அடிப்படை உணர்வே இல்லாது இவர்கள் சினிமாவை நாடகம் என்ற பெயரில் மேடைக்குக் கொண்டுவர முயல்கிறார்கள்.

நாடகத்தில் பரிவர்த்தனை முக்கியமானதொன்று. நாடகம் பார்ப்பவர்களுக்கும் நாடகம் போடுபவர்களுக்கும் இடையில் உள்ள நீண்ட இடைவெளியும் பார்வையாளர்களுக்குப் பிரச்சினையாக அமைகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் கலை பற்றிய சில கோட்பாடுகளை தெளிவாக்கிக் கொள்ளல் வேண்டும். மக்களின் கலா ரசனை எத்தன்மை உடையதாக இருந்தாலும் பெரும்பாலானவர்கள் களிப்படைவதற்காகவே நாடகத்தைப் பார்க்கச் செல்கிறார்கள். ஆனால் அந்தக் களிப்பு மூலம் அவர்கள் ஒரு சில அனுபவங்களைப் பெற விரும்புகிறார்கள். மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகளையும் தனி மனிதப் பிரச்சினைகளையும் நாடக பாத்திரங்கள் எவ்வாறு அணுகுகிறார்கள்? தம்மால் வெளிப்படுத்த முடியாத ஓர் அனுபவத்தை நாடகக் கலைஞன் எவ்வாறு கலாரூபமாக வெளிப்படுத்துகிறான்? என்பவற்றை அறியவும் அவ் வெளிப்பாடுகளை வியந்து களிப்படையவும் மக்கள் விரும்புகிறார்கள். கலையில் அனுபவமும், எதிர்பார்ப்பும் கலந்தே இருக்கின்றன. கலாரசனை என்பது ஆளுக்கு ஆள் அவரது தளத்திற்கு ஏற்ப வேறுபட்டதே: இருந்த போதிலும் அடிப்படையான சில ரசானுபவங்கள் எல்லோருக்கும் பொதுவானவையே. இதனை மனதில் கொண்டு பார்க்கும்போது ஒரு கலைப்படைப்பு சிறப்பாக அமையவேண்டுமாயின் அது மக்கள் அனைவரையும் கவர வேண்டுமென்பதும் புலப்படும்.

எனவே, கலை என்பது ஒரு சிலர் மட்டும் அனுபவிக்கத் தக்க சிறுபான்மைக் கலையாக இல்லாது மக்கள் கலையாகத் திகழவேண்டும். தவிரவும், நடைமுறையில் ஹைபிறவ், மிடில்பிறவ் லோபிறவ் என்று திட்டவட்டமாகக் கலையைத் தரம் பிரித்துப் பார்ப்பதில் சாத்தியமில்லை. எனவே கலை சாதாரண மக்களுக்கும் புரியும் விதத்தில் அமையவேண்டும். அவ்விதம் அமைவதனால் கலைஞனின் நோக்கம் நிறைவேற்றப்படுவதுடன் சாதாரண ரசிகனின் கலாரசனையை விழுமியதாக விருத்தி பண்ணவும் உதவலாம். ஒரு சிலரே புரிந்துகொள்ளத் தக்க கலை என்று சொல்லப்படுபவை கூட உண்மையும் நேர்மையும் கொண்டவையாக இருந்தால், நடைமுறையில் சாதாரண ரசிகனையும் அவை கவரக்கூடியதாக இருக்கும். செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் பொழுதைக் கழிக்க உதவும் சாதனங்களாக அன்று கலைகள் இருந்தன. அவை போதை மயக்கத்தைத் தரும் கனவுலகப் படைப்புகளாக இருந்து வந்தன. இன்றோ நிலைமை மாறிவிட்டது என்றே கூறவேண்டும். கலை இன்று பொதுமக்கள் அனைவரினதும் சிந்தனையை, அனுபவத்தை, அறிவைப் பாதிக்கும் செல்வாக்குச் சாதனமாக மாறிவிட்டது. எனவே, கலைஞர்கள் சமூகத்தில் பொறுப்புடையவர்களாக மாறிவிட்டார்கள். விழுமிய பயன் உள்ள சமூகப் பணி தான் கலைஞனின் தேவையாக இருப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பரிசோதனையாகவும் நல்ல கருத்துள்ளவையாகவும் நாடகங்களைப் பலரும் மேடையேற்ற முன்வராததற்கு முக்கிய காரணம் பொதுமக்கள் ஆதரவின்மையே. இதற்கு அடிப்படைக் காரணம் தமிழ் மக்கள் புதிதாகச் சிந்திக்க வொண்ணா விதத்தில் ஒரு சில செல்வாக்குமிகுந்த சக்திகள் அவைகள் மீது ஆதிக்கம் செலுத்தி வருவதாகும். காலத்தின் போக்கை உணரத் தவறுபவர்கள் பழமையை மாத்திரம் பேணுபவர்கள், தென்னிந்தியத் திரைப் படங்கள் போன்றவை பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். இலட்சியவாதம் என்றுசொல்லத்தக்க ஒருவித பொற்கால மனோபாவ கற்பனாலயப் போக்கும் நம்மிடையே இருந்துவருகிறது. பழைய தமிழ் நாகரிகத்தின் சிறப்பையும் பெருமையையும் திரும்பத் திரும்பப் பாடி மகிழ்வதில் நாம் திருப்தியடைந்துவிடுகிறோம். இது வளர்ச்சி வழியடைக்கும் கல்.

நவீன உலகப் போக்கிற்கு இணங்க மறுசிந்தனை செலுத்துவதை விடுத்து கலைஞர்களும் எழுத்தாளர்களும் பழைய கலாசாரத்தையே பேணியும் நம்பியும் இருந்துவருகிறார்கள். நாடகம் பார்ப்பவர்கள் சிந்தனையைத் தூண்டும் காத்திரமான நாடகங்களைப் பார்ப்பதைவிட மூன்றாந்தர தென்னிந்திய திரைப்படம் ஒன்றைப் பார்ப்பதையே விரும்புகிறார்கள். யதார்த்த நாடகங்களையும் உண்மை நிலைகளைச் சித்திரிக்கும் நாடகங்களையும் பார்க்கும் தென்பு இன்னும் அவர்களுக்கு ஏற்படவில்லை. இந்த நிலையில் அதிர்ச்சி விளைவுகளையும் உணர்ச்சிநயம் மூலம் உண்மைத் தரிசனங்களையும் காட்டும் நாடகங்களையும் அவர்கள் எப்பொழுது பார்க்கப் போகிறார்கள்? மேடையேற்றும் முறையில் முன்னேற்றமும் நாடக இயல்பு பற்றிய தெளிந்த அறிவும் தமிழ் நாடகத் துறையினருக்கு வேண்டியதாக உள்ளன என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும். நடிப்பும் திரைப்படப்பாணியை ஒதுக்கியதாக பாரம்பரிய நாடக மரபிற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

மொத்தத்தில் உள்ளடக்கத்தையும் சமூகப் பொருத்தமுடைமையையும் கருத்திற்கு எடுத்துக்கொண்டால் கொழும்பில் ஈழத்துத் தமிழ் நாடகத்துறை வளர்ச்சி அடைந்து வருகிறது என்றே நான் கூறுவேன். மேலும் வளர்ச்சி அடைய அடைய பார்வையாளர்களுக்கும் நாடகக் கலைஞர்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி மிகவும் சுருங்கி பரிவர்த்தனை என்பது இலகுவான செயலாக முடியும் என்றே நம்புகின்றேன்.

## சில நல்ல தமிழ் தழுவல் நாடகங்கள்

1. சரித்திர சம்பவம் ஒன்றை எஸ். பொன்னுத்துரை வானொலி நாடகமாக எழுதியிருந்தார். அதனை மேடைக்கு 'சாணக்கியன்' என்ற பெயரில் சானா தழுவியிருந்தார்.

2. ஒஸ்கார் வைல்ட் எழுதிய சலோமியை ஒட்டி லடீஸ் வீரமணி மேடையேற்றினார்.

3. அயனெஸ்கோ எழுதிய 'த போல்ட் சொப்ரானோ' என்ற நாடகத்தைப் படித்த அருட்டுணர்வில் பிறந்தது சுந்தரலிங்கம் அளித்த அபசுரம்.

4. 'தி அன்ரகனிஸ்றஸ்' என்ற அன்ரன் செக்கோவ் எழுதிய சிறு கதையைத் தழுவி முருகையன் படைத்தது இருதுருவங்கள்.

5. 'லேடி விண்டமர்ஸ் ஃபான்' என்ற ஒஸ்கார் வைல்ட்டின் நாடகத்தைத் தழுவியிருந்தார் மேகலா என்ற பெயரில் இ. இரத்தினம்.

6. அன்ரன் செக்கோவ் எழுதிய 'த பெயார்' என்ற பகிடி நாடகத்தைக் காட்டுமிராண்டி என்ற பெயரில் தந்தார்கள் திரு. கந்தையாவும், எஸ். பசுபதிப்பிள்ளையும்.

7. ஜே. எம். சிங் எழுதிய 'றைடர்ஸ் ரூதஸீ' என்பது தமிழில் திரு. கந்தையா, கா. இந்திரபாலா, முஹமது மஹ்ரூப் கைகளில் கடலில் அக்கரை போவோர் என்ற பெயர் பெற்றது.

8. அவளைக் கொன்றவள் நீ, லெஸ்லி ஸேண்ட்ஸ் எழுதிய, 'சம்திங் ரூ ஹைட்' என்ற நாடகத்தின் கதை தழுவல்.

9. எல்மார் ரைஸ் எழுதிய 'தி அடிங்மெஷின்' என்பது பொம்மலாட்டம் எனப் பெயர்பெற்றது.

10. ஸமர்ஸெட் மோம் எழுதிய 'த ஸேக்கிரட் ஃப்ளேம்' என்பது பேசும் நெஞ்சங்களாகியது.

11. ஹென்றிக் இப்ஸனின் 'டோள்ஸ் ஹவுஸ்' தமிழில் பெண்பாவையாகியது யாழ்ப்பாணம்-தேவன் கைகளில். வேர்ணன் அபயசேகரா இதனை நெறிப்படுத்தியிருந்தார்.

12. தயானந்த குணவர்த்தன எழுதிய 'இபிகட்ட' என்ற சிங்கள நாடகம் விமலா சொக்கநாதன் தயாரிப்பில், 'களறிக்கல் கிளாஸ்-திறீ' என்று பெயர் பெற்றது.

13. ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான் என்ற கதை லடீஸ் வீரமணி தயாரித்த நாடகமாகியது.

14. பி. எஸ். ராமையா எழுதிய 'தேரோட்டி மகன்' ஸுஹேர் ஹமீத் நட்டுவாங்கத்தில் மேடையேறியது.

15. நோத் எழுதிய 'டயல் எம் ஃபோர் மேர்டர்', எம். மக்கீன் கைகளில் தமிழாயிற்று.

16. சட்டோபாத்யாயாவின் 'சவப்பெட்டி' 'சாணு'வின் நெறிப்படுத்தலில் மேடையேறியது.

17. 'கர்ணன் போர்', வாலி வதை' ஆகியவை கலாநிதி வித்தியானந்தன் கைகளில் நாடகம் தழுவிய நாட்டுக் கூத்தாகின.

18. 'அரிச்சந்திரா', கிருஷ்ணையின் ஆணை ஆகியவை யாழ்நகரின் முயற்சிகள்- நான் பார்க்க நேர்ந்தது.

19. மாட்டின் விக்கிரகிரமசிங்ஹாவின் ''மாமா'' என்ற சிறு கதையைத் தழுவப்பட்ட நாடகமும் குறிப்பிடத்தக்கது.

20. ஒல்டஸ் ஹக்ஸ்லியின் ''ஜியகொண்டா ஸ்மைல்ஸ்''ஐத் தழுவி மேடையேற்றப்பட்ட ''நினைத்தது நடந்ததா''வும் கவனத்தை ஈர்ந்தது.

---

✲ உருவகக்கதை

# ஆதாரம்

**எம். ஏ. றஹ்மான்**

பழைய பெட்டகம். அதற்குள்ளிருந்த எழுத்தாணிக்கும் சுவடிக்கும் தோது இசையவில்லை. அவற்றிற்கிடையில் ஓயாத வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன.

'நான் மட்டும் எழுத உதவியிருக்காவிட்டால், ஏடு உருவாகியிருக்க மாட்டாது!',

இஃது எழுத்தாணியின் கட்சி.

'பனங்குருத்தின் சார்போலையாக இருந்து நான் முற்றக்கூட இல்லை. என் தியாகத்தின் மறுஜன்மம் ஏடாகச்சிந்தித்தது!'—இது சுவடியின் கட்சி.

இந்த வழக்கைத் தீர்த்து வைக்கக் கறையான் சிந்தையிற் சிரத்தை பூண்டது. தினமும் சுவடியை அரித்துத் துளைக்கும் கருமத்தில் ஈடுபடலாயிற்று.

அவ்வேளையில் தமிழறிஞர் ஒருவர் பெட்டகத்தைத் திறந்து பார்க்க நேர்ந்தது. செல்லரித்து சிதைந்து போகும் நிலையிலிருந்த அவ்வேட்டினை அச்சுவாகனம் ஏற்றத் தீர்மானித்தார்.

தமது உழைப்பினை விளம்பரப்படுத்த, தமது பெயரைப் பதிப்பாசிரியராகப் பொறித்து, அந்நூலினை வெளியிட்டார்.

பனையின் சார்போலையோ, எழுந்தாணியோ நூலுக்கு ஆதாரமில்லை என்பதை வழக்குரைத்தன, உணர்ந்தன!

அறிஞரின் தமிழ்ச் சேவையைப் பாராட்டச்சக தமிழறிஞர்கள் விழாக்கள் எடுத்தார்கள்.

'இந்த நூலினை இயற்றியவனின் புலமை மிக அற்புதமானது. அப்புலவனின் பெயரென்ன?' என இளைய சுவைஞன் கேட்டான்.

நூலாசிரியரின் பெயரை நிறுவுவதில் புதிய வித்துவச் சண்டை ஒன்று விண்டிருக்கின்றது.

# மூன்றுகவிதைகள்

திக்குவல்லை - கமால்

## காறல்

காறல் வந்தது
துப்பப் பார்க்கையில்
எதிரே ஒருவர்...

என்ருே ஒருநாள்
எனக்கும் அவர்க்குமோர்
வாதம் நடந்தது.
அன்று முதலே
என்னுடன் அன்ஞர்
கதைப்பதேயில்லை.

இந்த நிலையில்
அங்குநான் துப்பினுல்...
'தன்னைப் பார்த்தே
இதனைச் செய்தான்'
என்றவர் எண்ணலாம்.
என்ன செய்வேன ?
துப்பவா? இன்றேல்
வாயினுள் காறலை
வைத்திருக்கவா?

அதோ, அவர்
என்னை
ஒரு மாதிரியாய்ப்
பார்க்கும் பார்வை!

வாயினுள் எல்லாம்
காறலும் உமிழும்
சுரந்து நிறைந்தது.
பிறிதென் செய்வேன்,
அப்படியே அதை
விழுங்கிக் கொண்டேன்!

## கீழ்சாதி

பழைய பரம்பரைப் பாதிப்பு
அந்தச்
சிறுர்களிடையும்
செறிந்து கிடந்தது.

அவர்களை நோக்கி:
''உயர்வு தாழ்வு
எம்மிடை இல்லை,
மனித குலத்தில்
யாவரும் ஒன்றே''
என்று பகர்ந்தேன்.

அடுத்நாள் அவ்வூரில்
ஒருபுகை படர்ந்தது:
''அந்த மாஸ்டரும் கீழ்சாதியாம்.''

## தவிப்பு

பெரிய வீட்டுச் சிங்காரிக்குப்
பெண் குழந்தை வேண்டி,
அரிய பெரிய முயற்சிகள்.
ஓலை வீட்டு ஏழைநானே
வரிசையாக
ஒன்பது பெண் குழந்தைகளைப்
பெற்றுப் போட்டு விட்டுப்
பரிதவிக்கின்றேன்.

✱ கட்டுரை

# மூன்று தத்துவ நோக்குகளும் உண்மையும்

மு. பொன்னம்பலம்

நாம் வாழும் உலகையும் பிரபஞ்சத்தையும் விளக்கி அன்றுமுதல் இன்றுவரை பலவிதமான தத்துவக் கோட்பாடுகள் போடப்பட்டு வந்துள்ளன. இவற்றுள் மூன்றுவிதமான தத்துவக் கோட்பாடுகள், தத்தமது நிலைகளுக்கேற்ற பரவலான செல்வாக் கோடு இன்று நிலவுவதை நாம் காண்கிறோம். முதலாவது, பொருள் முதல்வாதத்தை அடிப்படையாகக் கொண்டு கார்ல் மார்ச்ஸ் நிறுவிய கொம்யூனிஸ சித்தாந்தம். இரண்டாவது, அதே பொருள் முதல் சாயலில் ஆனால் பிரபஞ்சத்தைப் பகுப்பு முறையில் ஆராயும் பேட்றண்ட் றஸல்,ஈ.ஜி. மூர், அயர் போன்றோர் நிறுவியுள்ள லொஜிகல் பொஸிட்டிவிஸம், லொஜிகல் அட்டொமிஸம் என்று பலவாறுகக் கூறப்படும் பகுப்பு முறைச் சித்தாந்தம். மூன்றுவது, பரம்பொருளை அடிப்படையாகக் கொண்டு (அல்லது கருத்து முதலை) வேத ரிஷிகளாலும் பின்வந்த ஞானிசளாலும் காட்டப்படுகின்ற வேதாந்த தத்துவம்.

இம்மூன்று தத்துவ நோக்குகளுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் சுவையானவை என்பதல்ல இங்கு முக்கியமான விஷயம். இவற்றுள் எந்தத் தத்துவ நோக்கு எதிர்கால விரிவுகளையும், மனித-பிரபஞ்ச வளர்ச்சியையும் விரிந்து ஏற்றுக்கொள்ளப்போவதாக, ஏற்றுக் கொண்டு அவற்றை ஆற்றுப்படுத்தப் போவதாக இருக்கப்போகிறது என்பதே முக்கியம்.

முதலில் இம்மூன்று தத்துவங்களும் உலகையும் மனிதனையும் பற்றி என்ன விதமான கருத்துக்களைக் கொண்டுள்ளன என்பதை ஆராய்வது முக்கியம். காரணம், அவற்றின் அடிப்படையிலேயே இத்தத்துவங்களின் பாதிப்பையும் வலுவையும் அவை மனித முன்னேற்றத்துக்கு அளிக்கவிருக்கும் பலன்களையும் காணமுடியும்.

ஆகவே முதலில் அவற்றைப் பார்ப்போம். அதற்காசு ஓர் இலகுவான முறையைக் கையாள்வோம். உதாரணத்துக்கு சப்பாத்து என்னும் ஒரு பொருளை எடுத்துக்கொள்வோம். இந்தச் சப்பாத்து என்னும் பொருளை இந்த மூன்று தத்துவங்களும் என்ன நோக்கில் அணுகுகின்றன?

மார்க்ஸீய தத்துவம், இந்தப் பொருளைப் பற்றி விபரிக்கும்போது, உற்பத்திச் சாதனம், மனித உழைப்பு, கூலி, (ஓர் முதலாளித்துவ அமைப்பில்) ஓர் முதலாளியால் சுரண்டப்படும் மேலதிக லாபம் ஆகியவற்றின் கூட்டு மொத்த வெளிப்பாடே இந்தச் சப்பாத்து என்று, அச்சிறிய பொருளுக்கு சமூக, பொருளாதார, அரசியல், சரித்திரம் ஆகியவற்றின் அனைத்து ஓட்டங்களோடும் ஏற்பட்டுள்ள தவிர்க்கமுடியாத பிணைப்பை எடுத்துக்காட்டி அதனை விளக்கும்.

வேதாந்த அடிப்படையில் பார்ப்பதானல், இந்தச் சப்பாத்து என்னும் பொருள், உண்மையில் வேறொன்றின் பிரதிபலிப்பே என்று கூறும். அதாவது உலகம், பிரபஞ்சம் ஆகியவற்றைத் தழுவியும் தாண்டியும் நிற்கும் பேருண்மையின் (பிரம்மத்தின்) தோற்றமே இது என்று விளக்கும்போது அது முன்னைய பார்வையைவிட அப்பொருளை இன்னும் பரந்துபட்ட அடிப்படையில் வைத்து அணுகுகிறது என்றே கூறலாம்.

அடுத்து பேட்றண்ட்றஸல் போன்றோர் கூறும் லொஜிகல் பொஸிட்டி

விஸம் என்னும் பகுப்பாய்வு முறை இதற்குக் காட்டும் விளக்கம் என்ன? சப்பாத்து என்னும் பொருளை நீ எப்படி அறிய வருகிறாய் என்ற கேள்வியுடனேயே அதன் அணுகல் முறை ஆரம்பிக்கிறது. இக்கேள்விக்கு நாம் பதில் அளிக்கும்போது, சப்பாத்து என்னும் பொருளை நாம் எமது கண்களால் பார்க்கிறோம். அதை அணியும்போது எமது கைகளாலும் கால்களாலும் தொட்டு ஸ்பரிசிக்கிறோம் என்று பதில் அளிக்கிறோம். ஆனால் நாம் அளிக்கும் இந்தப் பதிலை பகுப்பாய்வு முறை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. காரணம், சப்பாத்தைப் பற்றிய நமது கூற்று, நாம் நமது புலன்களின் தரவுகளினால் பெறப்பட்ட முடிவாகும். அதாவது 'இதோ ஒரு சப்பாத்தை நான் பார்க்கிறேன்' என்று கூறும்போது, நான் உண்மையில் எனது புலன்கள் தரும் அப்பொருள் பற்றிய பதிப்புகளைப் (தரவுகள்) பார்க்கிறேனேயன்றி சப்பாத்தென்னும் அப்பொருளை அன்று. ஆகவே புலன்கள் தரும் தரவுகளை வைத்துக் கொண்டு அப்பொருள் இன்னதுதான் எனச் சுட்டுவது பேதைமை என்பது அவர்கள் வாதம். ஏனெனில் நமது புலன்கள் பிழைபடக் கூடியவை. ஒருவன் 'சப்பாத்து' என்று நிச்சயிப்பதை, இன்னொரு மஞ்சள் காமாலைக்காரன் சந்தனக்கட்டையென்றோ ஒரு பெரிய மஞ்சள் கட்டையென்றோ வாதாடக்கூடும். அல்லது நான் அப்பொருளைப் பார்க்கும் கோணத்துக்கு எதிர்க்கோணமாயிருப்பவனுக்கு அப்பொருள் ஒருவேளை ஒரு பொம்மைப் பூனைக்குட்டியாகவும் தெரியலாம். இந்த விதத்தில் எமக்கு முன்னே இருந்து உரையாடும் ஒருவரையே, 'எமக்கு முன்னால் அப்படி ஒருவர் இல்லை' என்றும் நிரூபிக்கலாம். ஆகவே பார்த்தல், கேட்டல், ஸ்பரிசித்தல், ஞாபகம் வைத்திருத்தல் ஆகிய புலன்களின் தரவுகளில் வாழும் நமது அறிவு பிழைபடக் கூடியது என்றும், அதனால் ஒருவர் 'நான் சப்பாத்தைப் பார்க்கிறேன்' என்று துணிவாரானால், அது அவரது அனுபவத்துக்கு மட்டுமே சொந்தமானதன்றி எல்லாருக்கும் பொதுவானதாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என்றும் அவர்கள் கூறுவார்கள். சப்பாத்து என்னும் பொருள் எப்படி இவர்கள் பார்வையில் வேறு பொருள்களில் இருந்து தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு ஆராயப்படுகிறதோ, அதேபோல் அதைப்பற்றிய அனுபவமும் அதை அனுபவிப்பவருக்கே சொந்தமானதென்று ஒதுக்கித் தனிப்படுத்தப்படுகிறது. அதனால்தான் இத்தத்துவம் தனது தத்துவப் பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு மொழி அலசலை மையமாகக் கொள்கிறது. 'நான்' சப்பாத்தைப் பார்க்கிறேன்' என்று கூறுவதற்குப் பதிலாக, 'நான் சப்பாத்தைப் போல் தெரியும் ஒன்றைப் பார்க்கிறேன்' என்று கூறும்படி பணித்து புதிய மொழி அலசலில் இறங்குகிறது. மொழி அலசல் ஓரளவுக்கு நமது சிந்தனைத் தெளிவுக்கு உதவுவதாய் இருந்தாலும் எதையும் முற்றாகத் தீர்த்து வைக்க முடியாத ஒன்றாகவே நிற்கிறது.

பொதுவாக வேதாந்தத்தைச் சிலர் 'மாயாவாதம்' என்று கூறுவதுண்டு. ஆனால் விஞ்ஞானப் பார்வையிலேயே அதையும் விடப் பெரிய மாயவாதம் ஒன்று பகுப்பாய்வு முறையில் இயங்குவதை யாரும் காண்பதாய் இல்லை. இதற்காக நான் பகுப்பாய்வு முறையின் பார்வையை பிழை என்று கருதுகிறேன் என்பதல்ல அர்த்தம். பகுப்பாய்வு முறையில் பிழை இருக்கிறதென்றால் அது தன் பார்வையை இன்னும் ஆழமாக்காததனாலேயே எழுகிறது. வேதாந்தத்தோடு ஒப்பிடும்போது இது தெளிவாகும். 'கயிறு சிலவேளை பாம்பாகத் தெரிகிறது'' என்று வேதாந்தம் கூறும்போது பகுப்பாய்வு முறையைப்போல் புலன்களால் பெறப்படும் தரவுகளின் பொய்மையைத்தான் சுட்டுகிறது. ஆனால் அப்படி வேதாந்தம் புலன்களின் போலித்தன்மையைச் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றுக்கெல்லாம் பின்னணியான போலியற்ற ஒன்றையே நினைவுபடுத்தியவண்ணம் இருக்கிறது.

பகுப்பாய்வு முறையோ புலன்களின் தரவுகளை நம்ப வேண்டாம் என்று கூறும் அதே வேளையில் நம்புவதற்கு எதையும் தருவதாய் இல்லை. மாறாக நம்பிக்கையின்மையையே நம்ப வைக்கிறது. அதன் மொழி அலசல் முறையின் முடிவு அதையே நிரூபிக்கிறது.

மார்க்ஸீய தத்துவமோ புலன்களால் பெறப்படும் தனித்தனிப் பொருள்கள் பற்றிய பௌதிக உண்மைகளைச் சந்தேகிப்பதில்லை. மாறாக ஒரு காலகட்டம் பற்றி - அதாவது அக்காலத்தின் அரசியல், பொருளாதாரம், சமூக அமைப்பு, அவற்றின் பெறுமதிகள் பற்றி புலன்கள் தரும் தரவுகளையே, தனது தத்துவ நோக்கின் அடிப்படையில் வைத்து போலி என்று ஒதுக்கிவிடுகிறது. அதாவது பொதுவுடைமை அமைப்பே உண்மையானது என்ற தனது இயக்கவியல் முடிவில் அதை மறைத்து நிற்கும் ஒவ்வொரு காலகட்டமும் பொய்மையே, துரிதமாக அழிக்கப்படவேண்டிய போலியே என்று வாதாடுகிறது அது. இந்த விதத்தில் வேதாந்தமும் மார்க்ஸீயமும் ஒவ்வொரு பொருளையும் பகுப்பாய்வு முறையைப்போல் வெறுமையில் வைத்துத் தனித்தனியே நோக்காமல் ஒரு முழுமையின் பின்னணியில் வைத்து அளக்கின்றன. அந்த முழுமையான பார்வை, அத் தத்துவங்களுக்குரிய ஆழத்துக்கேற்ப, அவை கருதும் ஓர் உண்மையின் அடிப்படையிலேயே நிறுவப்படுகிறது. ஆனால் இவற்றில் எந்தப் பர்வை இனிவரும் முழுமையான புரட்சிக்கும், மனித குலத்தின் பூரண முன்னேற்றத்துக்கும் உதவப்போகின்றது என்பதே கேள்வி. இதை அளப்பது எப்படி?

## 2

வேதாந்தம் ஏன் மாயாவாதம் என்று கூறப்படுகிறது? உலகம் மாயை என்றும் ஆகவே அதைத் துறந்து உண்மையைக் காணுங்கள் என்று அது கூறுவதால் அது மாயாவாதம் என்று கூறப்படுகிறது- அதாவது உலகத்தை 'மாயை' என்று அது ஒதுக்குவதால் அப்படிக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அது மாயை என்று ஒதுக்கச் சொல்வது அல்லது துறக்கச் சொல்வது உலகத்தையன்று. உலகத்தைப் பற்றி எமது புலன்களால் பெறப்படும் போலித் தோற்றத்தையே—புலன்களின் தரவுகளையே அது துறக்கச் சொல்கிறது. அப்படித் துறந்தால் உலகம் என்றைக்குமே 'அது'வாக—அந்த நிரந்தர உண்மைப் பொருளாக இருப்பதை நாம் காணலாம் என்கிறது. அந்த உண்மைப் பொருளின் அடிப்படையிலேயே வாழ்க்கையை ஒழுகப் பணிக்கிறது அது.

இதிலிருந்து நாம் இன்னென்றையும் அறிகிரேம். அதாவது இந்தத் 'துறவுப்' போக்கு எல்லாத் தத்துவங்களிலும் ஒருவிதத்தில் அடியோடி நிற்கிறது என்பதே அது. எந்தத் தத்துவமாய் இருந்தாலும் சரி அவை தத்தமது பார்வைக்கேற்ப, சரியான வற்றைப் பேணி பிழையானவை என்று தாம் கருதுபவற்றைத் துறக்கவே சொல்கின்றன. இந்தத் துறவு காட்டும் ஆழமே அத்தத்துவங்களின் ஆழத்தையும் நிர்ணயிப்பதாய் உள்ளது.

இந்தவிதத்தில் ஆத்மீக தத்துவங்கள் நீங்கலாக, ஏனைய லோகாயத தத்துவங்களுள் மார்க்ஸீயத்திடமே இந்தத் 'துறவை' அழுத்தும் போக்கு அதிகமாக இருக்கிறது என்று சொல்ல வேண்டும். மார்க்ஸீயத்தில் ஊறிய ஓர் உண்மைப் பொதுவுடமை வாதி பொதுவுடமை அமைப்புக்கு எதிராக நிற்கும் மான்ய முறை, மத்தியதர வர்க்கப் பூர்ஜுவா வாழ்க்கை முறை, இவற்றின் மதிப்பீடுகள் யாவற்றையும் துறந்து செயலாற்றுபவனுகவே நிற்கிருன். அவன் காண்கின்ற இலட்சியம் வர்க்கங்கள் நீங்கிய பொதுவுடமை அமைப்பே. அதன் அடிப்படையில் அதற்கெதிரான ஏனையவற்றை அவன் துறக்க வேண்டியவனுய் உள்ளான். வேண்டாத வெளிக்காரணிகளைத் துறக்கமுற்படும்போது அது அகம் சம்பந்தமாகவே முடிகிறது. அகத்தின் பக்குவத்திக்கேற்பத்தான் புறத்துறவு பூரணமடைகிறது. அகத்தைப் பக்குவப் படுத்தவும் துறவை ஆழமாக்கவும் ஒருவன் தத்துவத்தை ஓரளவுக்கு ஊன்று கோலாகப் பயன்படுத்த வேண்டுமேயன்றி முற்றுமுழுதாக அதிலேயே தொங்கி விடக்கூடாது. ஒரு வேதாந்தி 'எல்லாமே தானுய் பரந்து நிற்கும்' அந்த உண்மைப் பொருளைக் காண்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தில் வேதத்தையே தூக்கி எறிந்து விட வேண்டியவனுய் இருக்கிருன். 'நீயே அதுவாய் இருக்கிருய்' என்று சொல்லித் தந்த வேதத்தையே தூக்கியெறியும் அளவுக்குப் பக்குவம் பெற்றது அவனது அகத்துறவு. வேதம் கூட ஈற்றில் அவன் தேடும் உண்மைப் பொருளை மறைக்கும் தடையாக நிற்கக் கூடாது என்கிறது அவனது பக்குவம். மாருக, வேதத்தில் பற்று ஏற்பட்டு நமது அகங்காரம் அதில் குந்திக்கொண்டு ஆட்சி செலுத்தத் தொடங்கிவிட்டால், நமது புரட்சியெல்லாம் உண்மைப் பொருளை மறந்த, வேதத்தைப் பேணும் முயற்சியாகவே குறுகிவிடும். அதனுல் அதைச் சுற்றிய போட்டிகள் பூசல்கள் முனைப்புகள் எழ நாம் இடமளித்து விடுகிரேம்.

மார்க்ஸீய வாதியைப் பொறுத்தளவில் அவன் எதைத் துறந்தாலும் தத்துவத்தைத் துறப்பதென்பது முடியாத காரியம். தத்துவம் அவனுக்கு உயிர்போன்றது என்று கூறுவான். இருந்தாலும் அவன் காண விழையும் இலட்சியமான வர்க்கங்கள் நீங்கிய பொதுவுடமை அமைப்பு அதையும் விட மேலானது. அதாவது தத்துவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் (ஏற்பட்டும் உள்ளன) அது சுட்டும் இலட்சியத்தில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை என்ற ரீதியில் முன்னதைவிடப் பின்னது மேலானதே. ஆனுல் மார்க்ஸீய வாதியிடமுள்ள தத்துவப்பற்று சில வேளை இலட்சியத்தை அடைய விடாமல் செய்துவிடும் ஆபத்தாகவும் மாறிவிடுகிறது. அதாவது தத்துவப் பற்றே இலட்சியப்பற்ருக மாருட்டம் செய்யப்பட்டு, இலட்சியத்தை மறந்த கட்டுப் பெட்டித்தனமும் சுயநல அகங்காரமும் சர்வாதிகாரமும் தத்துவம் என்ற பேரிலே இலட்சியமாக காட்டப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. லெனினும் ட்ரொட்ஸ்கியும் தத்துவத்தைப் பேணும் கட்டுப்பெட்டிகளாய் இருந்திருந்தால் 1917- மார்ச்சில் ஏற்பட்ட புரட்சியுடனேயே திருப்திப்பட்டு, அத்திருப்தி தத்துவத்தின் இலக்கணங்களுக்கும் அமைவதாக நினைத்து, உடனடியாக வெடித்த ஒக்டோபர் பொதுவுடமைப் புரட்சியையே வராமல் தடுத்திருக்கலாம். அதற்கின்னும் காலம் இருக்கிறதென்று தத்துவக் கணக் கண்டுகொண்டிருக்கலாம். அப்படியான கனவில்தான் ஸ்ரலினும் அவரது சகாக்களும் ஆரம்பத்தில் இயங்கினர். ஏன் மாக்சிம் கோர்க்கி கூட லெனின் கொண்டுவந்த ஒக்டோபர் புரட்சியை சோஷலிஸத்தைத் தப்பாகப் புரிந்து கொண்ட ஓர் அனுகிஸ்டின் வேலையாகவே கண்டித்தார். ஆனுல் லெனினும் ட்ரொட்ஸ்கியும் தத்துவத்தின் கட்டுப் பெட்டித்தனத்தைத் துறந்து இலட்சியத்தை வளர்க்கக் கூடியதாய் இருந்ததற்குக் காரணம், தத்துவத்தை விட அவர்களது அகப் பக்குவத்தையே சாரும்.

ஆனுல் மார்க்ஸீய பொருள்முதல்வாதப் பார்வையில் துறவுக்கு இதற்கு மேல் ஆழமாகப் போகும் வாய்ப்பில்லை. காரணம் அதன் புறக்காரணிகளை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்பட்ட பொருள்முதல் வாதச்சிந்தனைப் போக்கே. அதாவது புறக்காட்சி எல்லைக்குட்பட்டதாக இருப்பதால் அதனையொட்டிய துறவும் எல்லைக் குட்பட்டதாகவே இருக்கும் ஆனுல் புறக்காரணிகளால் கட்டுப்படாது, அதே நேரத்தில் அவையாகவும் அவற்றைக் கடந்தும் நிற்கின்ற, அகத்தில் தரிசிக்கப்படும் அந்தப் பேர்ஞானச் சித்தையே வேதாந்தம் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், ஒரு வேதாந்தி அதை அடைவதற்காக தத்துவத்தைத் தாங்கிப் பிடிக்கும் 'நான்' என்ற தன்னையே - தன் மனதையே- துறந்துவிடுகிருன். காரணம் 'நான்' என்று நிற்கும் மனந்தான் புறப்பொருள்பற்றி புலன்கள் தரும் தரவுகளை நம்பி ஏமாறுவது. அதைத் துறந்தபின் அவன் பேர்ஞானத்தின் ஊடகமாக - கருவியாக - தன்னை ஆக்கிக்கொள்கிருன். தன்னை அழித்து பேர்ஞானத்தின் வழிநடத்தலை ஏற்றுக்கொள்கிருன். அதனுல் இந்த வளர்ச்சிக் கட்டத்தில், வேதாந்தியைப் பொறுத்தவரையில் தத்துவம் என்பது வேருய் இல்லை. பேர்ஞானமே தத்துவமாக மாறுகிறது. அப்படிப் பேர்ஞானமே தத்துவமாக இருப்பதால். ஏனைய தத்துவங்களுக்கிருக்கின்ற தேக்கமும் கட்டுப்பெட்டித்தனமும் இதனிடம் இருக்க நியாயமில்லை. தர்ம வளர்ச்சியை நோக்கி எல்லாவித நிகழ்ச்சிகளையும் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளும் 'சத்திய தந்திரத்' தோடு வளரவே செய்கிறது. இந்த இடத்தில்தான் வேதாந்தம் ஓர் மாயா வாதம் என்று அழைக்கப்படும் தவறைச் சுட்டிக்காட்ட விழைகிருன் வேதாந்தி. எவ்வளவு தூரம் ஒருவன் எல்லாவற்றையும் இழக்கச் சித்தமாகிருனே, அவ்வளவு தூரம் அவனுக்குத்தான் எல்லாவற்றையும் ஏற்று' தனக்குரிய வழியில் ஆற்றுப்படுத்தும் உரிமை வருகிறது. ராமகிருஷ்ணர் கூறியதுபோல், ஒவ்வொரு ஏணிப் படியாகக் கடந்து (துறந்து) உச்சிக்கு ஏறியவன், அவ்வளவு ஏணிப்படிகளை

யும் ஏற்றுக்கொண்டு பின்னர் கீழே இறங்குகிறான். இது வேதாந்தம் உலகை ஒதுக்கும் மாயாவாதம் அல்ல என்பதற்கு அவர் காட்டும் விளக்கமாகும்.

சங்கரரே தனது வாழ்க்கையில் கீதைக்கு விளக்கம் தந்து கர்மயோகத்தை அழுத்தியதோடு அதற்கு இலக்கணமாகவும் வாழ்ந்து காட்டியவர். இருந்தும் அவருக்குப் பின் வந்த சமயவாதிகளால் அவரது வேதாந்தம் பற்றிய வியாக்கியானம் தப்பாக, உலகை ஒதுக்கும் மாயாவாதமாகக் காட்டப்பட்டது. ஆனால் உண்மை ஞானிகளின் வருகைக்குப் பின்னர்- முக்கியமாக ராமகிருஷ்ணர் விவேகானந்தர்- வருகைக்குப்பின்னர், அந்தத் தப்பான தோற்றம் தகர்க்கப்பட்டு, உலகு பற்றிய வீணான மனப்பற்றுகள் அறுக்கப்பட்ட, விஞ்ஞான ரீதியான வாழ்க்கை ஆமோதிப்பு அழுத்தப்பட்டது. விவேகானந்தர் காட்டிய இந்த வேதாந்தப் பார்வையிலேயே, சர்வ மதங்களும் ஒன்றென்றும், இத்தகைய சர்வமத சங்கமமே இனிவரும் யுகத்தின் தத்துவமாகவும் வாழ்க்கை ஒழுக்கமாகவும் காட்டப்படவேண்டும் என்றும் அழுத்துவதற்குரிய சூழல்கள் எழுந்தன. இது அரவிந்தரின் பூரணயோகப் பார்வையோடு முழு எழுச்சி கொண்டது. இன்று பூரண சர்வோதயமாகி, புதுயுக நடைமுறைப் பெருந்தத்துவமாகவும் நாட்டப்பட்டுள்ளதும் இதுவே. இதன் வருகை, இன்று, மார்க்ஸீயம் அழுத்தும் புறத்துக்குரிய வர்க்கங்கள் நீங்கிய பொருளாதார சமூகப் பொதுவுடைமைக்கு அதிக வேகம் கொடுப்பதாகவும் அதே நேரத்தில் மார்க்ஸீயத்திடம் இருக்கும் ஆத்மீக வரட்சியை நிரப்பி இரு தளங்களையும் பூரணப்படுத்தும் செயலை முன்னெடுத்துச் செல்வதாயும் அமைந்துள்ளது என்கிறான் வேதாந்தி.

மார்க்ஸீய தத்துவமும் 'நான்' என்னும் சுயநல வட்டத்தை அழித்து 'நாம்' என்னும் வர்க்கங்கள் நீங்கிய விரிவையே கோரி நிற்கிறது என்பான் பொதுவுடைமைவாதி. ஆனால் மார்க்ஸீயம் அழிக்க விரும்பும் 'நானும்' சரி, அடைய விரும்பும் வர்க்கங்கள் நீங்கிய 'நாமும்' சரி மனத்தளங்களுக்குட்பட்டவை. மனத்தளங்கள் எப்பொழுதும் புறக்காரணிகளால் கட்டுப்பட்டவை, புலன்களால் ஏமாற்றப்படுபவை, மாறுபடுபவை. அதனால் மாறுபடக்கூடிய மனத்தளங்கள் எந்தக் கணத்திலும் சுயநலத்தாலும், அதனோடு ஒட்டி வளரும் அகங்காரம், ஆணவம், தன்முனைப்புகள் ஆகியவற்றாலும் பாதிக்கப்படக்கூடிய ஆபத்துடையனவாகவே உள்ளன.

## 3

இனி இந்த மூன்று தத்துவங்களும் உலக வளர்ச்சியிலும் அதன் முன்னேற்றத்திலும் நம்மை எப்படி ஈடுபடும்படி பணிக்கின்றன?

மார்க்ஸீயத்தைப் பொறுத்தவரை, சரித்திர வளர்ச்சி உருவாக்கும் முதலாளி - தொழிலாளி என்ற இந்த இரண்டு வர்க்கத்தின் முதிர்வே பொதுவுடைமை இலட்சியத்தை ஈடேற்ற வாய்ப்பளிக்கிறது என்று கூறுகிறது. அதனால் முதலாளி தொழிலாளி என்ற இந்த வர்க்கப்பாகுபாடு அதற்கு அத்தியாவசியமானது. முதலாளி - தொழிலாளி என்ற இந்த இரண்டு வர்க்கத்திடையே நிலவும் உறவும் பிளவும் பொருளாதார உற்பத்திக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. சரித்திர வளர்ச்சியை நன்குணர்ந்த ஒருவன், தொழிலாளி வர்க்கத்தின் பக்கம் சாய்ந்து, முதலாளி வர்க்கத்தை ஒழித்துக் கட்டுவதிலேயே பொதுவுடைமையை மலர்விக்க வேண்டியவனாகிறான். மார்க்ஸீய சித்தாந்தம் ஒவ்வொரு புத்தி ஜீவியிடமும் இதையே கோரி நிற்கிறது. உலக வளர்ச்சியை இந்த வர்க்க வளர்ச்சியிலேயே காணும்படி பணிக்கிறது.

வேதாந்தியைப் பொறுத்தவரை அவன் எல்லாவற்றையுமே பரம்பொருளின் தோற்றமாகவே காண்கிறான். தன்னுள் தானாக நிற்கும் அதே பரம்பொருளையே அவன் தனது எதிரியிலும் நண்பனிலும் காணவேண்டியவனாகிறான். அதுவே அவனது ஞான இலட்சியம். அப்படியென்றால் நன்மை தீமை என்பவற்றை அவன் பாராட்டப் போவதில்லை என்றோ, நன்மைக்கெதிராக நிற்கும் தீமையை எதிர்த்துப் போராடப் போவதில்லை என்றோ அர்த்தமாகாது. இவனது அர்த்தத்தில் தீமை என்பது அந்தந்தக்கால ஆத்மீக, சமூக, பொருளாதார, சரித்திர, அரசியல் வளர்ச்சிக்கு எதிராக நிற்பதையும் நன்மை என்பது மேற்கூறிய போக்குகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதையுமே சுட்டுகிறது. ஆனால் தீமைக்கெதிராகப் போராடும் ஒரு வேதாந்தி தீமையை உருவாக்கும் ஒருவனில் ஆத்திரத்தையும், நன்மையை விளைவிக்கும் ஒருவனில் மேலோங்கிய அன்பையும் பாராட்டப் போவதில்லை. இரு சாராரையும் ஒத்த சமப் பார்வையிலேயே- ஒரே பின்னணியிலேயே அதாவது எல்லாவற்றையும் இயக்குவிக்கும் அந்தப்பரம் பொருளின் பின்னணியிலேயே வைத்து அணுகுகிறான். அதனால் இவன் ஒரு விஞ்ஞானியைப் போல், எந்த இக்கட்டான நேரத்திலும் எந்தவிதமான தற்திணிப்புகளுக்குள் விழாமலும் அப்படி வீழ்வதால் எதிர் விளையும் மன அவசங்களுக்கும் குழப்பங்களுக்கும் ஆளாகாமலும் இயங்குகிறான். இவனது பார்வையில், தீமைக்காகக் கொடி உயர்த்துவோன் பரம்பொருள் விரும்பும் அக்கால கட்டத் தேவைக்கு எதிராக நிற்கிறான். நன்மைக்காகப் போராடுவோன் பரம்பொருள் விரும்பும் அக்கால கட்டத் தேவைக்கு அனுசரணையாக நிற்கிறான். முன்னவன் அறியாமையின் வயப்பட்டும் பின்னவன் அறிவின் வயப்பட்டும் நிற்கிறான். ஆகவே வேதாந்தியின் பார்வையில் அவன் காணும் வர்க்கங்கள் அறிவும் அறியாமையுமே. சரித்திரத்தின் எந்தக் காலகட்டத்தையும் இவ்விரு போக்குகளின் போட்டியாகவும் இயக்கவியல் வளர்ச்சியாகவுமே அவன் காண்கிறான், அதனால் தீமையின் பக்கம் நிற்பவனை அழிக்கும்போதும் அவனை அன்பின் மேலீட்டாலும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அவனை உயர்த்தவேண்டும் என்னும்பரந்தநோக்குடனுமே அது நடைபெறுகிறது. இங்கே அகமும் புறமும் இணைக்கப்படுகின்றன. புறத்தே அதர்மத்துக்கு நின்றவன் அழிக்கப்படும்போது அவனது அடுத்த கட்ட அக வளர்ச்சியை நோக்கிய அன்பின் மேலீட்டாலேயே- ஒருவித ஸ்நேக முரண்பாட்டு நோக்கிலேயே அதுவும் நடைபெறுகிறது. (உதாரணம், கர்ணனை அழிப்பதற்கு கிருஷ்ணன் உதவியது) இங்கு அகமும் புறமும் இணை

ந்த பூரணப் புரட்சியும் வளர்ச்சியும் நிகழ்கிறது. மாருக, அகத்தைப்பற்றி ஒன்றும் அறியாது, அகத்தையும் புற நிலையிலிருந்து விளக்கும் புறக் காரணிகளின் வரையறுப்பில் இருந்து நடைபெறும் புரட்சியும் போராட்டமும் பூரணத்துவமற்றதாகவே நிற்கிறது. காரணம், அவர்களது அதர்மத்துக்கெதிரான போராட்டமெல்லாம் எதிரியின்மேல் கொண்ட ஆத்திரத்தின் உந்தலாலேயே நடைபெறுகிறது. ஆத்திரம் என்பது, புலன்களின் கூட்டால் அமைந்த, எதிரியைப் பற்றி மனம் கொடுக்கும் தரவுகளிஞல் உந்தப்படுவது. ஆத்திரத்தை ஏற்றுக்கொள்வதால் மனதின் தரவுகளை முடிந்த முடிவாக ஏற்றுக்கொள்கிருேம் என்பதாகிறது. ஆனுல் எதிரியென்று அறிந்தும், அவனில் ஆத்திரம் காட்டாது தன்னில் ஒருவனுகவே அவனில் அன்பு செலுத்தி, அவனது தனிப்பட்ட வளர்ச்சிக்காகவும் அதேவேளை சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் போராடுவது என்பது மனதின் தரவுகளைக் கடந்தபோராட்டமாகும். இது வேவேதாந்தியின் நிலை. இதனுலேயே அவனது புரட்சி பூரணமுடையதாகக் காணப்படுகிறது.

இந்த நிலையிலிருந்து பார்க்கும் போது, பேட்றண்ட் றஸல் போன்ருேரின் பகுப்பாய்வு முறை உலக - சமூக தனிமனித வளர்ச்சிக்காகப் பாடுபட ஒருவனைத் தூண்டிவிடக் கூடிய தன்மையுள்ளது என்று நாம் கூறமுடியுமா? சுருக்கமாகச் சொல்வதானுல் வாழ்க்கையைப் பற்றிய பூரணமான பார்வையோ, உலக முன்னேற்றத்திற்கு வித்திடக் கூடிய செயல் முறையோ அதனிடம் இல்லையென்றே கூறவேண்டும். எல்லாப் பொருட்கள் பற்றியும் புலன்களின் தரவுகளின் அடிப்படையில் நாம் எடுக்கும் முடிவுகளுக்கு எச்சரிக்கை செய்து, அதன் நிவர்த்திக்காக மொழி அலசல் முறையை அத்தத்துவம் பாவிப்பதை ஓரளவுக்குப் பாராட்டினுலும் அதே மொழி அலசல் முறையே அளவு கடந்து அழுத்தப்பட்டு, அதனுல் தனி மனித அனுபவங்கள் மட்டும் ஏற்கப்பட்டு பொதுமை ஒறுக்கப்படும்போது எல்லாவித முன்னேற்றங்களுக்கும் முட்டுக்கட்டை போடுவதாய் அத்தத்துவம் அமைந்துவிடுகிறது. இதனுல்தான் இத்தத்துவம் பற்றி பிரபல விஞ்ஞானியும் இலக்கியக்காரருமான ப்றவுண்ஸ்கி, "புதிய கண்டுபிடிப்புகள் மனித வளர்ச்சி ஆகியவற்றுக்குத் தேவையான அடிப்படை வரலாற்று உண்மைகள், சமூக ஓட்டங்கள் எல்லாவற்றையும் இது சந்தேகத்தோடு பார்ப்பதால், மனித வளர்ச்சியே தடைப்பட்டுப்போகக்கூடிய இரண்டுங் கெட்ட நிலையை இது உருவாக்கிவிடுகிறது" என்று கூறுகிருர். அத்தோடு எல்லாப் பொருட்களையும் தனித்தனியே எடுத்துப் பிரித்தாயும் இத்தத்துவம், பிரிவை இணைப்பதற்கு எதுவித பின்னணியையும் காட்டுவதாய் இல்லை. இதில் விந்தை என்னவென்ருல், உலகசமாதானத்துக்காகவும் உலக அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் பாடுபட்ட பேட்றண்ட் றஸல், இவற்றுக்கெதிரான தத்துவம் ஒன்றைப் போட்டு அதனுலேயே இந்த இலட்சியங்களை ஆரம்பத்திலேயே தோற்கடித்திருக்கிருர் என்பதே. எப்படி நமது உள்ளூரில், மாவிட்டபுரத்துப் பிரச்சனையில் நந்திமாதிரிக் குந்திக்கொண்டு, உரிமைக்காகப் போராடத் தமிழர் கூட்டணியில் நமது கணிதப் பேராசிரியர் அங்கம் வகிக்கிருரோ அதே நிலைதான் பேரறிஞர் பேட்றண்ட் றஸலுடையதும்!

## 4

இம்மூன்று தத்துவங்களில் ஒவ்வொன்றைத் தமது பார்வைக்கு அடிப்படையாக வைத்துக்கொண்டு கலை இலக்கியங்களில் ஈடுபடும் ஒவ்வொரு இலக்கிய கர்த்தாவும் எப்படி இயங்குகிருன்?

பகுப்பாய்வு முறையை இலக்கியத்தில் பயன்படுத்துவோன் தனது பாத்திரங்களை ஸ்கெப்ரிகல்(Sceptical) ஆன தன்மையுடையவர்களாக-அதாவது ஐயுறும் நிலைக்குட்பட்ட பாத்திரங்களாகவே படைத்துவிடுகிருன். அவனது சிருஷ்டிகளும், அதனுல், மேலெழுந்த போக்கில் ஒருவித விஞ்ஞான நோக்கு இருப்பதுபோல் தெரிந்தாலும், உண்மையில் எதுவித முடிவுக்கும் வரமுடியாத இருதலைக் கொள்ளிகளாகவே பெரும்பாலும் அமைந்துவிடுகின்றன. தமது குடும்பத்தின் பழைய சமய ஞானப் பண்பாட்டுச் சூழலாலும் புதிய விஞ்ஞானக் கல்வியாலும் பாதிக்கப்பட்ட பல இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகள் இப்படி வெளிவருவதை நாம் காண்கிருேம்.

மார்க்ஸீய தத்துவத்துக்கேற்ப இலக்கியம் படைக்கும் ஒருவனின் எழுத்துக்களில் சோஷலிஸ யதார்த்தப் பண்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு துறையிலும் வேர் விட்டுக் கிடக்கும் முதலாளித்துவ முற்றுகையைத் தகர்த்தெறிந்து பொதுவுடைமை உலகைச் சிருஷ்டிக்கும் நோக்குடனேயே அவனது எழுத்துக்கள் வெளிவருகின்றன. எவ்வளவுதான் ஆதிக்கமுடையதாக முதலாளித்துவம் பாவனை பண்ணியபோதும், வியட்னுமைச் சூழ்ந்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் எப்படி வெளியேறி ஆகவேண்டுமோ, அப்படியே இந்த முதலாளித்துவ அமைப்பும் உலகை விட்டு ஒருநாளைக்கு ஒதுங்கவேண்டியதுதான் என்ற கணிப்பில், ஒரு மார்க்ஸீய வாதியின் எழுத்துக்கள் எப்போதும் முதலாளித்துவத்தின் நிலையாமையைச் சுட்டுவதாகவே அமைந்திருக்கும். முதலாளித்துவத்தின் நிலையாமையைச் சுட்டும்போது, இவன், புலன்கள் தரும் தரவுகளை அணுகும் விதம் அத்தத்துவத்தின் பொருள்முதல் சிந்தனைப் போக்குக் கேற்பவே அமைகிறது. பகுப்பாய்வு முறைக்காரனைப் போலவோ அல்லது வேதாந்தியைப் போலவோ இவன் புலன்கள் தரும் தரவுகளை ஓரேயடியாக ஒதுக்காமல், அவற்றை ஏற்றுக்கொண்டு, சரித்திர நோக்கின் அடிப்படையில் அவற்றுள் நிலைத்திருக்கக் கூடியது எது? நிலைத்திருக்க முடியாதது எது? என்று பாகுபடுத்துகிருன். அப்படிச் செய்யும்போது நிலைத்திருக்க முடியாதவை எல்லாம் வர்க்கப் பாகுபாடுகள் கொண்ட அமைப்பு ஆகவும் நிலைத்திருக்கப் போவதெல்லாம் பொதுவுடமைப் போக்காகவும் காண்கிருன். ஆனுல் இந்த முடிவுகள் எவ்வளவு தூரம் உண்மையானவை? இவன் காணும் அல்லது காண விழையும் வர்க்கங்கள் நீங்கிய பொதுவுடமை அமைப்பு உண்மையில் நிலைத்திருக்கப்போவது இவன் காட்டும் புறத்துக்குரிய பொருளாதாரக் காரணிகளிலா அல்லது வேறு ஒன்றிலா? இத்தகைய கேள்விகளை மார்க்ஸீய வாதி எழுப்புவதுமில்லை, அங்கீகரிப்பதும் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்திலேயே வேதாந்தி தனது நோக்கை விளக்கிக்கொள்ள முனைகிருன்.

ஒரு வேதாந்தியின் பார்வை எப்படி இலக்கியத்தில் விழுகிறது? இவனது பார்வைப்படி இவனது எழுத்துக்கள் எல்லாம் புலன்களின் தரவுகளினால் தோற்றுவிக்கப்படும் 'உலகின்' நிலையாமையைக் காட்டுவதோடு அவற்றுக்குப் பின்னாலுள்ள - அடிப்படையாய் உள்ள உண்மைப் பொருளை —ஆன்மீக யதார்த்தத்தைக்— காட்டுபவையாகவும் உள்ளன. ஆனால் இவன் கூறும் ஆன்மீக யதார்த்தம் என்பது எங்கே இருக்கிறது? இது வெறும் கற்பனை ஆகாதா? என்று ஒருவன் கேட்கலாம். அதற்கு வேதாந்தி கூறும் பதில் இதுதான். உண்மையில் கற்பனையிலும் கற்பிதம் செய்துகொண்டும் வாழ்பவர்கள் ஆன்மீக உண்மையை அறியாதவர்தான். ஆனால் அதற்காக அந்த உண்மைப் பொருள் இல்லை என்று ஆகிவிடாது. கயிறு கயிறாகவே எப்பவும் இருந்து கொண்டிருக்கிறது. நாம்தான் பாம்பு என்று மயங்குகிறோம். சப்பாத்து எப்பவும் சப்பாத்தாகவே இருக்க நாம்தான் காமாலைக்காரன் போல மஞ்சள் கட்டை என்று மயங்குகிறோம். இருப்பதெல்லாம் 'அது' தான். அந்த உண்மைதான். அதுதான் யதார்த்தம் நாம்தான் இல்லாதவற்றை யெல்லாம் அதில் கற்பிக்கிறோம். வேதாந்த அடிப்படையில் கற்பனா வாதக்காரர் நாங்கள்தான். ஏனெனில் நமது புலன்கள் தரும் கற்பிதத்தையே உண்மையென நம்புபவர்கள் நாங்கள். ஆனால் புலன்களின் கற்பிதத்தைத் துறந்து எங்குமாய் நிற்கும் உண்மையைக் கண்டறிகிறான் வேதாந்தி. அவன்தான் உண்மையான யதார்த்த வாதி. ஆகவே இந்த ஆன்மீக யதார்த்தமே உண்மைப் பொதுவுடைமையையும் மலர்விக்க வல்லது என்கிறான் வேதாந்தி. புறக்காரணிகளால் உந்தப்படும் மார்க்ஸீய பொதுவுடமை நோக்கு மனத்தளங்களுக்குட்பட்டது. ஆகவே மனவிகாரங்களால் அது பாதிக்கப்படுகிறது என்கிறான் அவன்.

இந்த நிலையில், புலன்களின் கற்பிதத்தை ஒதுக்கும் வேதாந்தியின் பார்வை இலக்கியத்தில் விழும்போது அவனது எழுத்துக்கள், மீண்டும் கற்பனையில் சிறகடிக்கும் செயற்கையான செய்யுள்களாகவோ கற்பனைக் கதைகளாகவோ இல்லாமல் மெய்யுள்களாகப் பரிணமிக்க வேண்டிய தவிர்க்க முடியாத தர்க்க நிலையை அடைகின்றன. அதாவது புற உலகத் தோற்றங்களுக்கெல்லாம் காரணமான உண்மைப் பொருளை வெளிக்கொணர்வதாயும் அப்படிக் கொணர்வதன் மூலம் உலகையே, வெறும் தோற்றத்தைப் பிடிக்காது, தனது உண்மை நிலையான மெய்யில் நின்று அல்லது மெய்யுளில் நின்று வாழவைக்க முயல்வதாயும் அமைகிறது. நாம் காணும் புற உலகே வெறும் தோற்றமாகவும், புலன்களின் கற்பிதமாகவும் இருக்கும்போது, கற்பனைக் கதை, செய்யுள் என்று கற்பனைக்குள் இன்னொரு கற்பனையை உருவாக்குவது, இவனது பார்வையின் அடிப்படையில் உண்மையின் நேரடித் தரிசனத்துக்குத் திரை போடுவதாகவே நிற்கிறது. ஆகவே இவன் உண்மையின் நேரடித் தொடர்பை சகலருக்கும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய விதத்தில் சமூகத்துக்கு நன்மை அளிக்கக்கூடிய கோணத்திலிருந்து, தனது வாழ்க்கை அனுபவங்களை எழுதவேண்டியவனாகிறான். இந்நிலையில் அவன் தன்னோடு தொடர்பு கொள்ளும் சகலத்தையும் சகலரையும் பற்றி, அவர்களது நடைமுறைகள் பற்றி வரலாறாகவும் சமூக விஞ்ஞானமாகவும் சுவையான மெய்யுள் இலக்கியங்களாகவும் படைக்கத் தொடங்குகிறான். அப்படியானால் 'சமூக சீர்திருத்த ஏடுகள்' என்று சொல்லிக்கொண்டு பல முக்கியஸ்தர்களின் வாழ்க்கையை அம்பலத்துக்கிழுக்கும் சில மஞ்சள் பத்திரிகைகளும் இதைத்தானே செய்கின்றன? ஏன் சில பெரிய எழுத்தாளர்கள் என்று சொல்லிக்கொள்வோர் கூட, தமக்கு வேண்டாதவரை, புனை பெயரில் மறைந்து கொண்டு ஆயிரம் பட்டங்கள் சூட்டி திட்டும்போதும் இதைத்தானே செய்கிறார்கள் என்று சிலர் கேட்கக்கூடும். ஆனால் இவர்களின் போக்கிலிருந்து மெய்யுள் எழுதுவோன் வேறுபடுகிறான். எதிரியையும் தானாகவே காணும் பக்குவமுடைய அவன், எவரைப்பற்றி எழுதினாலும் அவரையும் அவர் வாழும் சமூகத்தையும் முன்னேற்ற வேண்டும் என்னும் சத்தியதர்மத்துக்கியையவே எழுதுகிறான். இதனால் அதைப்படிக்கும் ஒவ்வொருவர் மனதிலும் கோபமோ குரோதமோ ஏற்படுவதற்குப் பதிலாக அதே சத்தியதர்மப் பக்குவமே இவர்களிலும் தொற்றிக்கொள்ளும் வேகம் ஏற்படுகிறது. இதனால் ஒவ்வொருவரும் தம்மாலியன்றளவு உண்மையாக வாழவேண்டும் என்னும் ஓர் நிலைக்கு உயர்த்தப்படுகின்றனர்.

ஆகவே இந்த மெய்யுள் நிலையில் நின்று பார்க்கும்போது, ஏனைய பார்வையுடைய எழுத்துக்களெல்லாம், அவை எவ்வளவுதான் சோஷலிஸ யதார்த்தமோ, விஞ்ஞானப் பண்புடையனவாகவோ இருந்தாலும் உண்மையின் நேரடித் தரிசனத்துக்துக்குத் தடையாக நிற்கும் கற்பனைகளாகவும் செயற்கையான செய்யுள்களாகவுமே இருக்கும்.

---

ஒரு ஆள் உயரம் கொண்ட நாற்காலியில் அமர்ந்து, ஒரு மேஜை அளவு அகலம் கொண்ட பேரேட்டில், பாதி உடம்பு பேரேட்டில் விழுந்து கிடக்கும்படி அவன் கணக்கு எழுதுவதைப் பார்த்தால், போடா கண்ணு போய் கிட்டிப்புள் விளையாடு போ' என்று சொல்ல வேண்டும்போல் இருக்கும்.

வாழ்வும் வசந்தமும் - சுந்தரராமசாமி

---

✲ மெய்யுள்

# ஒளி படைத்த கண்ணினுய்

முடி. தளையசிங்கம்

கற்பனையில், கனவில், தூக்கத்தில் —
எதிலும் உன்னுல் அதேசமயம்
விழித்திருக்க முடிகிறதா?
அப்படியென்ருல் நீ சத்தியத்தைத்
தரிசிக்கின்ருய். நீ துறவி.
கற்பனையை, கனவை, தூக்கத்தைத் துறந்த துறவி.
பூரண யோகி.
நீயே புதுயுகத்தைச் சிருஷ்டிக்கும் போர்வீரன்!

தூக்கத்திலும் விழித்திருக்கும் உனக்கே,
கற்பனையிலும் நிசத்தைக் காணும் உனக்கே,
எல்லைகள் எதிலுமே இல்லை.
அதனுல் நீயே
வர்க்கங்களைக் களைபவன்
சாதிகளை அழிப்பவன்
குணங்களை வெல்பவன்
தனியுடமைகளை மாற்றுபவன்
நீயே புதுயுகத்தைச் சிருஷ்டிக்கும் போர்வீரன்!

கற்பனையில் நிசத்தையும்
தூக்கத்தில் விழிப்பையும்
தன்னுள் 'அது' வையும்
காணும் நீயே
சகலதிலும் சத்தியத்தை எழுப்பும் பெருமனிதன் ஆவாய்
பொய்யை அழிக்கும் போர்வீரன் நீயே!

நிசத்தில் பொய்யைக் காண்பவன் மனிதன்
நித்திய சத்தியத்தில் பேதங்கள்—
சமயம், அரசியல்,
கலை இலக்கியம், பொருளாதாரம்,
சமூகம், விஞ்ஞானம்,
தத்துவம், சரித்திரம்
அத்தனை பிரிவுகளும் அவனுக்கே.
அவனுக்கே விழிப்பும் கனவும் தூக்கமும் துயரும்
நிசத்தில் கற்பனையும்
வாழ்க்கையில் போலிக் கலையும்
பொதுவுடமையில் தனியுடமையும்
அவன் காணும் அற்பங்கள்.
அந்த மனிதனை மாற்றும் பேர்மனிதன் நீ
உன் போர்ப்பறை கேட்கிறது
உன் அணியில் ''நாம்'' சேர்ந்தேன்
இப்போ என்னில் ''நான்'' இல்லை.

# அபிவிருத்தித்திட்டங்களும் மக்களும்

சு. மகாலிங்கம்

எந்த நிலையிலிருக்கும் மக்களும் தாமிருக்கும் நிலையிலிருந்து உயர்ந்ததான வாழ்க்கைத் தரத்தையடையப் பெரிதும் முயல்கின்றனர். எல்லோருடைய வாழ்க்கை முயற்சியும் இதுதானெனத் துணிந்து கூறிவிடலாம். தற்போது அரசாங்கங்களும் தம் குடிமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த தேசிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துகின்றன. அந்த வகையில் நமது அரசாங்கமும் காலத்திற்குக் காலம் பல அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்துள்ளது. பல பொருளாதார ஆணைக்குழுக்கள் தம் ஆய்வின் பயனான அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன. இங்ஙனம் நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களும் சிபாரிசுகளும் நிறையவிருந்தும் நாடு குறிப்பிடக்கூடிய அளவு அபிவிருத்தியடையத் தவறிவிட்டது. இதற்கான காரணங்கள் என்ன? அக்குறைபாடுகளை எங்ஙனம் நீக்கலாம்? புதிதாக, சென்ற ஆண்டில் வெளியிடப்பட்ட ஐந்தாண்டுத்திட்டத்தில் இக்குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டுள்ளனவா? போன்ற விடயங்களை நாம் இங்கு காண்போம்.

நம்முடைய நாடு பொருளாதாரத்தில் பின் தங்கிய ஒரு நாடு. பெரும்பாலான ஆசிய ஆபிரிக்க நாடுகள் இந்தவகையைச் சார்ந்தவையாகவே உள்ளன. முன்னேறியுள்ள அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது நம்நாடுகளின் நிலை மிக மோசமாகவுள்ளது. கீழே தரப்படும் அட்டவணை இதனைத் தெளிவாக்கும்.

### தேசிய வருமானத்தில் ஒருவரின் பங்கு

| நாடு. | 1963 | 1969 |
|---|---|---|
| | (அமெரிக்க டாலர்களில்) | |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் (U. S. A.) | 2,560 | 3,815 |
| ஐக்கிய இராச்சியம் (U. K) | 1,300 | 1,515 |
| பிரான்சு | 1,270 | 2,105 |
| கனடா | 1,600 | 2,435 |
| யப்பான் | 560 | 1,290 |
| கொலம்பியா | 270 | 260 |
| இலங்கை | 130 | 130 |
| மலேசியா | 225 | 250 |
| இந்தியா | 80 | 75 |

அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் வெகுசிறு பகுதியாகவே நமது வருமானப்பங்கு உள்ளது. நம் நாட்டில் அதிகமான மக்கள் தொகையும், ஆனால் மூலதனம் மிகக்குறைவாகவும் உள்ளது. எவ்வித அபிவிருத்திக்கும் மூலதனம் அவசிய தேவையாகிறது. ஆதலினால் எமது குறைந்த மூலதனத்தையும் கிடைக்கக்கூடிய வெளிநாட்டுதவியையும் பயன்படுத்தி வளர்ச்சியடைய வேண்டும். அத்துடன் வேகமாகப் பெருகிவரும் சனத்தொகைக்கு ஈடு கொடுத்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டியுள்ளது. இதனால் குறைவான மூலதனத்தை. விரயம் செய்யாமல் பயன்படுத்தி சனத்தொகைப் பெருக்க வேகத்திலும் கூடிய விரைவுடன் வளர்ச்சியடைந்தால் தான் நாங்கள் எப்போதாவது ஒரு காலத்தில் முன்னேறிய நாடு

களின் வாழ்க்கைத் தரத்தை எட்டிப்பிடிக்கக் கூடியதாயிருக்கும். மூலதனத்தையும் காலத்தையும் வீணுக்காமல் சிறந்த முறையில் பயன்படுத்தவே கவனமாகத் திட்டமிட்டு அபிவிருத்தி வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதனுலேயே பின்தங்கிய நாடுகளில் திட்டமிடுதல் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. குறுகிய காலத்தில் பெரிய சாதனைகளை நிகழ்த்த ஒருமுகப்படுத்தப்பட்ட கவனத்துடன் அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். இத்தகைய பல ஐந்தாண்டுத்திட்டங்கள் மூலமே சோவியத் ரஷ்யா, சீனுபோன்ற சோசலிச நாடுகள் தம் ஏழ்மை நிலை போக்கி சிறந்த வாழ்க்கைத் தரத்தினை தம்மக்களுக்கு அளித்துள்ளன. நமது அயல் நாடாகிய இந்தியா சுதந்திரமடைந்த பின் இப்போது தனது நான்காவது ஐந்தாட்டுத்திட்டத்தைச் செயற்படுத்திக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராயிருந்த போது முதன்முதலாகத் திட்டமிடல் பிரிவு அமைக்கப்பட்டது. அதன் உதவியுடனும் நாட்டிலுள்ள பல நிபுணர்கள் ஒத்துழைப்புடனும் உருவாக்கப்பட்டதே 'பத்தாண்டுத் திட்டம்' எனப்படுவது. 1959 இல் வெளியிடப்பட்ட இத்திட்டம் ஒரு மெச்சத்தக்க முயற்சி. ஆனுல் அது திட்டமாகவே இருந்து விட்டது; செயற்படுத்தப்படவில்லை. அதற்குப் பின்பும் பல குறுகிய காலத்திட்டங்கள் வெளியிடப்பட்டது. அவையும் திட்டமிடல் பகுதியில் நான்கு சுவர்களுக்குள்ளேயே கிடந்து தூங்கின.

நமது அபிவிருத்தித்திட்டங்களைத் தயாரிக்கும் போது பொருளாதார நிபுணர்கள் வெகு விபரமாக புள்ளிவிபரகணக்குகளுடன், தமது திறமை விளங்க அதனை அமைத்துள்ளனர். பொருளியற் பாகுபாட்டு முறைகளை மிகச் செம்மையாகப் பயன்படுத்தியுள்ளனர் இதுவரை தயாரிக்கப்பட்ட நமது திட்டங்களில் இச்சிறப்புகளெல்லாம் மிகுந்திருந்தன. கருத்து வேறுபாடுகளிருப்பின் அவை அபிவிருத்தியில் விவசாயம், கைத்தொழில் என்பவற்றின் பங்கு, தனிப்பட்ட தொழிற்றுறை, அரசாங்கத்துறை என்பவற்றின் இடம், திட்டத்திற்காகன நிதி சேகரிப்பு என்பன போன்ற பாரிய விடயங்கள் பற்றியே பேசப்பட்டன. சாதாரண மக்களுக்கு இவை புரியவுமில்லை. அவர்களுக்கு எவ்வித பங்கும் அளிக்கப்படவில்லை. மிகுந்த பிரயாசையுடன் தயாரிக்கப்பட்ட திட்டங்களிருந்தும் கடந்த இருபதாண்டு காலத்தில் பொருளாதார வளர்ச்சி சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடு கொடுக்கமுடியாது போய்விட்டது. பெரும்பாலும் எல்லோருக்கும் என்ன செய்ய வேண்டுமென்பது தெரிந்திருந்தது. ஆனுல் வியக்கத்தக்கஅளவு எல்லோரும் எதையும் செய்யத் தவறிவிட்டனர்.

இதுவரையும் நடைமுறையிலிருந்த திட்டமிடல் வேலையை ஆராயின் சில உண்மைகள் தெளிவாகும் பல்வேறு அமைச்சுகளின் வேலைத்திட்டங்களை திட்டமிடல் பகுதியினர் பெற்று, பின்பு அவற்றினை ஒன்றுக்கொன்று ஏற்புடையதாக, முரண்பாடுகளை நீக்கி, நாட்டின் நிதி வசதிக்கேற்றதாக ஒரு இணைந்த பொதுத் திட்டத்தினை உருவாக்கினர். அது ஏற்கப்பட்டவுடன் அதனைச் செயற்படுத்தல் அவ்வப்பகுதிக்குரிய அமைச்சுகளின் பொறுப்பாகியிருந்தது. திட்டமிடல் ஒருவகை கந்தோர் வேலையாக இருந்தது. மேலிருந்து திட்டமிடல் நடைபெற்றது. கீழிருந்து அதாவது சாதாரண மக்களின் தரத்திலிருந்து திட்டமிடுவது நடைபெறவில்லை. சாதாரண மக்களைத் திட்டமிடுவதிலும் அதனைச் செயற்படுத்துவதிலும் தொடர்பு கொள்ளவைக்க முயற்சிகள் நடைபெறவில்லை, தேசிய அபிருத்தித் திட்டம் தம்முடைய திட்டம், ஆதலினுல் அதனை வெற்றி பெற வைப்பது தம் கடமை என்று பொது மக்கள் உணர வேண்டும். எந்தத் திட்டமும் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட அத்தகைய உணர்வும், உற்சாகமும் இன்றியமையாதது.

ஒரு திட்டம் செயற்படுத்தப்படல் அது எவ்வகையில் உருவாக்கப்படுகிறதென்பதில் ஓரளவு தங்கியுள்ளது. திட்டம் தயாரித்தல் தனியே திட்டமிடல் தொழில் வசதி அமைச்சின் வேலையல்ல. அமைச்சரவை நெறிப்படுத்தும் தேசிய நோக்கங்களின் அடிப்படையில் மேலுருவம் ஒன்றினை அமைத்தலே திட்டமிடல் அமைச்சின் வேலையாகும். அதனை இட்டு நிரப்பி முழுமைப்படுத்தல் பிற பகுதிகளின் வேலை. அரசாங்கப்பகுதி தவிர்ந்த பிறவும் அதில் இடம் பெறல் வேண்டும். திட்டத்தைச் செயற்படுத்துபவர்களும், அத்திட்டத்தினுல் பயன் பெறுவோர்களும், இணைந்து உருவாக்கின் அத்திட்டம் வெற்றிபெற வாய்ப்புகள் உண்டு.

புதிதாக இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் முன் எப்போதும் இல்லாதளவு மக்கள் பங்கு கொள்ள வழி செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட அபிவிருத்திக்குழுக்கள் பகுதி அபிவிருத்தி மன்றங்கள்', திட்டங்களை அமைப்பதிலும் செயற்படுத்துவதிலும் கூடிய பகுதியினர் பங்கு கொள்ள வழி செய்யும் சாதனங்களாகவுள்ளன. ''மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மூலமும் பகுதி அபிவிருத்தி மன்றங்கள் மூலமும் திட்டம் உருவாக்கும் பணியும் பன்முகப்படுத்தப்படும். மூலதனச் செலவுப் பொருட்டு விசேட நிதி வகுப்பீடுகள், மாவட்ட அடிப்படையில் ஒழுங்கு செய்யப்படும்''; எனவும், ''பிரதேச பொருட்டான அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதலும், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தலும் இம்மன்றத்தின் கடமைகளுள் சிலவாம். அபிவிருத்தி மன்றப் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதும் திட்டச் செயற்பாட்டினை மீள ஆய்வதும் இதன் கடமைகளாம்.'' எனவும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. ஐந்தாண்டுத்திட்டத்தில் பிறிதோரிடத்தில், ''1971 இன் ஆரம்பக் கட்டத்தில் நிறுவப்பட்ட பகுதி அபிவிருத்தி மன்றங்கள் சிறிது காலமாக இயங்கி வருகின்றன. அபிவிருத்தி முயற்சியில் மக்களைப் பங்குகொள்ளச்

செய்வதிலும் ஈடுபாடு பெறச் செய்வதிலும் இம்மன்றங்கள் பெருந்துணை அளிப்பன என்பது இயங்கிவரும் மன்றங்கள் மூலம் தெளிவாகிறது. நூற்றுக்கணக்கான சிறு கமத்தொழில் கைத்தொழில் திட்டங்கள் இம்மன்றங்களால் உருவாக்கப் பட்டுள்ளன. சில தொழிற்படவும் ஆரம்பித்துள்ளன'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வேலையில்லாப் பிரச்சனையைப்பற்றி ஆராய்ந்த உலக நிபுணர்களைக் கொண்ட டட்லி சீயர்ஸ் குழு தனது அறிக்கையை சென்ற ஆண்டில் வெளியிட்டது. நமது பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பல சிறந்த கருத்துக்கள் அதன் அறிக்கையில் தரப்பட்டுள்ளன. திட்டமிடுதல் வேலையில் மக்களின் பங்கு அதிகமிருக்க வேண்டுமென்பதற்கு அக்குழுவினர் மூன்று காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர். முதலாவதாக, அது திட்டம் எதிர்நோக்க வேண்டியுள்ள தேவைகள், விருப்பங்கள் என்பவற்றைத் திட்டமிடுபவர் அறிந்து கொள்ள உதவுகிறது. இரண்டாவதாக, அது பயன்படுத்தப்படாது மறைந்து கிடக்கும் வாய்ப்புகள் பற்றிய புதிய அறிவையும், புதிய கருத்துக்களையும் வெளிக்கொணரும் சந்தர்ப்பத்தை அதிகரிக்கச்செய்கின்றது. மூன்றாவதாகப் பங்கு கொள்வதின் மூலம் திட்டம் அவர்களுடையதாக மாறுகிறது. ஆதலினால் ஆக்குவதில் பங்குகொண்டவர்கள் அதனைச் செயற்படுத்துவதிலும் தீவிர முயற்சி செய்யலாம். இக்காரணங்களினால் பலதுறைகளிலுமுள்ள மக்கள் திட்டமிடும் வேலைகளில் பங்கு கொள்ள வேண்டும். டட்லி சீயர்ஸ் அறிக்கை குறிப்பிடுவதுபோல் கொழும்பிலுள்ளவர், முதலாளிமார் சம்மேளனத்தினர், தொழிற் சங்கத்தினர், போன்றோர் மாத்திரம் பங்குபற்றினால் போதாது. சிறு கைத்தொழிலாளர், தோட்டத் தொழிலாளர்கள், காணியற்ற உழவர்கள் விவசாயிகள், கூட்டுறவுச் சங்கத்தினர், கிராமவர்த்தகர்கள், ஆசிரியர்கள், வேலையற்றிருக்கும் வாலிபர்கள் போன்ற எல்லோரும் பங்குபற்ற வாய்ப்புக்கள் அளிக்க வேண்டும். இந்த வகையில் தற்போதுள்ளபகுதி அபிவிருத்தி மன்றங்கள் நல்ல பயனளிக்கக்கூடிய ஆரம்பம் என சீயர்ஸ் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவுரையில் 'எங்ஙனமிருந்தபோதிலும், திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தல் மக்களிலேயே தங்கியுள்ளது. அதாவது இலங்கை முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான தனிமனிதர்களின் கூட்டுறவுமுயற்சியில், வயலில் வருந்தி உழைப்போர்கள், வேலைத்தலங்கள், தொழிற்சாலைகளில் உள்ளவர்கள். பாடசாலை பணிமனைகளில் செயல்புரிவோர் ஆகிய எல்லோரும் திட்டத்தின் இலக்குகளையடைய நாளும் பொழுதும் தம்பங்கினைச் செய்யவேண்டும். அடுத்த ஐந்தாண்டுகளிலும் தேசத்தின் சாதனைகளை இத்தகைய கூட்டு முயற்சிகளின் தொகுப்பே உருவாக்கும்'', எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் அழகான வசனங்கள். எமது முன்னைய திட்டங்களிலும் அறிக்கைகளிலும் இத்தகைய வசனங்களுக்குக் குறைவிருக்கவில்லை. இவை எவ்வளவு தூரம் மக்களை நட்பு முறையில் அணுகித் தீவிரமான முறையிற் செயற்படுத்தப்படுகிறதென்பதிலேயே தங்கி உள்ளது. உதாரணமாக, இந்தியாவில் இதுவரை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஒரு ஆய்வின்போது தென்னிந்தியாவிலுள்ள சின்னகோமமேஸ்வரம் என்ற கிராமத்தில் 80 வீதற்திற்கு அதிகமான மக்களுக்கு ஐந்தாண்டுத்திட்டங்கள் அல்லது வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியோ எதுவும் தெரியாது எனக் கண்டு பிடிக்கப்பட்டது. கிராமப் புறங்களில் முன்னேற்றத்திற்கே முக்கிய இடம் கொடுக்கும் திட்டங்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு மேற் செயற்படுத்தப்பட்டும் அம்மக்களின் நிலை அவ்வாறுள்ளது. நம் நாட்டிலும் அத்தகையநிலை எங்காவது ஏற்படாமல் பார்த்தால்தான் நம் திட்டங்களால் பயன்விளைந்ததெனலாம்.

தவிர, முன்பு குறிப்பிட்டதுபோல் பின்தங்கிய நாடுகளில் மக்கள் தொகை அளவுக்கதிகமாகவிருத்தல் இயல்பாகவுள்ளது. அதில் கணிசமான அளவு மக்கள் தொகையினர் தொழிலில்லாதிருக்கின்றனர். ஆகவே இத்தகைய நாடுகளில் உருவாக்கப்படும் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களும் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதை முக்கிய நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். ஆர்வமும் துடிப்பும் கொண்ட இளைஞர்களிடையே வேலையின்மை காணப்படல் மிகுந்த துரதிர்ஷ்ட வசமானது. அதனால் வளர்க்கப்படும் வெறுப்பும் விரக்தியும் பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரக் கூடியது. வேலையின்மைப் பிரச்சினை வேலையில்லாதோரை மாத்திரமன்றி, அவரின் குடும்பத்தினர் சுற்றுடல் போன்றவற்றையும் தாக்கிக் கடுமையான விளைவுகளைக் கொணரக்கூடியது. பொருளுற்பத்தி விரைந்து பெருக வேண்டிய சமயத்தில் 5,50,000 பேர்கள், தொழில் புரியக்கூடியவர்களில் 12 சதவீதமானோர், சோம்பி இருப்பது எவ்வளவு பரிதாபகரமான விடயம். தென்னமரிக்காவிலுள்ள பின்தங்கிய நாடாகிய கொலம்பியா தேசத்தில் விவசாய உற்பத்தி 3.5 சதவீதம் அதிகரித்தபோது அதில் வேலை வாய்ப்பு 1·4 சதவீதமே அதிகரித்தது. பொருளாதாரத்தின் மற்றைய துறைகளில் வளர்ச்சி 5.5 சதவீதம் ஏற்பட்டபோது தொழில் வாய்ப்பு 3.5 சதவீதம் மாத்திரமே ஏற்பட்டது. இத்தகைய வளர்ச்சி நம் நாடுகளுக்குப் பொருத்தமற்றது; தேவையற்றது. உற்பத்திப் பெருக்கத்திற்கு மனித உழைப்பினை அதிகம் பயன்படுத்தாமல் யந்திரங்களைப் பயன்படுத்தியமையாலேயே இங்ஙனம் ஏற்பட்டது. மனிதக் கரங்கள் சோம்பியிருக்க யந்திரங்களைப் பயன்படுத்தும் முறை பின்தங்கிய நாடுகளுக்கு முற்றிலும் பொருத்தமற்றது. ஆதலினால் நம் திட்டங்களில் வேலை வாய்ப்பினைப் பெருக்கி அதன்மூலம் பொருளாதார அபிவிருத்தியை கொணர்வதே இலக்காக இருக்க வேண்டும். இது

காலம்வரையில் எவ்வகையிலேனும் மொத்தத் தேசிய
உற்பத்தியைப் பெருக்குவதே அபிவிருத்திக்கான
வழியென நம்பினர். அப்போது வேலை வாய்ப்பைப்
பெருக்கும் நோக்கம் பின்தள்ளப்பட்டிருந்தது. இனி
யுள்ள அபிவிருத்தித்திட்டங்களில் அது முன்னிடம்
பெற வேண்டியுள்ளது.

நம் நாட்டில் நடத்தப்பட்ட சமூக பொருளா
தாரக்கணிப்பு 1969 – 70 இன்படி 40 சதவீதக்
குடும்பத்தினரின் மாத வருமானம் 200 ரூபாவுக்குக்
குறைவென்றும் மேலும் 40 சதவீதத்தினரின் மாத
வருமானம் 200 ரூபாவுக்கும் 400 ரூபாவுக்கும்
இடைப்பட்டுள்ளதெனவும் தெரிய வந்துள்ளது. ஆத
லினுல் திட்டமிடுதலின் முதல் நோக்கம் வேலைவாய்ப்
பினைப் பெருக்குவதாயிருந்தாலும் அடுத்ததாக அது
வருமான ஏற்றத்தாழ்வுகளைக்குறைத்து சமூக நீதி
வழங்குவதாயிருத்தல் வேண்டும். மேலே தரப்பட்ட
அட்டவணையில் ஐக்கிய அமெரிக்க நாட்டு மக்களின்
சராசரி வருடாந்த வருமானம் 3815 டாலர்கள்
(1969க்குரியது) என்றிருந்தாலும் எவ்வ
ளவு பங்கு மக்களுக்கு அந்தச் சராசரிகணித்தான
வருமானம் கிடைக்கிறதென்பதுதான் முக்கியம்.
சிலருக்குச் சராசரியைப்போல் பன்மடங்கு வருமான
மும் பலருக்குச் சராசரியை விடக் குறைவான வரு
மானமும் கிடைப்பதாகவிருக்கலாம். அத்தகைய
ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும். ஆதலி
னுல் நமது அபிவிருத்தித்திட்டங்களின் விளைவாக
ஏற்படும் வருமானப் பெருக்கம் நாட்டின் பெரும்
பான்மையாகவிருக்கும் ஏழை மக்களின் வருமானத்
தைப் பெருக்குவதாக அமைய வேண்டும். தற்போ
தைய சமூக அமைப்பில் சீரமைப்புச் செய்யும் வகை
யில் அதிகரிக்கும் வருமானம் பகிர்ந்தளிக்கப்பட்டா
லேயே அம்மக்கள் உற்சாகத்துடன் தொடர்ந்து
அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுவார்கள்.

இந்தியாவில் லக்னப் பல்கலைக்கழகம் ஐந்தாண்
டுத் திட்டங்கள் மக்களிடையே ஏற்படுத்திய தாக்
கங்கள் பற்றிய ஆய்வு ஒன்றினை நடாத்தியது. அதில்
பங்குகொண்ட 454 பேரில் 384 பேர்கள் ஐந்தாண்
டுத் திட்டங்களின் விளைவாக நுகர்வுப் பொருட்க
ளின் விலைகள்தான் கூடின என்று கருத்துத் தெரிவித்த
னராம். குறிப்பிடத்தக்கஅளவு தொகையினர் திட்டங்
களின் விளைவாக தேசீய வளம் வீண்விரயஞ் செய்
யப்பட்டதாகவும், அரசியல் விடயங்களில் மக்களைச்
சுரண்டவும் மக்களிடையே தவருன நம்பிக்கையை
வளர்க்கவும் திட்டங்கள் கருவியாகப் பயன்படுத்தப்
பட்டதெனவும் தெரிவித்தனராம். அபிவிருத்தித்திட்
டங்கள் இத்தகைய பாதகமான கருத்துக்களை மக்
களிடையே ஏற்படுத்தியிருப்பின் அவை எங்ஙனம்
வெற்றிகரமாகச் செயற்பட்டிருக்கலாம்? இதனுலேயே
மக்களிடமிருந்து விலகாமல் அவர்களின் பிரச்சினை
களைத் தீர்ப்பதாக திட்டம் அமைய வேண்டும். மக்
கள் சக்தியை இயல்பாகக் பெறக்கூடியதாக அவை
அமைய வேண்டும். மக்கள் சக்தியே நம் செல்வம்;
சரியாகப் பயன்படுத்தப்படாவிடில் அதுவே நம்
சாபக் கே[illegible]கவும் முடியும்.

நம் நாட்டில் பல திட்டங்கள் உருவாக்கப்பட்
டுள்ளன. பல அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன
முன்னேற்றம், அபிவிருத்திபற்றி அரசியல் தலைவர்
களுட்பட பலர் பல வேறு சந்தர்ப்பங்களில் மிக
அதிகமாகவே பேசி விட்டனர். ஆனுல் உருப்படி
யாக செயலில் எதுவும் நடைபெறவில்லை. இதனுல்
மக்களிடையே எல்லாவற்றிலும் ஒரு அவநம்பிக்கை
ஏற்பட்டுவிட்டது. புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில்
மேலே குறித்த குறைபாடுகள் பல இல்லாது, சிறப்
பம்சங்கள் பல இருப்பினும் முன்னைய திட்டங்களைப்
போலவே மக்கள் இதனையும் எங்கே செயற்படுத்தப்
போகிருர்கள் என வளாவிருக்கலாம். இதனுல் மக்
களை அவர்களின் அசட்டை நிலையிலிருந்து, தூக்க
நிலையிலிருந்து விழித்தெழச் செய்ய, ஓரளவு அவர்
கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய, உணர்ச்சியூட்டக்
கூடிய சில நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க
வேண்டும். ஓர் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்த
அத்தகைய நாடகபாணியில் அமைந்த செயல் அவ
சியமே. டட்லி சீயர்ஸ் அறிக்கையில் இது பற்றிக்
குறிப்பிடப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கது.
கொழும்புப் பட்டினத்திலும் அதன் சுற்றுடல்களிலும்
உள்ள தேவைக்கதிகமான பயன்படாத காணிகளை
அரசாங்கம் விரைவாகச் சுவீகரித்து அதனை உப
உணவுப் பொருட்களின் உற்பத்திக்காக வேலையில்
லாதிருப்போருக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். பயன்
படாதிருந்த அந்நிலங்களெல்லாம் அரசாங்கம் சுவீ
கரித்து வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்த
உணவுச் செய்கைக்களித்த காணிகள் என்றெழுதிய
அறிவித்தல் பலகைகள் தெளிவாகத் தெரியக்கூடிய
வகையில் கொழும்பில் பரவலாக அமைக்கப்பட
வேண்டும். அத்தகைய அதிர்ச்சி வைத்தியம் தற்
போதைய நிலைக்கு அவசியமே. மக்களுக்கு செயல்
கள் நடப்பது தெரிய வேண்டும். அதுவே மேலும்
கூடிய செயல்களை அவர்களிடமிருந்து வரவழைக்கும்
சாதனமாகவிளங்கும். திட்டமிடுதலின் எல்லாநிலை
களிலும் இந்த உளவியல் உண்மை உணரப்பட
வேண்டும். இத்தகைய உணர்வோடு தொடர்ந்து
செயற்பட்டாலேயே மக்களின் நம்பிக்கை பலப்
பட்டுச் செயற்படும். ஒன்றிரண்டைமாத்திரம் செய்து
விட்டு பின்பு பழைய சோர்வு நிலைக்கு மீண்டு விட்
டால அதிக பயன் விளையாது.

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது போல் நாம்
விரைவாக முன்னேற வேண்டும். பணக்கார நாடு
கள் மேலும் பணக்கார நாடுகளாக, ஏழை நாடுகள்
மேலும் ஏழ்மையில் மூழ்கும் நிலை இருந்து வருகிறது.
திட்டமிட்ட முன்னேற்றத்தின் மூலமே இந்நிலை
திருந்தலாம். இதில் காலம் முக்கியம். நாம் காலத்
தையும் நேரத்தையும் வீண் விரயஞ் செய்தோ
மாயின் ஈடு செய்ய முடியாத இழப்பினை அடை
வோம். திட்டங்கள் செயற்படுத்துவதற்காகவே தீட்
டப்படுகின்றன. செயற்படுத்தப்படாவிடில் அவற்
றினை உருவாக்குவதில் செலவழிக்கப்பட்ட பொருளி
யல் நிபுணர்களினதும், பிறரதும் ஆற்றல், நேரம்
வீணுனதே. பொருளியல் முறையில் குறிப்பிடப்போ

ஞல் அத்தகைய செயல் ஒரு தவருன முதலீடு (misinvestment) எனக்குறிப்பிடலாம். எனவே எமது நிபுணர்கள் திட்டமிடுவதிலும், அதனைப் பொருளியல் பாகுபாட்டு முறைப்படி திறமையாக அமைப்பதிலும் செலுத்திய கவனத்தில் ஒரு சிறிதாவது அதனைச் செயற்படுத்துவதில் செலுத்திஞல் பயனுடையதாக விருக்கும். அத்தகைய சரியான உணர்வு புதிய ஐந் தாண்டுத் திட்டத்தை ஆக்குவதில் முன்னெப்போதும் இல்லாதவளவு காட்டப் பட்டிருக்கிறதெனலாம். ஆனல் அது போதியதென நிச்சயம் கூற முடியாது. ஒவ்வொரு ஆண்டிற்குமாகச் செயற்படுத்தப்படும் குறுகியகாலத் திட்டத்திலாவது மக்கள் அதிகம் பங்கு கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். மக்களின் திட்டமாக அது அமைந்து அதனைச் செயற்படுத்த அவர்களின் உற்சாகமான ஆதரவு கிடைக்க வேண்டும். அவ்வகையில் அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் அந்தரங்க சுத்தியுடன் முயலின் வெற்றியேற்படும். வெற்றியேற்படின் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய நீண்டகால முயற்சிக்கு நல்ல அடிப்படை அமைத்ததாக முடியும். இதன்மூலம் நாம்பெற்ற அனுபவங்களைக் கொண்டு மேலும் பல ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்து வெற்றிகரமாகச் செயற்படுத்த வாய்ப்பும் ஆற்றலும் ஏற்படும்.


உதவிய வெளியீடுகள்

1. ஐந்தாண்டுத் திட்டம் (1972—1976)
2. Matching Employment Opportunities and Expectations (Dudley Seers' Report — I L O)
3. CAAS — Section F Presidential Address — 1965
4. Yojana — May 31, 1970


---

## உரம்

கு. ப. ராஜகோபாலன்

என் உயிரின் ஊன்றிய வேரடிகளில்
என் உடலையோர் உணர்வுர மென இட்டு,
வாடிய இலைகளில் இரஸாயன மொன்றேற்றி
சோர்வினை யகற்றிச் சுரப்பினைக் கொடுத்தாய்
உரு வேற்றும் ரஸம் ஊர்ந்தேறிச் சென்று,
கிளையும் காம்பும் குமுறவே தூண்டி,
மொட்டையும் மலரச் செய்கின்றது!
நானடைய முடியாத தென வகற்றிய ஆர்வம்
என் கைக் கெட்டிய கனியாகின்றது!

நன்றி – சிறிது வெளிச்சம்

---




''பூரணி'' யினருக்காக, பிரதான வீதியிலுள்ள வஸ்தியன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.